ISSN : 2278-7550
2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550
UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550
UGC RECOGNISED JOURNAL



ஜனவரி – 2020

visit us: www.pallavipathippakam.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330

மலர் : 8 | ஜனவரி-2020 | இதழ் : 1



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339



**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gamil.com

ஆசிரியர் குழு

முனைவர் சி.தியாகராசன்
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

முனைவர் க.இரமேஷ்
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

முனைவர் போ.சத்தியமூர்த்தி
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

முனைவர் கி.சங்கரநாராயணன்
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

முனைவர் உ.அலிபாவா
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

முனைவர் சு.அரங்கநாதன்
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gamil.com

முனைவர் ச.கவிதா
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.S.Priya**
*Government Arts College, Chidambaram,*
rojacreatives@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனைக் குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்,*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் ச.பிரியா**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்,*
rojacreatives@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. முகிலினி புதினம் காட்டும் தொழிலாளர்களின் வாழ்வியல்

***க.யசோதா** - 1

2. நப்பூதனார் உணர்த்தும் தலைவன் தலைவியின் அறங்கள் (முல்லைப்பாட்டு)

***சி.கீர்த்தனா ஸ்ரீ** - 4

3. தலைவன் கூற்றில் அறம் (குறுந்தொகை)

***கோ.மதுமித்ரா** - 8

4. கடையேழு வள்ளல்களும் மனிதநேயச் சிந்தனையும்

***முனைவர் க.பழனிவேல்** - 12

5. இரட்டைக் காப்பியங்களில் அறப்பண்பாடு

***முனைவர் து.சவிதா** - 16

6. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டு பெண் - வீர தமிழச்சி வேலுநாச்சியாரின் பங்கு

***மு.தேன்மொழி** - 19

7. சூழலியல் பெண்ணியம் - ஒரு பார்வை

***லோ.துளசிமணி** - 22

8. ஆனந்தாயி நாவலில் பெண்கள்

***முனைவர் சீ.வைஜெயந்திமாலா** - 26

9. ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் காட்டும் பெண்

***முனைவர் பி.விஜயராணி** - 29

10. செம்பியன் மாதேவி கலைப்பணிகள் - ஓர் பார்வை

***முனைவர் மு.அபிராமி** - 33

11. சங்க இலக்கியம் ஏலாதி வாழ்வியல் நெறிகள் ஒப்பீடு

***முனைவர் வெ.பிரேமசுதா** - 35

12. அரசமரம், துளசித் தீர்த்தத்தில் காணலாகும் அறிவியல் சிந்தனைகள்

***ச.பிரபாகரன்** - 39

13. விந்தன் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள் - ஒரு பார்வை

***கு.விமலாரமணி** - 42

14. பரிமேலழகரின் திருக்குறள் உரை உத்திகள்

***த.ஜான்சிபிரியா** - 44

15. சிவவாக்கியர் பாடல்களில் சமூகச் சிந்தனைகள்

***இரா.ராமலெட்சுமி** - 47

# முகிலினி புதினம் காட்டும் தொழிலாளர்களின் வாழ்வியல்

***க.யசோதா,** எம்.ஏ.,பி.எட்., பகுதி நேர நிறைஞர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் – 641048.

**முன்னுரை:**

இலக்கியங்கள் மனித வாழ்வின் கண்ணாடி. மனித உணர்வுகளைத் தெளிவாக வெளிக்காட்டக்கூடியவை. இலக்கியவகைகளுள் புதினங்கள் நம் அன்றாட வாழ்வோடு தொடர்புடையவை. உண்மை நிகழ்வுகளைப் பற்றிப் பேசுபவை. எதிர்கால சிந்தனைகளைத் தூண்டுபவை. சமகாலப் பிரச்சனைகளை மையக்கருவாகக் கொண்டும் புதினம் எழுதப்படுகிறது. அதற்கேற்ப கோவை மாவட்டத்தின் அறுபது ஆண்டு கால உண்மை வரலாற்றை பேசும் புதினம் முகிலினி. இ.ரா.முருகவேள் என்ற எழுத்தாளரின் முகிலினி புதினம் காட்டும் தொழிலாளர்களின் வாழ்வியலை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வேளாண்மையும் செயற்கைப்பட்டு இழை நூலும்:**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"(திருக்குறள் 1033) என்கிறது திருக்குறள். உலகில் உள்ள தொழில்களில் முதன்மையானது உழவுத்தொழில். உழவர்கள் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும். விவசாயம் என்பது தொழிலும் அல்ல.கலாச்சாரமும் அல்ல. விவசாயம் என்பது நம் வாழ்வியல். " வேளாளன் என்போன் விருந்திருக்க உண்ணாதான்" (திரிகடுகம், பா. 12) என்கிறது திரிகடுகம். விவசாயிகள் உணவையும், மானத்தை மறைக்க உதவும் ஆடையையும் உருவாக்க காரணமானவர்கள். பருத்தியே ஆடைக்கு முதன்மை ஆதாரம். விவசாயிகள் தங்கள் நிலங்களில் பருத்தியை விளைவித்து அதை நூலாக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பினர். விவசாயிகளே முதலாளிகளாக இருந்தனர். ஏற்றுமதி, இறக்குமதி முதலிய வரிச் செலவுகள் இல்லை. விவசாயிகள் முதலாளித்துவமற்ற நிலையில் வாழ்க்கை நடத்தினர். நம் நாட்டுப் பொருளாதாரம் உலகமயமாக்கப்படவில்லை. எனவே நிம்மதியான வாழ்க்கை நடத்தி வந்தனர். பருத்தி ஆடைகள் உடலுக்கு ஏற்றவையாகவும் மக்கள் விரும்பி அணியும் ஆடையாகவும் இருந்தன. எனவே பெரும்பாலான விவசாயிகள் பருத்தியையே உற்பத்தி செய்து விற்றனர்.

> **"கொடுமேழி நசை உழவர்**
>
> **நெடுநுகத்துப் பகல் போல**
>
> **நடுவுநின்ற நல்நெஞ்சினோர் ...**
>
> **கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது"** (பட்டினப். 205-210)

விவசாயிகளின் சிறப்பினைப் பட்டினப்பாலையின் பாடல் அடிகள் கூறுகின்றன. இயற்கைக்கு மாறாக செயற்கை உள்நுழைந்தது. விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. இயற்கை இழையான பருத்திக்கு மாற்றாக செயற்கை இழைப் பஞ்சு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவப்பட்டது. "லாரிகளில் கொச்சித் துறைமுகத்திலிருந்து மரக்கூழால் செய்யப்பட்ட அட்டைகள் வரும். அதுவே பின்பு

செயற்கைப் பஞ்சாகவும் இழையாகவும் மாறி லாரிகளில் வெளியே அனுப்பப்படும். (முகிலினி ப.எண்.110). முதலாளித்துவம் மேலோங்கியது. முதலாளி தொழிலாளி வர்க்கம் உருவானது. அந்நியநாட்டுச் செலாவணி அதிகரித்தது. அதனால் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டனர். இதுபோன்ற தொழிற்சாலைகளில் பெரும்பாலும் பெண்களே பணிபுரிகின்றனர். இதனால் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. பெண்களுக்குக் கருப்பை மற்றும் குழந்தையின்மை தொடர்பான பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

**செயற்கைப்பட்டு இழையும் இயற்கை பாதிப்பும்:**

செயற்கைப்பட்டு இழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு நீர் மிக முக்கிய ஆதாரம். எனவே தான் செயற்கைப்பட்டு இழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பவானி ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான நீர் பவானி ஆற்றில் இருந்து எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. செயற்கைப்பட்டு இழை உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. திடீரென இத்தொழிற்சாலையின் நிர்வாகம் கஸ்தூரிசாமி என்பவரிடமிருந்து கேண்டி என்பவருக்கு மாறியது. கேண்டி நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வர விரும்பினார். இத்தொழிற்சாலை “ தனது பல்ப் உற்பத்தியை அறுபது டன்னிலிருந்து இருநுற்றி ஐம்பது டன்னாக உயர்த்த முடியும்”(முகிலினி ப.எண்.228) என்று தொழிலாளர்களிடையே நடந்த கூட்டத்தில் கூறினார். அதைச் செயல்படுத்த ஆணையிட்டார். அதன் விளைவாக செயற்கைப் பட்டு இழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தன்னுடைய உற்பத்தியைப் பெருக்கத் தொடங்கியது. நாளாக ஆக உற்பத்தி இருநூற்றி ஐம்பது டன்னை நெருங்கிக் கொண்டிருந்தது. கூடவே பிரச்சனையும் தலைதூக்கத் தொடங்கியது. . ”புனைகதை மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைச் சித்தரிக்கின்றது. சமுதாய சம்பிரதாயங்களிலிருந்தும் நெறிகளிலிருந்தும் தனிமனிதன் பிறழ்கின்ற பொழுது புனைகதை தோன்றுகின்றது ( தமிழ் நாவல் இலக்கியம், ப.102)”என்ற கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. தொடக்கத்தில் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு பவானி ஆற்றில் விடப்பட்டது. உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமலேயே ஆற்றில் விடப்பட்டது. எனவே ஆற்றுநீர் மக்கள் பயன்படுத்த இயலாமல் போனது. ஆற்றுநீரை நம்பி இருந்த அனைத்துத் தொழில்களும் முடங்கிப் போனது. இந்தத் தொழிற்சாலையினால் பவானி ஆற்றினைச் சுற்றி இருந்த கிராமங்கள் அனைத்தும் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாயின. செயற்கை இழை தயாரிப்பினால் இயற்கை எவ்வாறு பாதிக்கப்பட்டது என்று எடுத்துரைக்கிறது இப்புதினம்.

**முகிலினி புலப்படுத்தும் தொழிலாளர் வாழ்வியல்:**

முகிலினி புதினத்தில் பஞ்சாலைத் தொழிலும் அது சார்ந்த சிக்கல்களுமே இடம் பெற்றுள்ளன. புதினத்தில் எண்ணற்ற கதாப்பாத்திரங்கள் இடம்பெற்றிருந்தாலும் கஸ்தூரிசாமி, ராஜு, ஆரான் ஆகிய மூவரின் குடும்பங்களைச் சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளது. ”நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டவே கதைப்பின்னல் பாத்திரங்கள் பின்னணி என்று பலவற்றைக் கண்டு அமைத்துக் கொள்கிறார். கதைக்கான கருவை எங்கும் தேடி அலையவேண்டியதில்லை. காதுகளையும் கண்ணையும் திறந்து வைத்துக்கொண்டிருந்தாலே போதுமானது. வாழ்வில் நடக்கும் அத்தனையும் கதைக்கு உரியதாகும் (நாவல் இலக்கியம், ப.53)” என்ற மா.இராமலிங்கத்தின் கூற்று இங்கு சுட்டத்தக்கது. கஸ்தூரிசாமி “புதியது வென்றே தீரும் என்ற தொலைநோக்கு சிந்தனை உடையவர் (முகிலினி, ப.எண்.47 ).” பருத்தி இழைக்கு மாற்றாக செயற்கைப் பட்டு இழைத் தொழிற்சாலையை நிறுவியவர் இவரே. ராஜு என்பவன் இத்தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி. முதலாளியின்

நம்பிக்கைக்கு உரியவன். தொழிற்சாலையின் தொடக்கம் முதல் பணிபுரிந்தவன். தொழிற்சாலையின் சுற்றுச்சுழல் மாசுபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுள் ராஜூவும் ஒருவன். ஆஸ்துமா நோயினால் தாக்கப்பட்டு உயிரை இழந்தவன். இவனுடன் பணிபுரிந்த பல்வேறு தொழிலாளர்களும் இத்தொழிற்சாலையினால் பாதிக்கப்பட்டவர்களே. தொழிற்சாலை தொடங்கிய காலத்தில் வழங்கப்பட்ட சம்பளத்தினாலும் பிற சலுகைகளாலும் தொழிலாளர்கள் ஈர்க்கப்பட்டனர். பின்னர் அந்த ஈர்ப்பு உடல் உபாதைகளுக்கு இத்தொழிற்சாலை தான் காரணம் எனும்போது அது வெறுப்பாக மாறியது. தொழிலாளர்களே தொழிற்சாலையை எதிர்த்துப் போராடினர். போராட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஆரான் ராஜூவின் நண்பன். வசந்தா மில்லில் வேலை செய்தவன். பட்டாளிக் கட்சிக்காக உழைத்தவன். தொழிலாளர் நலனுக்காகப் போராட்டம் நடத்தியவன். இறுதியில் தன்னுடைய ஒரு வேளை உணவுத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவே போராட வேண்டி இருந்தது. முதலாளித்துவம் வளர்ந்து ஓங்கியது.

**முடிவுரை:**

மனித சமுதாயத்திற்கென்றே படைக்கப்படுபவன இலக்கியங்கள். சமகால வாழ்வியல் சிக்கல்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்படுபவன இக்கால இலக்கியங்கள். இக்கால இலக்கியங்களுள் பல்வேறு வகையான வாழ்வியல் சிக்கல்களையும் சமூகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் காணப்படுகின்ற பிரச்சனைகளையும் தெற்றெனக் காட்டுவன புதின இலக்கியமே. அதிகாரம், ஆளுமைத்திறன் இவற்றினால் உண்மைகள் மறைக்கப்பட்டாலும் படைப்பாளர்கள் அவ்வுண்மைகளைத் தம் படைப்பில் காட்டத் தவறுவதில்லை. அந்த வகையில் உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது முகிலினி புதினம். செயற்கைப்பட்டு இழை உற்பத்தியால் ஏற்பட்ட பாதிப்புகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். இயற்கை பாதிப்புகளைக் கண்ட மக்கள் கிளர்ந்து எழுந்து போராடத் தொடங்கினர். அந்த தொழிலாளர்களின் போராட்டத்தின் பயனாக சமுதாயத்திற்குத் தீங்கு விளைவித்த அந்தத் தொழிற்சாலையும் மூடப்பட்டது. மெல்ல மெல்ல இயற்கை பாதிப்புகள் குறைந்து மக்களின் இயல்பு வாழ்க்கை தொடங்கியது. இதைப் போலவே பல்வேறு இயற்கை பாதிப்புகள் ஏற்படுத்தவல்ல கண்ணுக்குத் தெரியாத ஆயிரம் ஆயிரம் பிரச்சனைகளுள் செயற்கைப் பட்டு இழை பிரச்சனையும் ஒன்றே.

# நப்பூதனார் உணர்த்தும் தலைவன் தலைவியின் அறங்கள் (முல்லைப்பாட்டு)

***சி.கீர்த்தனா ஸ்ரீ,** இளங்கலைத் தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை-14, srikeerthana848@gmail.com, +91 9047596226.

**முன்னுரை:**

சங்கத் தமிழ் இலக்கியங்கள் காலத்தாலும் அவற்றின் பொருள் அமைப்பாலும் மிகப்பழமையானவையும்,சிறப்புவாய்ந்தவையுமாகும். சங்க கால மக்களின் பண்பாடும் கலாச்சாரமும் மிகச்சிறப்பு வாய்ந்தவை என்பதற்கு சங்க இலக்கியங்களே மிகச் சிறந்த சான்றாகும்.

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு,**

**முன்தோன்றிய மூத்தகுடி"**

என சிறப்பிக்கப்பட்டதும், சிறப்பிக்கப்படுவதும் தமிழ்க்குடியே.

இயல்பான வாழ்க்கை முறையினை தமிழர்கள் மிக அழகாக அகம்-புறம் என இரு பெரும்பிரிவாக பிரித்து அதற்கு இலக்கணம் வகுத்து அதன்படி வாழ்ந்து வந்துள்ளனர் என்று கூறுவது மிகையாகாது ஏனெனில் அவ்விலக்கணத்திற்கே இலக்கணமாக திகழ்ந்துள்ளனர் நம் மூத்தக்குடியினர். சங்க இலக்கியங்கள் பொது அறங்களாக நமக்கு பலவற்றை எடுத்தியம்புகின்றன எடுத்துக்காட்டாக அகவொழுக்கத்தில் தலைவனின் அறம், தலைவியின் அறம் போன்றவற்றை கூறலாம்.

**அறம்:**

அறம் என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து கூறுகின்றனர். இதனை வள்ளுவர் அறம் என்பது மனதின் மாசுக்களை(பேராசை, பொறாமை, வெகுளி. கடுஞ்சொல்) போக்க முயல்வது என்று

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற"**

என்ற குறளடி மூலம் எடுத்துக்கூறுகினறார்.

கையறம், கருமம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோரியல்பினொன்று அறம்(கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி செம்பதிப்பு)

அறம் என்பது மனிதவாழ்வின் ஒரு முக்கியமான விழுமியமாக திகழ்கின்றது. மனிதன் தன் வாழ்க்கையை எவ்வாறு நல்வழியில் செம்மையாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை பற்றி கூறுவதே அறமாகும்.

அக இலக்கியத்தில் முதன்மையான அறங்களாக தலைவன், தலைவி, தோழியின் அறங்களைக் கூறலாம்.

தலைவனானவன் தன் அறமாக பொருள் ஈட்டுதலையும், தலைவியானவள் தன் அறமாக தலைவன் வினையின் காரணமாக தன்னை பிரிந்த சென்ற காலத்திலும் அவனையே எண்ணி வருந்துதலையும் முதன்மையானஅறமாக கொண்டுருந்திருக்கின்றன, இதனை முல்லைப் பாட்டில் ஆசிரியர் அழகாக கூறுகிறார்.

**தலைவியின் அறம்:**

தலைவனானவன் பாசறைக்கண் சென்றிருக்கிறான் அவனது பிரிவினை ஆற்றாதவளாகிறாள் தலைவி. அப்பொழுது அங்கு வந்த ஆயர் பெண்கள் அங்கு கயிற்றால் கட்டப்பட்டு அங்குமிங்குமாக வருந்தி திரிந்துகொண்டிருந்த இளம் கன்றுகளைப் பார்த்து, "கோவலர்கள் கொடிய கோலால் பின்னின்று செலுத்த, இப்பொழுது வருவார்கள் உங்களுடைய தாய்மார்கள்" என்கின்றனர். இதைக் கேட்ட பெண்(தோழி) ஒருத்திதலைவியிடம் கூறகிறாள் "தலைவி நீ கேட்டாயா அந்த பெண்கள் கூறிய நல்ல சொற்களை, நீ கவலைப்படாதே நம் தலைவர் பாசறைக்கண் பகைவர்களை வென்று அவர்களது நிலத்தைக் கவர்ந்து கொண்டும், அவர்களிடம் திரைப்பொருட்களைப் பெற்றுவிட்டும் இக்கார்காலத்தில் விரைவில் போர்த்தொழிலை முடித்துவிட்டு வந்துவிடுவார்"என்றுஆறுதல் வார்த்தைகளைக் கூறியும்,கருமைநிற மேனியை உடைய தலைவியானவள் ஆறுதல் அடையவில்லை மீண்டும் தன் தலைவனின் நிலையை எண்ணி தன் பூப்போன்ற மைதீட்டியக் கண்களிலிருந்து முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகளைக் கொட்டிக் கொண்டேயிருக்கிறாள் என்று

> **"நீ நின் பருவரல் எவ்வம் களை மாயோய், என**
> **காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து**
> **பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்ப"**

மிக அழகாக கூறப்படுகிறது.

சங்க காலத்தில் பெண்கள் அனைவரும் "ஒருவனுக்கு ஒருத்தி"என்ற நிலையையே கடைப்பிடித்துள்ளனர். மேலும் தன் தலைவனைத் தவிர வேறொரு ஆடவனைத் தன் மனத்தாலும் கூட எண்ண மறுத்துள்ளனர். தலைவன் இறந்துபட்ட பொழுது கூட தலைவியானவள் தன் இன்பங்களை முற்றிலும் துறந்தவளாய் கையறு நிலையையே மேற்கொண்டிருந்திருக்கிறாள். இதற்கு சான்றாக பல சங்க இலக்கியப் பாடல்கள் விளங்குகின்றன. இவை சங்க இலக்கியங்களுக்கே உள்ள தனிச்சிறப்பு.

மேலும் பறவைகளையும், விலங்குகளையும் ஃஉதாரணமாகக் கொண்டு மனிதனின் வாழ்வியலை ஒப்பிட்டுக்கூறுவது சங்க இலக்கியங்களின் ஆளுமையை உயர்த்திக்காட்டுகிறது. மேற்கண்ட பாடலில் கூட ஆசிரியர் தலைவன் தலைவியின் பிரிவை,"கன்று தாய்பசுவைப் பிரிந்து வருந்துவதுபோல தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள்" என்பதை அழகாக நமக்கு உணர்த்துகிறார். தலைவியானவள் தன் தலைவன் போரில் வெற்றி பெற்ற செய்தியைக் கூட கேளாதவளாய், அவனைக் காணாதவளானத் தலைவி துன்புற்று, தலைவனுடன் சென்ற தன் இதயத்தை ஆறுதல்படுத்த. காலநேரம் அறியாதவளாய் இரவும் பகலும் உணராதவளாய் தன் தலைவனையே முற்பொழுதும் எண்ணி தனிமையில் வாடுகிறாள். தலைவனை எண்ணிப் பசலை நோய் அவளைப் பற்ற தன் கைகளிலிருந்து வழுக்கி ஓடும் தன் வளையல்களை ஓடாமல் நிறுத்தியும், பெருமூச்சுவிட்டும் "அம்பினால் குத்தப்பட்ட மயிலைப்போல்" நடுங்கி, ஏழு அடுக்குகளையுடைய சிறப்புப்பெற்ற மாளிகையில் அணிகலன்கள் நெகிழ்ந்து ஆழ்ந்த துன்பத்தில் ஆட்பட்டிருக்கிறாள் தலைவி என்று

> **"நீடு நினைந்து. தேற்றியும், ஓடு வளை திருத்தியும்,**
> **மையல் கொண்டும்,ஓய்யெனஉயிர்த்தம்,**
> **ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து"**

அழகாக ஆழாமான கருத்தினை ஆசிரியர் மிக நுண்ணிப்பாக கூறியுள்ளார்.

சங்க காலத்தில் தலைவியானவள் தலைவனின் வெற்றியைப் பெரிதும் விரும்பவில்லை, அவள் தலைவனில்லாத காலத்தில் தன்னை ஒப்பனைசெய்து கொள்ள விரும்பவில்லை, அவள் பெரியதாக கருதியது எல்லாம் தலைவனது இன்னுயிரை மட்டும்தான். சங்க பெண்கள் தன் உடல். பொருள், ஆவி அனைத்தையும் முற்றிலுமாக தன் தலைவனுக்காகவே

அர்ப்பணித்து தன் அறத்தை அனைவருக்கும் வெளிப்படுத்தி மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக திகழ்ந்துள்ளனர்.

**தலைவனின் அறம்:**

இரவு-பகல், இன்பம்-துன்பம் போல மனிதர்களின் வாழ்வும் பல்வேறு சூழ்நிலைகளை கொண்ட ஒரு தொகுப்பு. சில காலம் நமக்கு இன்பத்தையே தருவதாக வாழ்க்கை நிலை இருந்தாலும், பல சூழலில் அது நமக்குத் துன்பத்தையும் சேர்த்து அளிக்கிறது. அது போல தலைவனும் தலைவியும் சிலகாலம் சேர்ந்து மகிழ்ந்திருந்தாலும் தலைவன் தன் அறத்தை நிலைநாட்ட சில காலங்கள் தலைவியானவளைப் பிரிந்து இருக்கவேண்டிய சூழல்களும், சூழ்நிலைகளும் சங்க இலக்கியத்தில் தெள்ளத்தெளிவாக கூறப்பட்டள்ளது.

தலைவனின் அறமாக "பொருளீட்டுதல்" முதன்மையாக கூறப்படுகிறது. தனது இல்வாழ்க்கையை மகிழ்ச்சியாக தொடர தலைவனுக்கு பொருள் தேடுதல் மிக அவசியமாக இருந்துள்ளது. இதனை தொல்காப்பியர்

**"வினையே ஆடவர்க்கு உயிர்"**

என்று தனது நூற்பாவில் கறிப்பிட்டுள்ளார்.

முல்லைப்பாடலில் தலைவனானவன் போர்தொழிலுக்காக பாசறைக்கண் சென்றுள்ளான். தலைவன் தலைவியை எண்ணாத நிலை பாசறைக்கண் மட்டுமே நிகழும், அப்படிப்பட்ட நிலையில் தலைவனின் கவனம் முழுவதும் எப்படிப் பகைவர்களை போரில் வெல்வது, நம் நாட்டைக் காப்பது என்பதில் மட்டும்தான் இருக்கிறது. அந்த இடத்தில் தலைவனின் மனமும், செயலும் ஒன்றுபடாவிட்டால் அவனால் வெற்றிக்கனியை சுவைக்க இயலாது போய்விடும் எனவே அவ்விடத்தில் தலைவனானவன் தலைவியைப் பற்றியே நினைவே ஏற்படா வண்ணம் தனது செயல்களை வகுத்துக் கொள்கிறான்.

ஆண்யானையானது எப்படி தனது பெண்யானையை மறந்து போரில் ஈடுபட்டு தனது தும்பிக்கை வெட்டுப்பட்ட நிலையில் கூட தனது கவனத்தை சிதறவிடாமல், காயத்தை பொருள்படுத்தாது வெற்றியைஎண்ணிப் போரிடுகிறதோ அதுபோல் தலைவனானவன் தன் இன்னுயிரைக்கூடப் பொருட்படுத்தாது வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் நிலை

**"எடுத்துஎறி எ.்.கம் பாய்தலின் புண் கூர்ந்து**
**பிடிக் கணம் மறந்த வேழம் வேழத்துப்**
**பாம்பு பதைப்பன்ன பரூஉக் கை துமிய"**

அவனது அறத்தை நமக்கு அழகாக வரையறுத்துக்காட்டுகிறது

இதைப்போன்ற உள்ளுரையை கையாண்டு பொருளை விளங்கவைப்பதில் ஆசிரியரின் புலமையும், திறமையும் பாராட்டுதற்குரியது.

**பொதுவான அறங்கள்:**

அறம் செய்வதை அரணாகக் கருதினர் பழந்தமிழர்கள். தாங்கள் செய்யும் அறங்கள் தங்களால் செய்யப்பட்ட பாவங்களிலிருந்து தங்களை காப்பாற்றும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். தங்களினும் கீழான ஐந்தறிவு கொண்ட உயிரினங்களுக்குக் கூட நன்மை பாராட்டியுள்ளனர்.

முல்லைப் பாட்டில் யானையானது கரும்பு, அதிமதுரம், நெற்கதிர் போன்றவற்றைச் சேர்த்து கொடுத்தும், அது உண்ண மறுத்து தன் தும்பிக்கையால் தனது நெற்றியை தடவிக்கொண்டிருக்க அதைக் கண்ட யானைப் பாகன் பிளவுபட்ட கூர்மையான கருவியை வைத்து அதை உண்ண பணிக்கிறான்.

**"ஓங்கு நிலைக் கரும்பொடு, கதிர் மிடைந்து யாத்த,**
**வயல் விளை, இன்குளகு உண்ணாது, நுதல் துடைத்து,**
**ஆயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென"**

பழந்தமிழர் பண்பு இதிலிருந்து நமக்கு புலனாகிறது. அவனது விருந்தோம்பலின் சிறப்பு நமக்கு தெளிவுற தெள்ளத்தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

இவைமட்டும் அல்லாது பண்டைகால மக்கள் மிகபெரிய அறமாக செய்நன்றிமறவாமையை கருதியுள்ளனர்,

முல்லைப்பாட்டில் தலைவனானவன் போரில் தன் படைவீரர்கள் பலபேர் மாண்டுகிடக்க அதைக் கண்டு மனம்வருந்து "செஞ்சோற்றுக் கடன் தீர்க்க இவ்வீரர்கள் தங்களது இன்னுயிரைக் கூட பொருட்படுத்தாது போர்களத்தில் இறந்துகிடக்கும் நிலையானது மிகவும் வருத்தத்தைதருகிறது, இதற்காகவே இப்போரில் வெற்றியை அடைவேண்டும்" என்று தன் மனதில் போர்களத்தின் காட்சிகளைக் கண்டு எண்ணிக்கொண்டிருக்கிறான்.

**"தேம்பாய்க் கண்ணி நல் வலம் திருத்தி**
**சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும், தோல்துமிபு**
**ஐவந்நுனைப் பகழி மூழ்கலின் செவி சாய்த்து"**

மேற்கண்ட இச்செய்தியின் மூலம் தமிழரின் தமிழ்மண்ணின் ஒப்பற்ற பண்பானது நன்கு புலப்படுகிறது.

**முடிவுரை:**

நீண்ட காலமாக வழக்கில் இருந்த நிகழ்வுகள் நம்பிக்கையாயின. அதன் மூலம் பொதுவான அறங்கள் உணர்த்தப்படுகின்றன. ஒருவரோடு ஒருவர் விட்டுக்கொடுத்து, புரிந்துகொள்ளுதல் என்னும் நிலையில் சமூக நல்லிணக்கம் பற்றிய கருத்துக்கள் முல்லைபாட்டின் மூலம் தெள்ளத்தெளிர உணரப்படுகின்றன.

# தலைவன் கூற்றில் அறம் (குறுந்தொகை)

***கோ.மதுமித்ரா,** இளங்கலை மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியம், பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை-14, mithramathu6377@gmail.com, +91 9655254314.

**முன்னுரை:**

உலகியல் சார்ந்த அறமெனப்படுவது தனிமனிதனின் ஒழுகலாறுகளைப் பற்றியதாகும். அறமானது இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப மாறும் தன்மையுடைய சமூதாயம் சார்ந்த பண்பாட்டுக்கூறு எனலாம்.

**"அறவெழுங்கே ஊரை ஆளும்"**

அறம் என்பது மனிதனின் ஒழுக்கம், நடத்தை, செயல், எண்ணம் முதலியவற்றை உள்ளடக்கியது ஆகும். "ஒழுக்கமுடையோர் உயர்வுடையோர்" எனவும் "ஊரையே ஆளும் உரிமையுடையோர்" என அறியமுடிகிறது. அவ்வாறெனில் சங்க கால மக்கள் தனக்கென சில அறத்தினை வகுத்துக்கொண்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் நல்வாழ்வு நடத்தியதை காண முடிகிறது. தனிமனிதன் தன் வாழ்வில் பின்பற்றி வந்த நல்ல செயல்களே அறமென்றனர். புலவோர் காலதள்தின் தேவைக்கேற்ப மக்களின் ஒழுக்கம் நெறிகள் நடத்தைகள் அறக்கருத்தினைக் கொண்டு அறத்தை நிலைநாட்ட எழுந்தவையே அறநூல்கள் எனலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளை எடுத்தரைக்கவே சங்க கால புலவர்கள் அறநூல்களை இயற்றினர். அவற்றுள் குறுந்தொகையில் தலைவன் கூற்று கூறும் அறத்தினை இக்கட்டுரையில் காண்போம்.

**தலைவனது அறம்:**

குறுகிய அடிகளையுடைய குறுந்தொகையில் தலைவனது அறமானது பல இடத்திலும் கடினமான சூழலிலும் அறத்தொடு இருந்தமை புலப்படுகிறது.

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம்"**

பிறர் மீது பொறாமை எண்ணம், கோபச்செயல், கடிந்து கூறும் சொல், ஆசை போன்ற தவறிழைக்காது இருப்பதே அறம் என்கிறது வள்ளுவம்.

சங்க காலத் தலைவன் இயற்கை புணர்ச்சி வழி புணர்ந்தது தொடங்கி தலைவியை மணம்முடிக்கும் வரை பல இடத்தில் அறம் புரிகிறான். இவ்வாறான அனைத்து செயலிலும் தலைவன் அறம் தவறாதும், தலைவிக்கு கொடுத்த வாக்கினைக் கருத்தில் கொண்டு, தலைவியை மணக்கும் எண்ணம் ஈடேற உழைப்பவனாய், அறத்தொடு இலக்கியத்தில் பயணிக்கிறான். தனிமனிதனின் எண்ணம், செயல், சொல்லே அறம் என உணரமுடிகிறது.

**உலகியல்:**

அறம் எனப்படுவது உலகியல் சார்ந்தது. எனவே அது உலகார்க்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சென்றடைகிறது

**"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**

**மறவாது இதுகேள் மண்ணுயிர்க் கெல்லாம்"**

என மணிமெகலை உலகளாவிய அறத்தை எடுத்தியம்புகிறது. ஊலகளாவிய பரப்பில் அறத்தைக் கூறினும் பல்வேறு அற வேறுபாடுனகள் உலகோரிடையே உள்ளது. ஆயினும், அறமானது பண்பாடு சார்ந்ததென்பதால் ஒரு தனி மனிதன் செய்யும் செயலானது பலராலும் போற்றப்பட்டால், அது அந்த சமுதாயத்தின் ஒழுக்க நெறிகளை மிஞ்சிய தெனினும் அதனை

சமுதாயமே அறம் என்கிறது. எனவே அறமானது இடம், காலம், சூழலால் உலக மக்களிடையே ஒருமைப்பாடற்று இருக்கிறது.

சங்ககால அறத்தைப் பின்பற்றாது, புதிய அறங்களை உருவாக்கிக்க கொள்வதைச் சான்றுரைக்கலாம். சங்க நூலானது "கற்றதனை வாழ்வில் பயன்படுத்திப் பயன்பெறுக" என்கிறது. ஆனால் உலகோர் அதனை ஏற்காது காலத்திற்கேற்ப அறத்தினை மாற்றியும், ஒற்றுமையற்று நாட்டோருக்கெனத் தனித்தனி அறத்தை வைத்துள்ளமை குறைகூறத்தக்கது.

மடலேறுதலில் தலைவன் அறம்:

தலைவியை மணம் முடிக்க விரும்பிய தலைவன், தன் தலைவியது இற்செறிப்பு, களவு வெளிப்படல், அம்பல், அல் போன்ற காரணத்தால் தலைவன் தங்களது களவை ஊரார்க்கு தெரிவிப்பதே மடலேறுதல் ஆகும்.

**"நல்லோள் கணவன் இவன், எனப்**

**பல்லோர் கூற யாஅம் நாணுகம் சிறிதே"**

தலைவன் மடலேறிப் பெண்ணைப் பெறுதல் என்ற புதிய அறத்தை விதைக்க, அதனை ஊரார் வியந்து கூறுவர். "நல்லவளான நம் தலைவியின் கணவன் இவன்" என ஊரார் போற்ற தலைவனும், தலைவியும் சிறிது நாணுவர். பின் மணம் முடித்து தலைவன் அறத்தொடு நிற்பான்.

**"மறுகின் ஆர்க்கவும் படுப;**

**பிறிதும் ஆகுப-காமம் காழ்க் கொளினே"**

காமநோயுற்றத் தலைவன் தலைவியின் ஓவியமுள்ளக் கொடியைக் கையிலேந்தி தலைவிக்கு கொடுத்த வாக்கினை அடையும் பொருட்டு பனைமடலின் மேலேறி ஊர்ந்து செல்வான். இதனைக் கண்ட ஊரார் அலர் பேசி, பெற்றோரை நாணச்செய்வர். பின் தலைவியை மணம் முடித்து வைப்பர் என எண்ணி இச்செயலை செய்த பின்னரும் தன் மகளைத் தர இசைக்கவில்லையெனில் சாகவும் துணிவேன் என்றான்.

**"மாஎன மடலொடு மறுகில் தோன்றித்**

**தெற்றெனத் தூற்றலும் பழியே**

**வாழ்தலும் பழியே – பிரிவு தலைவரினே"**

குற்றமற்றவனாகிய தலைவன் ஊரார் முன் மடலேறினால் நாணுற்று இறப்பாள் என தோழி மடலேறுதலை மறுத்த பின்னும் "ஊரார் பழியுரைக்கு அஞ்சி மடலேற மறுத்தால், தான் உயிர் வாழ்வதும் தனக்கு பழியே" எனக் கூறி பழியேற்பினும் அறத்தையே செய்கிறான்.

இவ்வாறாகத் தலைவிக்காக சாகவும், பழியேற்கவும், நாணுதல் என தலைவன் தன் அறத்தினைக் கைக்கொண்டுள்ளான்.

அறவோனிடம் அறம் கூறல்:

தலைவன் பாங்கனாகிய பார்ப்பனக் குல மைந்தன், அந்தணர்கள் வேதம் ஓதி, உண்மையை எடுத்துரைப்பர் எனக் கூறி தன் குறைத்தீர்க்குமாறு வேண்டியது.

**"கைஇல் ஊமன் கண்ணின காக்கும்**

**வெண்ணெய் உணங்கல் போல**

**பரந்தன்று, இந்நோய் நோன்று கொளற்கு அரிதே"**

தலைவன் குறைத்தீர்க்க அறத்தை எடுத்தியம்பும் பாங்கன் அறம் கூறாதது கண்டு, பாங்கனது அறத்திறடைமயைக் கூறி தலைவன் அறமாற்றினான், " பாங்கனது கை தலைவியது கை போல உதவாதது கண்டும், அறத்தைக் கூறி நல்வழிப்படுத்துவான் பேசாதது கண்டும், என் துயரை கண்ணாரக் கண்டும் அதைப் பொக்க முயலாததைக் கூறி, கை, வாய், கண் இருந்தும் பயனில்லை என்றான்.

**“எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்**
**பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்**
**மருந்து உண்டோ? மடயலோ இதுவே”**

பார்ப்பனர் மகனாகிய பாங்கனிடம் தலைவன் வேதக் கல்வியில் “ முற்பிறப்பில் பிரிந்துச் சென்றோரை, இற்பிறப்பில் சேரச் செய்ய முழயுமெனில் அது சிறந்த அறம்” என்றான். பிரிந்தோரைச் சேர்பிக்கும் முறை வேதத்தில் “இதோபதேசம்” எனப்படும். இவ்வறமாகிய மருந்தை அறிந்து என்னையும், தலைவியையும் கூட்டுவிப்பாயாக என உரைத்தான்.

**வினை வழி அறம்:**

“வினையே ஆடவர்க்கு உயிர்” என்பதால் தலைவன் ஆடவர்க்கு உரிய அறச்செயலான பொருள் தேடலைச் செய்வான்.

**“இன்னாக் கானமும், இனிய – பொன்னொடு**
**முணிமிடை அல்குல் மடந்தை**
**அணிமுலை ஆகம் முயங்கினம் செலினே”**

தலைவன் பொருள் தேட பாலை நில வழி செல்லுமிடத்து, வெம்மையான ஆறலைக் கள்வர்கள் அவ்வழி செல்வார் பொருளைக் கைப்பற்றக் கருதி அவ்வழிச் செல்வாரைக் கொல்வர். இவ்வாறானப் பாலை நில வழி செல்லுமிடத்து “தலைவியின் நினைவும், அச்சுறுத்தும் காடுமே” துணையிருந்ததென தலைவியின் நினைவை தன்னலங்கருதாது தலைவன் அறத்தொடு உயர்த்திக் கூறினான்.

**உலகப்பண்பில் அறம்:**

வினை முற்றுப்பெற்று வீடு திரும்பியத் தலைவன் தோழியிடம் உலக அறத்தைக் கூறுவதாய் உள்ளது

**உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி,**
**நினைந்தனென் அல்லெனோ பெரிதே? நினைத்து**
**மருண்டனென் அல்லனோ, உலகத்துப் பண்பே?”**

தலைவி பொருள் தேடச் சென்றவிடத்து என்னை நினைத்ததுண்டோ? ஏன வினவியதற்குத் தலைவன், கடல் நீரானது மேகத்தை அடைந்து பின் மலை பெய்து கடலை அடைவது போல பிரிந்துப் பின் உன்னை அடைந்தேன். வினை முற்றியப் பின் நின்னை நிறைத்து நோயுற்று வருந்தி, உன்னைக் கண்டவிடத்து நோய் குணம் அடைதலே அறம் என்றும், இதுவே “உலக இயல்பு” என்றும் உணர்த்தினான் தலைவன்.

**நட்பில் அறம்:**

தலைவன் நட்பானது மறுபிறப்பும் தொடரவல்லதென நட்பின் அறம் கூறுகிறான்.

**“இன்றை அன்ன நட்பின் இந்நோய்**
**இறுமுறை என ஒன்று இன்றி,**
**மறுமை உலகத்து மன்னுதல் பெறினே”**

தலைவி இற்செறிக்கப்பட்டமையால் வருந்திய தலைவன், அவளை மறுபிறப்பில் அடையலாம் என தன்னைத் தேற்றிக் கொண்டான். “நட்பானது உயிர் செல்லும் வழியில் செல்லும், எனவே அதனை மறுபிறப்பிலும் அடையலாம். ஆனால் நோயானது உடலோடு மடியும் தன்மையுடையது” மறுபிறப்பில் தொடராது. எனவே உடலோடு கூடிய நோய் அழிந்தாலும், உயிரோடு கூடிய நட்பு மறுபிறப்பிலும் அழியாது என தலைவன் நட்பினது அறம் கூறுகின்றான்.

**முடிவுரை:**

தலைவன் குறுந்தொகைப் பாடலின் வழி மடலேறுதல், பொருள் ஈட்ட சென்று அறமுணர்தல், நட்பினது அறம் மற்றும் நாற்பொருளிலும் அறத்தினை உயர்த்திக் கூறியதைக் கண்டோம். “பொருள் நிறையக் கிடைத்தமையால், அதனைக் கொண்டு அறம் செய்வேன் எனவும் அறம் செய்து பொருளினை தானமளிப்பேன் என்பதால் இன்பத்தை பெறுவேன் என நாற்பொருளுள் மூன்று அமையக் கூறுகிறான் தலைவன். தலைவன் தனது எண்ணம், செயல், சொல், ஆசை, நட்பு போன்றவற்றில் அறத்தை காட்டியுள்ளான். அறம் வெல்லும் பாவம் தோற்கும். எனவே தலைவன் தீய பாதையான பாவத்தின்பாற் செல்லாது அற வழியிலேயே சென்று அறத்தொடு நிற்றமையைக் காண இயல்கிறது. அறமானது இக்காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெறினும் சங்க கால அறத்தின் சிறப்பினைப் போற்றி பின்பற்றுவோமாக.

# “கடையேழு வள்ளல்களும் மனிதநேயச் சிந்தனையும்”

***முனைவர் க.பழனிவேல்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்), கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 029.

**முன்னுரை**

முதன்முதலில் மனிதநேயம் என்ற சொல்லையும் அதற்கான பொருளையும் மண்ணுலக மாந்தர்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தியது தமிழினம் என்றால் அதுமிகையன்று. அதுமட்டுமல்லாமல் அதன்வழி வாழ்ந்து காட்டியதும் தமிழினம்தான். பழம்பெருமை பேசுவது பயனற்றது. ஆனால் பழமையோடு நடப்பினைப் பொருத்திப் பார்ப்பதால் சிந்தனையைச் சீர்படுத்திக் கொள்ள முடிவதோடு, சமுதாயத்தின் வளர்ச்சியையும் கண்டறியலாம். அவ்வகையில் இன்றளவில் மனிதநேயம் குறித்த சிந்தனையையும் பார்வையையும் சீர்தூக்கிப் பார்ப்பது காலத்தின் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, சங்க காலப் பாடல்களின் வழியே அறியப்படும் கடையேழு வள்ளல்களின் மனிதநேயச் சிந்தனை குறித்து ஆய்வதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.

**மனிதநேயம்**

மனிதன்+நே(ச)யம்=மனிதநேயம். மனிதன் என்ற சொல்லில் ‘ன’கர மெய்யீறு மறைந்து நேயம் என்ற சொல்லோடு புணர்ந்துள்ளது. நேயம் என்பது வடமொழியில் நேசம் என்று வழங்கப்பட்டுள்ளது. மனிதன் தன் சக மனிதரிடத்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல நேயம். ஒவ்வோர் உயிர்களிடத்தும் கொண்டிருக்கின்ற நே(ச)யமே (அன்பே) மனிதநேயம் என்று கொள்ளப்படும். நேயம் என்பதற்கு நெய், அன்பு, எண்ணெய் என்ற பொருள்களுண்டு. தமிழிலக்கியத்தில் அன்பு, இரக்கம், கருணை என்ற பொருண்மைகளிலும் கையாளப்பட்டுள்ளது. தற்காலச் சூழலில் மனிதநேயம் என்பது ‘மனிதம்’ என்று சுருக்கமாக வழங்கப்பட்டு வருவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். சங்க இலக்கியத்தில் இருந்து இன்றுவரையிலான தமிழிலக்கியங்களில் மனிதநேயம் குறித்த சிந்தனைகளைக் காணலாம். ஆனால் எண்ணற்ற இலக்கியங்களின்வழி மக்களுக்குப் போதிக்கப்பட்டு வந்த மனிதநேயம் இன்று ஏட்டளவிலேயே இருந்து வருவதுதான் வருத்தத்திற்குரியதாக உள்ளது.

**சங்கப் பாக்களும் கடையேழு வள்ளல்களும்**

கடையேழு வள்ளல்கள் பற்றிய பதிவுகளும் பகுப்பும் சங்கப் பாக்களில் புறநானூற்றுப் பாடல்களிலும், சிறுபாணாற்றுப்படையிலும் காணக்கிடைக்கின்றன. ஏழு வள்ளல்கள் பற்றியும் எடுத்துரைப்பவை இவையிரண்டு மட்டுமே. இவை தவிர வேறு சில சங்கப் புலவர்களும் கடையேழு வள்ளல்களில் சிலரைப் பற்றித் தத்தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். கடையேழு வள்ளல்களில் குறிப்பிடத்தக்கவர்களான பேகன், பாரி, ஆய் மூவரின் மனிதநேயச் சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

பேகனைப் பற்றிக் கபிலர், பரணர், பெருங்குன்றூர் கிழார் ஆகிய புலவர்கள் புறநானூறு, அகநானூறு ஆகிய நூல்களில் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

பாரியைப் பற்றி அவரது நண்பரான கபிலர், ஔவையார், பரணர் உள்ளிட்ட சங்கப் புலவர்கள் புறநானூறு என்னும் புற நூலில் பாடியுள்ளனர். பிற்காலத்தில் வந்த சுந்தரர் தமது ‘திருத்தொண்டத்தொகை’யில் கொடைக்கு எல்லையாகப் பாரியையே சுட்டுவது பாரியின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது.

ஆய் பற்றி சிறுபாணாற்றுப்படையில் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார். மேலும் புறநானூற்றில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர்

ஓடைகிழார் ஆகியோரது பாடல்களிலும், குறுந்தொகை, அகநானூறு ஆகிய அக நூல்களிலும் இவரைப் பற்றிய குறிப்புகள் உரைக்கப்பட்டுள்ளன.

அஃறிணை உயிர்களிடத்தும் மனிதநேயத்தைக் காட்டியருளிய மாந்தர்களாகத் திகழ்ந்த காரணத்தால் இம்மூவரை மட்டுமே ஆய்வுக்களமாகக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**கொடைத்திறன் – மனிதநேயச் சிந்தனை**

கொடை என்பது தன்னிடத்து ஒன்றினை நாடி வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்குவது. புராண கதைகளில் உரைக்கப்பட்டுள்ள கர்ணனும் இவ்வாறே கொடையளித்துள்ளான். சங்க கால மன்னர்களில் சிலரும் இவ்வாறே கொடை வழங்கியுள்ளனர். ஆனால் கடையேழு வள்ளல்களைப் புகழவும் நினைவிற் கொள்ளவும் அவர்களின் கொடைத்திறன் மட்டும் காரணமல்ல. மாறாக அவர்களது மனிதநேயச் சிந்தனைகளும்தான். அதிலுங்குறிப்பாக மேற்குறிப்பிட்ட பேகன், பாரி, ஆய் போன்றோரின் மனிதநேயச் செயல்கள் சிறப்பிற்குரியது. பொதுவாகப் 'பாத்திரம் அறிந்து பிச்சையிடல் வேண்டும்' என்பது முதியோர் கூற்று. கடையேழு வள்ளல்களிடத்து இத்தகு போக்கினைக் காணமுடியவில்லை. மிகுதியான மனிதநேயச் சிந்தனையையும், கண்மூடித்தனமான அன்புநெறியையும் இவர்களிடத்துக் காணமுடிகிறது. அஃறிணை உயிர், உயர்திணை உயிர் என்ற பாகுபாடின்றி அனைவரிடத்தும் தனது மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களது சிந்தனையில் ஆழ்ந்து நோக்க வேண்டியது யாதெனில், உதவி வேண்டி வருபவர்களுக்கு மட்டுமே கொடை வழங்குவது என்பதல்ல; உதவி தேவைப்படும் எந்த ஓர் உயிருக்கும் (கேட்டாலும் கேட்காவிட்டாலும்) ஓடோடிச் சென்று உதவுவது என்பதாகும். உயிர்கள் மீது கொண்ட நேயமே அவர்களை ஒப்பற்ற வள்ளல்களாகச் செய்துள்ளது.

**காலம் - இடம் - சூழல்**

காலம், இடம், சூழல் என்ற மூன்றும் ஒருவரை எந்த நிலைக்கும் கொண்டு செல்லும் ஆற்றல் மிக்க காரணிகளாகும். இம்மூன்றும் வள்ளல்களை எவ்வாறு புகழின் உச்சாணிக்குக் கொண்டு சென்றுள்ளன என்பதை விளக்கும் வகையில் இப்பகுதி அமைகிறது.

**காலம்**

காலத்தின் அருமையும் ஆற்றலையும் நன்கறிந்த வள்ளுவர் காலமறிதல் என்ற அதிகாரத்தையே இயற்றியுள்ளார். அதில் கிடைப்பதற்கு அருமையான காலம் வந்து வாய்த்தபோது, அப்போதே நாம் செய்வதற்கு அரிய செயல்களைச் செய்து வெற்றிபெற வேண்டும் என்ற நற்கருத்தினை,

**"எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே**
**செய்தற் கரிய செயல்"** - குறள். (489)

என்னும் குறள்வழி எடுத்துரைக்கிறார். இதனைப் பேகனின் செயல்பாட்டோடு பொருத்திக் காணலாம்.

**பேகன் - மயிலுக்குப் போர்வையளித்தல்**

காலம் என்பதை நோக்கும்பொழுது அந்தந்தச் சூழலையும் பொருத்திப் பார்க்க வேண்டும். அன்றைய நிலையில் எல்லாமே அரசனுக்கு உரிமையுடையதாகவும் அவருக்குக் கட்டுப்பட்டதாகவும் இருந்தன. அரசன் என்பவன் கடவுளுக்கு நிகரானவன் என்ற சிந்தனை நிலவிய காலம். மேலும் பேகன் இதே மயிலுக்கு வேறொரு சூழலில் போர்வையைப் போர்த்தியிருந்தால் அவரை நாம் இன்று வள்ளலாகக் கொண்டாடியிருப்போமா? என்றால் அது ஐயத்திற்குரிய ஒன்றுதான். ஆகவே ஒரு செயலை இயல்பான செயலாகவும் செய்தற்கரிய செயலாகவும் மாற்றிக் காட்ட காலத்தோடு இயைந்த சூழலால்தான் இயலும். கடவுள் நிலைக்கு உயர்த்தப்பட்ட ஒருவன் தனக்கு ஏவல் செய்ய பலபேர் காத்துக் கிடக்கும் பொழுது தானே சென்று மயிலுக்குப் போர்வை போர்த்துவது என்பது இயல்பான காரியமன்றுதான். என்றாலும் மயிலுக்குப் போர்வையை பேகனே சென்ற போர்த்தினாரா? அல்லது தனது படைவீரர்களிடமோ, ஏவலாட்களிடமோ கொடுத்துப் போர்த்தச் சொன்னாரா? என்பது விடை காணா வினாவாகும். எது எவ்வாறாயிலும் இங்குக் கவனத்தில் கொள்ளப்பட

வேண்டியது, அரசன் என்பவன் குடிமக்களின் நலன் பேணுபவனாக மட்டுமல்லாமல் தன் நாட்டில் வசிக்கின்ற ஒவ்வோர் உயிரின் நலனையும் கருத்தில் கொண்டவனாகச் செயலாற்றியதுதான் பேகனை இவ்வுலகம் இன்றளவும் நினைவிற்கொள்ள காரணம். மயிலுக்குப் போர்வை போர்த்தினால் அதனால் பறக்க இயலுமா? அது மழைமேகங்களைக் கண்ட மகிழ்ச்சியில் அகவுகிறதா? தன் துணையைக் காணாமல் அதன் வரவிற்காக அகவுகிறதா? என்பதைப் பற்றியெல்லாமல் சிந்திக்காமல் உண்மையிலேயே மழையில் நனைந்து குளிர் தாளாமல்தான் அகவுகிறது என்றெண்ணி, அதன் துயர் துடைக்க வேண்டும் என்று உள்ளத்தில் உதித்த எண்ணமும் உதித்த மாத்திரத்தில் கையில் போர்வையோடு மயிலை நோக்கி ஏகிய தருணமும்தான் ஒப்பற்றது. அவ்விடத்துத் தான் ஓர் அரசன் என்றோ, தன்னுடைய ஏவலாட்களைப் பற்றியோ சிந்திக்காமல் தான் ஒரு மனிதன் பிற உயிர்களின் துயர் களைவது தன் கடமை என்றெண்ணிய அத்தகைய உயர்ந்த மனிதநேயச் சிந்தனையும், காலம் தாழ்த்தாது விரைந்து செயலாற்றிய போக்கும்தான் பேகனைக் கடையேழு வள்ளல்களில் ஒருவனாக உயர்த்தியது.

**இடம்**

இடனறிதல் என்பதற்கு நம் முன்னோர் தனி இலக்கணமே வகுத்துள்ளனர். இடனறிந்து பேசுதல், இடனறிந்து செயலாற்றுதல் ஒருவரை எப்போதும் முன்னேற்றிச் செல்லும். வள்ளுவரும் இடனறிதல் பொருட்டு தனி அதிகாரம் படைத்துள்ளார். அரசன் இடனறிந்து செயலாற்றுவதன் இன்றியமையாமையை அவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. அதில்,

**“அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**

**எண்ணி இடத்தால் செயின்”** - குறள். (497)

என்ற குறள்வழி, ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை என்ற கருத்தை முன்வைக்கிறார். வள்ளுவரின் இக்கருத்து பாரியின் செயல்பாட்டோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

**பாரி – முல்லைக்கொடிக்குத் தேரினைக் கொடுத்தல்**

பாரி பறம்பு மலையை ஆட்சி செய்து வருகின்ற ஒரு குறுநில மன்னன். தேரிலே செல்லும்போது வழியில் படர்வதற்குப் பற்றுதல் இல்லாத முல்லைக் கொடிக்குத் தனது தேரினை நிறுத்திப் படர்வதற்கு ஏது செய்தவன். இதனைச் சிறுபாணாற்றுப்படையின்,

**“………… சுரும்புண**

**நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்**

**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**

**பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்**

**பறம்பிற் கோமான் பாரியுங்….”** - சிறுபாண். (87 – 91)

என்ற வரிகள் எடுத்துரைக்க காணலாம். இங்கு பாரியின் செய்கை அளப்பறியது என்பதை இடமும் சூழலும் தீர்மானிக்கின்றன. பாரி தாம் செல்ல வேண்டிய இடம் (அரண்மனையாகவும் இருக்கலாம்) குறித்தோ, அவ்விடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்பதைப் பற்றியோ சிறிதும் சிந்தியாமல், தனது நாட்டில் ஒரு முல்லைக்கொடி படர்வதற்கு வழி இல்லாமல் போய்விடக் கூடாது என்ற எண்ண உந்துதல் காரணமாக அவ்விடத்திலேயே அதன் ஏக்கத்தினைத் தணிக்கும் பொருட்டுத் தமது பெருந்தேரினை நிறுத்தி, முல்லைக்கொடி படர்வதற்கு இடமளித்த நிறைவோடு செல்கிறான். தான் செல்ல வேண்டிய தூரத்தில் கருத்தில் கொண்டு அவ்விடம் சேர்ந்த பின்னர் தமது ஏவலாட்களிடம் கூட கொடுத்தனுப்பலாம். அல்லது மாற்று ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் உடனே அக்கொடியின் துயர் களைய வேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனையும், துயர் களைவதற்கான வழி இருக்கும்போது மற்றொன்றைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும் என்ற மனப்பான்மையில், வள்ளுவரின் குறளுக்கேற்ப தனது துணிச்சலை துணையாகக் கொண்டு இடனறிந்து செயலாற்றிய திறன்தான் பாரியை வள்ளலாக்கியது.

**சூழல்**

ஒரு செயல் அளப்பறிய செயலா? அல்லது இயல்பான செயலா? என்பதைச் சூழலோடு பொருத்திப் பார்த்துதான் முடிவு கண்டறிய முடியும். காரணம் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் எதிர்வினை உண்டென்பதை அறிவியல் உறுதி செய்துள்ள நிலையில், அச்செயலை மறுபக்கமிருந்தும் நோக்க வேண்டியது முக்கியமானது. அக்கோட்பாட்டின் அடிப்படையில் ஆய் வள்ளலின் கொடைத்திறத்தைச் சூழலோடு பொருத்தி ஆராய வேண்டியது இன்றியமையாத் தேவையாகும்.

**ஆய் - ஆலமர் செல்வனுக்குக் கலிங்கத்தை அளித்தல்**

ஆய் வள்ளல் தனக்குக் கிடைத்த அரிய கலிங்கத்தை (ஆடை) ஆலமர் செல்வனுக்கு (சிவலிங்கத்திற்கு) அளித்தான் என்று சிறுபாணாற்றுப்படை ஆசிரியரான இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் குறிப்பிடுகிறார். பேகனோ, பாரியோ செய்த செயல்கள்கூட ஓரளவிற்கு அஃறிணை உயிர்களுக்குச் செய்த உதவி என்று கொள்ளலாம். ஆனால் ஆய் வள்ளல் உயிரற்ற ஒரு கல்லை உயிருள்ள பொருளாக நினைந்து அதற்குத் தனக்குக் கிடைத்த அரிய ஆடையைச் சாற்றுவதை என்னவென்று உரைப்பது?. இதனை மடமைத்தனம் என்று உரைப்பது அறிவின்மையைக் காட்டும். மாறாக அவரது ஈரமனத்தின் அன்பு கல்லிடத்தும் வெளிப்பட்டு நிற்பதுதான் சிறப்பு. 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்ற சொலவடை வழக்கத்தில் இருப்பதைக் காணலாம். ஆனால் ஆய் வள்ளலோ கல்லையே சிவ முகூர்த்தமாகக் கண்டதோடு மட்டுமல்லாமல், அவ்விறைவனுக்கும் குளிரும் என்று நினைந்து மனத்தால் இரங்கி நீல நாகம் நல்கிய கலிங்கத்தை (போர்வை) அணிவித்தான். உயிருள்ளவை வருந்தும் என்பதைக் காட்டிலும் உயிரற்ற கல்லிற்கும் உணர்ச்சியுண்டு என்றெண்ணிய ஆய் வள்ளலின் மனநலத்தைச் சூழலோடு பொருத்திப் பார்த்தால் தெளிவு கிடைக்கும். மனிதனுக்கு இன்பம் துன்பம் என்பது சூழலைப் பொறுத்துதான் அமையும். சில வேளைகளில் இன்பம்கூட துன்பமாகும்; துன்பம்கூட இன்பமாகும். சூழல் மனித மனநிலையை வடிவமைத்து, இன்பமா? துன்பமா? என்று தீர்மானிக்கின்றது. அதேவேளை சூழல் என்பது நமது சிந்தனையாற்றலை மழுங்கடிக்கச் செய்யும் ஆற்றலுமுடையது. அத்தகு நிலையில் நமது செயல்பாடுகள் குறித்த தெளிவு நமக்கே இல்லாமல் போகும் நிலை ஏற்படலாம். இங்கு ஆய் வள்ளல் அத்தகு சூழலில் கொடையளித்துள்ளான். ஆனால் இச்சூழலுக்கு ஆட்படக் காரணம் அவரது பக்திநிலை. பக்திமிகுதியால் கல் (சிவலிங்கம்) குறித்த சிந்தனையின்றி துயர் களைய முனைந்துள்ளார். அவரது செயல்பாட்டினை மட்டும் கொண்டு அவரை வள்ளல் என்று கொள்ளமுடியாது. செயல்பாட்டிற்கான மனநிலை, சிந்தனை, செய்த சூழல் ஆகியவற்றோடு ஒப்புநோக்கும்போது ஆய் வள்ளலின் செயல்பாடு நினைந்து போற்றுதலுக்குரியதாகும்.

**நிறைவுரை**

கடையேழு வள்ளல்களில் இம்மூவரின் மனிதநேயச் சிந்தனை, அறச் செயல்பாடு, இரக்கமுடைய பண்புநலன், கடமையுணர்வு ஆகியவை அழியாப் புகழைப் பெற்றுத் தந்துள்ளன. அதற்கு இயற்கையின் காரணிகளான காலம், இடம், சூழல் எவ்வாறு துணைமை செய்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வழி உரைக்கப்பட்டது.

துணை நின்றவை

1. "திருக்குறள் - பரிமேலழகர் உரை" – பதிப்பாசிரியர் புலியூர் கேசிகன், பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு – மே, 1993.

2. "சங்க இலக்கியம் - பாட்டும் தொகையும்" தொகுதி 1 – தொகுப்பும் பதிப்பும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 19967.

# இரட்டைக் காப்பியங்களில் அறப்பண்பாடு

***முனைவர் து.சவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோ அரகிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

**முன்னுரை**

**"தொன்மை தானே சொல்லுங்காலை**
**உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" (தொல்., 538)**

என்பதற்கு இளம்பூரணரின் கூற்றுவழிப் பார்க்கும் பொழுது காப்பிய இலக்கியங்கள் மிகத் தொன்மையான காலத்தில் இருந்தே பேசப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் மக்களின் மனங்களை ஈர்க்கக்கூடிய வகையில் நல்ல அறங்களைக் கூறும் ஆற்றல் வாய்ந்த கதைகள் நெடுங்காலமாக மக்களிடையே வழங்கி வருகின்றன. அவ்வாறு காலம் காலமாக வழங்கி வரும் கதைகளில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஒன்றாகும்.

**காப்பியங்கள் தோன்றக் காரணங்கள்**

சங்ககாலத்தில் அறம் பிறழா அரசும், ஒழுக்கம் நிறைந்த மக்களும் இருந்ததால் அறக்கோட்பாடுகளை அறிவுறுத்த வேண்டிய அவசியம் அக்காலகட்டத்தில் இல்லை. ஆனால் பிற்காலகட்டத்தில் அரசாட்சி நீதியினின்று பிறழ்கின்ற போழ்தும், தனி மனித ஒழுக்கம் சிதைகின்ற போதும் அறத்தை முன்னிறுத்தி மக்களை நல்வழிப்படுத்த காப்பியங்களும், நீதி நூல்களும் எழுந்தன. "ஒரு நாடு அல்லது அதன் நாகரிகம் பண்பாடு முதலான உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சி பெறுகிற போதுதான் பழைய பண்பாட்டினை மீட்டுருவாக்கவும் புதிய சமூக மாற்றத்தை எடுத்துரைத்து மனித சமூகத்தை உயர்த்துவமான உயரிய நோக்கமுடைய காப்பியங்கள் தோன்றும் என்ற காசிநாதன் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஐம்பெருங்காப்பியங்களின் கதைகளும் மக்களின் நிலைத்த வாழ்வோடு ஒத்து செல்வனவாகவே அமைந்துள்ளன.

**சிலப்பதிகாரக் கதைகளில் அறக்கருத்துக்கள்**

இக்காப்பியம் மூன்று அடிப்படைக் கருத்துக்களைக் கூறுகிறது.

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
2. ஊரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுவர்
3. ஊழ்வினை தவறாது வந்து தன் பலனை அடையச் செய்யும்

என்பதே ஆகும். இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே இக்காப்பியம் அமைந்துள்ளது.

**அறம் மாறா செயல்**

கண்ணகி புகார் நகர வாழ்க்கையில் கணவன் தனக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு ஆறியிருந்தாள். இதுவே ஆறிய கற்பொழுக்கம். மதுரை நகரில் மன்னனிடம் நீதி கேட்டுச் செல்லும் போது தனது சீறிய கற்பொழுக்கமான மறக்கற்பை வெளிப்படுத்தினாள். மேலும்,

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**அறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (கொலைக்களக் காதை 71-73)**

என்று அறம் செய்வோர்க்கு உதவுதல், அந்தண மரபினரைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டுவன செய்தல், விருந்தினரைப் பாதுகாத்தல் என்ற நான்கு அறங்களைத் தான் தனித்திருந்தால் செய்ய இயலவில்லை என்று கூறுகிறாள். மேலும் கோவலன் அடைந்த வருத்தத்தையும், உன் பெற்றோர்கள் வந்து விசாரித்த போது விசனத்தைக் காட்டாமல் வியர்த்தமாகச் சிரித்தேன் என்றும், நீர் போற்றா ஒழுக்கம்

விரும்பினீர். அதனை மறுத்து உரைப்பது உகந்தது அன்று. மேலும் பெண்களுக்கு அழகு எதிர் பேசாதிருத்தல் என்பதையும் கூறுகிறாள்.

கணவன் செய்யும் துன்பங்களை தாங்குபவரே கற்புடையப் பெண்டிர். கணவன் துன்பங்களுள் பெண்களுக்கு மிகக் கொடியதாய் இருப்பது அவனது போற்ற ஒழுக்கமான பரத்தமையே என்றாலும் கோவலன் செய்கைகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு ஆறியக் கற்பு (அ) அறக்கற்பு மற்றும் சீறிய கற்பு (அ) மறக் கற்பு என கண்ணகி உயர்ந்து இருந்தாள்.

**அரசியல் பிழை செய்தவர்களுக்கு அறமே யமன்**

கொலை செய்யப்பட்ட கோவலன் செய்தியைக் கேட்ட கண்ணகி வீறு கொண்டு நீதியோடு அரசவைக்குச் சென்றாள். பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியுடைய சிலம்பு என் சிலம்போடு ஒத்திருப்பினும் அரசியின் காற்சிலம்பு முத்துக்கள் என கூறுவதைவிட, தன்னுடையது மாணிக்கப் பரல்கள் கொண்டது என தனது வாதத்தின் மூலம் நிரூபித்தாள். அரசன் உடைத்து ஒப்பிட்டு பார்க்கும் போது தனது முந்தைய தீர்ப்பு தவறு என்பதை உணர்ந்து அறநெறி தவறியது தன் மானத்துக்கு ஊறு என உணர்ந்து உடனே தன் உயிர் துறந்து அறத்தை நிலை நிறுத்தினான்.

**அமுதசுரபி**

அரும்பசி களைதல் என்பதே தலையாய கொள்கையாகக் கொண்டு சீத்தலைச்சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தை யாத்துள்ளார். பசியின் கொடுமை பற்றியும், அதைப் போக்கியவரின் பெருமை பற்றியும் மணிமேகலைக் காப்பியம் உள்ளத்தில் பதியும்படி கூறுகின்றது.

> **"குடிபிறப்பழிக்கும் விருப்பங் கொல்லும்**
> **பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்**
> **நாணணி களையு மாணெழில் சிதைக்கும்'**
> **பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
> **பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ**
> **ரிசைக்சொனா லாவைக் கென்னா நிமிராது"2**

என்று பசிப்பிணியின் பல்வேறு கொடுமைகளை செயல்களைக் கூறியுள்ளது. அப்பிணியைப் போக்கியவரின் பெருமையை என்னுடைய நாவினால் சொல்லிவிட முடியாது என்று கூறுகிறார். ஆபுத்திரனுக்குப் பாலூட்டி வளர்த்தால் பசுவானது அடுத்த பிறவியில் சிறந்த பேறு பெற்றது என்றும், மனைதோறும் சென்று உணவு பெற்று உடல் நலிவுற்றோரை வருகவென்று அழைத்து உணவு வழங்கினான் ஆபுத்திரன். அச்செயலால் ஆபுத்திரன் ஆருயிர் மருந்தாகிய அமுத சுரபியை பெற்றான் என்றும் அமுத சுரபியால் உயிர்களின் பசித்தீர்த்த பயனால் ஆபுத்திரன் மறுபிறவியில் பெரிய அரசனாக விளங்கினான் என்றும், ஈத்துவக்கும் இன்பம் மறுபிறவியில் பெரிய அரசனாக விளங்கினான் என்றும், ஈத்துவக்கும் இன்பம் போல் உயர்ந்த இன்பம் வேறெதுவமில்லை என்றும் சாத்தனார் கூறுகிறார். பசி களைய எல்லோர்க்கும் உணவளிக்க வேண்டுமென்று உயர்ந்த அறத்தைக் கூறுகிறார்.

மணிமேகலைக் காப்பியத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் பசிப்பிணி போக்குதலைக் கடமையாகக் கொண்டுள்ளது.

**மணிமேகலை**

பௌத்த சமய அறப்பணியையும், பசிப்பிணியைத் தீர்த்தல் என்ற சமூக அறப்பணியையும் மணிமேகலை தனது தலையாய பணியாகக் கொண்டு செயல்பட்டிருக்கிறாள். அவரது முன்னையப் பணிக்கு துறவும், பின்னைய பணிக்கு அமுதசுரபியும் துணை செய்துள்ளன. அவள் சென்ற பிறவியில் அவனது கணவன் இராகுலன் திட்டிவிடம் என்னும் பாம்பு தீண்டப் பெற்று உயிர் துறந்தான். அப்போது அவளும் உடன்கட்டை ஏறினாள். தீயினில் புகுந்து உடல் வெந்து உயிர் போகும் போது சாதுசக்கரன் என்ற முனிவனுக்கு உணவூட்டியது போன்ற கனவாகிய மயக்கத்தை அடைந்தாள். அதன் பயனை இப்பிறவியில் அமுதசுரபியைப் பெற்று அறம் செய்கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

**மணிமேகலை அறிவுறுத்தும் நல்லறங்கள்**

காப்பியத் தலைவியின் பெயரையே காப்பியத்தின் பெயராகவும் கொண்டு பெண்ணின் பெருமை பேணும் முதல் காப்பியம் மணிமேகலை. பரத்தமை, மது, சிறை, பசி, கொலை, களவு ஒழிப்பு முதலான பல சமுதாய சீர்திருத்தங்களை பேசுவதால் சீர்திருத்தக் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. மக்களுக்கு இன்றியமையாத உணவு, உடை, உறையுள் இவற்றை அளிப்பதே நல்லறம் என்பதனை மணிமேகலை அறிவுறுத்துகிறது.

**முடிவுரை**

இவ்வாறு இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் நல்லறங்களை கூறும் காப்பியங்களாக விளங்கின என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**துணைநின்ற நூல்கள்**


1. சாமிநாதையர்.வே., சிலப்பதிகாரம் அரும்பதவுரை, அடியார்க்கு நல்லாருரை, சென்னை
2. Tamil Heritage Group அமைப்பியல், இந்திராபார்த்த சாரதி ஆற்றிய உரை
3. மணிமேகலை 11 : 76-81

# விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டு பெண் - வீர தமிழச்சி வேலுநாச்சியாரின் பங்கு

***மு.தேன்மொழி,** M.A., M.Phil., B.Ed., B.A(Eng)., PG.D.Pr.M., Ph.D., விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, அரசு மகளிர் கல்லூரி (த), கும்பகோணம்.

**முன்னுரை**

நம் தாய் திரு நாட்டில் வீரம் செறிந்த பகுதியாகத் திகழ்கிறது நம் தமிழ்நாடு, வீரத்திலே படைவீரத்தில் நெஞ்சின் ஈரத்திலே உயர்ந்த நாடு நம் பாரத நாடு என்பார் பாரதி. ஆம் வீரத்தில், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாய் தமிழ் பெண்கள் பலர் தூண்டப்பட்டனர். அவர்களின் வீரமங்கை என்னும் பெருமைக்குரிய வேலுநாச்சியாரின் பெருமைமிகு சாதனைகள் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

**பிறப்பு**

1730 ஆம் ஆண்டு ஜனவரி 3-ம் நாள் இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சக்கந்தி என்ற ஊரில் இராமநாத மன்னன் முத்து விஜயரகுநாத செல்லதுரை சேதுபதிக்கும் தாய் முத்தாத்தாள் நாச்சியார் இவர்களுக்கு ஒரே மகளாக வீர மங்கை வேலுநாச்சியார் பிறந்தார்.

**குழந்தைப்பருவம்**

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது பழமொழி அப்படி மொழிக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் **வேலுநாச்சியார்.** சிறு வயதில் வேலு நாச்சியாருக்கு தெரிந்த ஒரே மூன்றெழுத்து வார்த்தை **வீரம்.** தெரியாத மூன்றெழுத்து வார்த்தை **பயம். வால் வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரை ஏற்றம். யானையேற்றம்** என்று எல்லா போர்க் கலைகளையும் கற்றார். இவை அனைத்தும் இவருக்கு பிற்காலத்தில் உதவின. இவருக்கு பத்து மொழிகள் தெரியும் **மகாபாரதம் இராமயணம்** போன்ற இதிகாசங்கள் தெரியும் இப்படி வீறு கொண்டும் வால் கொண்டும் வளர்ந்த இளம் பெண் **வேலுநாச்சியார்** வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை.

**திருமணம்**

வேலு நாச்சியாரின் அழகிலும், வீரத்திலும் மனதைப் பறிகொடுத்த சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர், வேலுநாச்சியாரை மணமுடித்தார். 1746-ம் வருடம் வேலுநாச்சியார் சிவகங்கைக்கு குடி புகுந்தார். சிவகங்கை சீமை சீரும் சிறப்புமான சீமை. அதை சீர்குலைக்க வந்தது ஒரு சிக்கல். ஆர்காடு நவாப் பெரும்படை ஒன்று இராமணாதபுரத்தை தாக்கி கைப்பற்றியது. நவாபின் அடுத்த குறி **சிவகங்கை** தான். ஆசைப்பட்ட இடங்களை அடையாமல் விட்டதில்லை நவாப். நேரம் பார்த்து நெருக்குவான் நெருங்குவான். கழுத்தை நெறித்து விடுவான். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதரும், வீரத்தில் குறைந்தவர் அல்ல, போர்கலைகள் தெறிந்தவர். வீரம் செறிந்தவர் விவேகம் பொதிந்தவர். முத்து வடுக நாதரின் மனைவியான வேலுநாச்சியார் வீரனுக்கு ஏற்ற வீராங்கனையாக திகழ்ந்தவர். இவர்களுக்கு உறுதுணையாக போர்ப் படைத் தளபதிகளாக **"சின்னமருது" "பெரியமருது" சகோதரர்கள்** இருந்தார்கள். இவர்களும் வீரத்திற்கு பெயர் பெற்றவர்கள்.

**ஆங்கிலேயர் படையெடுப்பு 1772**

இந்திய விடுதலை வீராங்கனை இராணிவேலுநாச்சியார் 18-ம் நூற்றர்ணடில் தமிழ்நாட்டின் சிவகங்கை பகுதியின் இராணி, மற்றும் பிரித்தானிக் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் விடுதலைப் போராட்டத் தலைவி.

ஆங்கிலேய படையெடுப்பால் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க இடம் மாறி மாறிச் சென்றார் வேலுநாச்சியார். இந்த படையெடுப்பை எதிர்க்க நினைத்த வேலுநாச்சியார் விருப்பாச்சியில் தங்கி ஹைதர்அலியைச் சந்தித்து உருது மொழியில் ஆங்கிலேயர் எதிர்ப்பு பற்றி

பேசி விளக்கினார். வேலுநாச்சியாரின் உருது மொழியின் திறமையைக் கண்டு ஆச்சர்யப்பட்ட ஹைதர் அலி உதவிகள் செய்வதாக உறுதிமொழி அழித்தார். ஏழாண்டு காலம் திண்டுக்கல்கோட்டை விருப்பாச்சிக் கோட்டை, அய்யம்பாளையம்கோட்டை என இடம் மாறி மாறி வாழ்ந்து வந்தார். இதற்கு இடையில் தமது எட்டு வயது மகளை பாதுகாக்க வேண்டிய கடமை இவருக்கு இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது நாச்சியாரின் பல போராட்டங்களிலும் அவர்களது தாய்மை உணர்வு புலப்படுகிறது என்பதும் நமக்கு விளங்குகிறது. அமைச்சர் தாண்டவராயன்பிள்ளையின் முயற்சியினால் சிவகங்கை மக்கள் பிரதிநிதிகள் வேலுநாச்சியாரோடு கலந்து பேசியதின்படி கம்பனி எதிர்ப்பு படை ஒன்று உருவாக்கப்பட்டது. மருது சகோதரர்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

**படைத்திரட்டல்**

1780 ஐப்பசி திங்கள் 5-ம் நாள் வேலுநாச்சியார் தலைமையில் ஒரு படை திண்டுக்கல்லிலிருந்து சிவகங்கையை நோக்கி புறப்பட்டது. ஹைதர் அலி ஐந்தாயிரம் குதிரை வீரர்களையும் ஐந்தாயிரம் போர் வீரர்களையும் பீரங்கி படை ஒன்றையும் அனுப்பி வைத்தார். படை காளையார் கோவிலை கைப்பற்றியது. தம்மைக் காட்டிக் கொடுக்காத வெள்ளையரால் வெட்டுண்ட **உடையாளுக்கு** "வீரக்கல்" ஒன்றை நட்டு தமது திருமாங்கல்யத்தை முதல் காணிக்கையாக வைத்து அஞ்சலி செலுத்தினார். இந்த கோவில் **கொல்லங்குடி வெட்டுடையகாளியம்மன் கோயில்** என்று அழைக்கப்படுகிறது. இறுதியாக சிவகங்கை நகரை கைப்பற்ற சின்னமருது பெரியமருது மற்றும் குயிலி இவர்களது தலைமையில் படைத்திரட்டப் பட்டது. குயிலி என்பவர் 18-ம் நூற்றாண்டில் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய **முதல் பெண் போராளி** இவர் சிவகங்கையைச் சேர்ந்தவர். இவர் முதல் தற்கொலை போராளி என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதரை ஆங்கிலேய அரசாங்கம் சுட்டுக் கொன்றது. எட்டாண்டுகள் அவர் மனைவி வேலுநாச்சியார் தலைமறைவாக இருந்தார். அப்போது ஆங்கிலேயர்களுக்காக உழவுப் பார்த்த வெற்றிவேல் என்பவரை குயிலி என்ற பெண் குத்தி கொன்றார். அதனால் **குயிலியை** வேலுநாச்சியார் தமது மெய் காப்பாளராக நியமித்தார். 1780-ல் **மானாமதுரை, திருப்பூர், திருபுவனம், காளையார் கோவில்** போன்ற இடங்களை மீட்டார் மருது பாண்டியர், ஹைதர் அலி ஆகியோரின் உதவியுடன் சிவகங்கையை மீட்க படையெடுத்தார் வேலுநாச்சியார்.

நேரம் பார்த்துக் கொண்டிருந்த நவாபுக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது. சிவகங்கையை தாக்க ஆங்கிலேயப் படைகள் நவாபுக்கு உதவ முன் வந்தனர் அவர்களிடம் நவீனரக ஆயுதங்கள் இருந்தன. அவற்றை கொண்டு சிவகங்கையைத் தாக்கி தன் கட்டுக்குள் கொண்டு வரத் திட்டமிட்டனர் நவாப். ஒரு முறை மன்னர் முத்துவடுகநாதர் காளையார் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்த போது நவாபின் படைகள் காளையார் கோவிலைச் சுற்றி வளைத்து கொடூரமாய் தாக்கினர். ஆங்கிலேயர் கொடுத்த போர்ச்சாதனைகளை கொண்டுத் தாக்கினர். வடுக நாதரும் அவரது படைகளும், வீரப்போர் புரிந்தனர், இருந்தும் அவர்களால் அந்த தாக்குதலை சமாளிக்க இயலவில்லை, மன்னர் மரணம் வடுக நாதர் வாளால் வெட்டப்பட்டு இறந்துவிட்டார்.

மன்னர் இறந்து விட்டார் என்ற செய்தி வேலுநாச்சியாருக்கு எட்டியது. கதறி அழுதார் கனவரின் உடலை பார்க்க வேண்டும் என்று துடித்தார். தானிருந்த இடத்திலிருந்து காளையார் கோயிலுக்குச் செல்ல விரும்பினார். இந்த சமயத்தில் நாச்சியாரை கைது செய்யப்படை ஒன்றை அனுப்பினான் நவாப் அந்தப்படை வேலுநாச்சியாரை வழியிலேயே மடக்கியது. ஆனால் நாச்சியார் மடங்கவில்லை. ஆவேசத்துடன் போரிட்டார் எதிரிப்படைகளை ஓடச்செய்தார் இறந்த கணவரை பார்க்க முடியாத சோகம் அவரை வாட்டியது, இருப்பினும் அவரது தளபதிகளின் ஆலோசனையின்ப்படி நீங்கள் நாட்டையும் நாட்டின் பெருமையும் காப்பாற்ற நீங்கள் வாழ்ந்தாக வேண்டும் என்றனர். இருப்பினும் தனது இறந்த கணவரை காண கோட்டைக்கு சென்றார்.

அங்கு கண்ட காட்சி கொடூரமானது எங்கொங்கும் பிணக்குவியல். அரசரும், இளையராணியும் இறந்து கிடந்தார்கள் உடன்கட்டை ஏறி விடலாம் என்று கூட யோசித்தார் ஆனால் தன் கணவரை கொன்ற கயவர்களை பழிவாங்காமல் சாவதா? என்று யோசித்து முடிவு எடுத்ததார். வீரத்தில் மட்டும் அல்ல விவேகத்திலும் வேலுநாச்சியார் திறமையானவர் நவாப்படையும் ஆங்கிலேயரையும் வீழ்த்த மன்னர் ஹைதர் அலி உதவியை நாடினார்கள். இவரது திறமையை தெரிந்து கொண்டு ஹைதர் அலி அவரது படைக்கு உதவி செய்து கோட்டையை மீட்டுக் கொடுத்தார்.

**கோட்டை மீட்பு**

வேலுநாச்சியார் தனக்கு வேண்டிய படைப்பெண், வீரர்களுடன், விருப்பாச்சி கோட்டை, திண்டுக்கல் கோட்டைகளில் பாதுகாப்பாக தங்கினர். அங்கிருந்து தனது போர்ப் படைகளைப் பெருக்கத் துவங்கினர் வேலு நாச்சியாரின் **லட்சியம் ஆங்கிலேயப் படையை அழிப்பது, நவாப்பை வீழ்த்துவது** சிவகங்கை சீமையில் தனது பரம்பரை சின்னமான **அனுமன்** கொடியைப் பறக்க விடுவது, ஹைதர் அலி தந்த நவீனரக ஆயுதங்களுடன் நவாப் படைகளுடன் போர் செய்யக் கிளம்பினார். வேலுநாச்சியார் முதலில் காளையார்க் கோவிலைக் கைப்பற்றினார்.

சிவகங்கையிலும் திருப்பதியிலும் நவாப்பின் படைகளுடன் ஆங்கிலப் படைகளும் பரவி நின்றன. அவற்றைத் தோற்கடித்தால்தான் சிவகங்கையை மீட்க முடியும். வேலு நாச்சியார் தனது படைகளை இரண்டு படைகளாக பிரித்து ஒரு படைக்கு சின்னமருது தளபதி, மற்றொரு படைக்கு **பெரிய மருது** இவர்களுடன் இணைந்து வேலுநாச்சியார் தலைமை வகுத்து போர் செய்தார்.

சின்னமருது தலைமையிலான படை திருப்பத்தூரில் இருந்த வெள்ளையர் படைகளை வீழ்த்தியது. **விஜயதசமி** அன்று தெய்வத்தை கூட்டம் கூட்டமாக சென்று பெண்கள் வழிபடுவது வழக்கம். வெளியே ஆங்கிலேயர் படை காவல் காத்துக் கொண்டிருக்கும் வேலுநாச்சியாரும் அவரோடு இருந்த பெண்கள் படையும் ஆயுதங்களை ஆடைக்குள் மறைத்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக அரண்மனைக்கு உள்ளே இருந்த கோவிலுக்குள் சென்று திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதை ஆங்கிலேயப் படைகள் எதிர்க்கவில்லை வெட்டுண்டு விழுந்தார்கள் பிழைத்தவர்கள் நாட்டை விட்டு ஓடினார்கள்.

**அரியனை ஏறுதல்**

சிவகங்கை கோட்டை மீது பறந்த ஆங்கிலேயரின் கொடி இறக்கப்பட்டது. வேலுநாச்சியாரின் அனுமன் கொடி ஏற்றப்பட்டது. அவரது சபதம் நிறைவேறியது. வேலுநாச்சியார் சிவகங்கையின் அரசியானார் அவருடைய காலம் வீரத்தின் காலமாக இருந்தது.

**இறுதிநாட்கள்**

1790-ல் அவரது மகளின் மறைவினால் மனம் துயரத்தில் ஆழ்த்தியது. இதயம் பாதிக்கப்பட்டது. சிகிச்சைக்காக பிரான்ஸ் நாட்டுக்கு சென்றான். அடுத்து 1793-ல் வேலுநாச்சியார் பேத்தி மரணம் நாச்சியாருக்கு மேலும் ஒரு துயரம் அதனால் விருபாட்சி அரண்மனையில் தங்கினார். பெரும் போராட்டங்களை நடத்தி நாட்டை மீட்ட வேலுநாச்சியார் டிசம்பர் 25 1796-ல் இறந்தார். இதன் தொடர்ச்சியாக இன்று வரை சிவகங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்களின் வம்சா வழி வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பித்தக்கது.

ஜான்சிராணி (கி.பி 1835 - 1858) காலத்திற்கு முன்னரே வெள்ளையனை எதிர்த்து போராடிய முதல் இந்திய விடுதலை பெண் போராளி வீரமங்கை வேலுநாச்சியார் ஒரு தமிழச்சி என்பது தமிழ்நாட்டு பெண்ணின் பெருமையை சேர்க்கிறது. கணவன் இறந்தும் உடன்கட்டை ஏறி மடியும் வழக்கமுள்ள ஒரு காலக்கட்டத்தில் தன் கணவன் சிவகங்கை அரசர் முத்து வடுகநாதரை கொன்ற வெள்ளையர்களைத் துணிவுடன் எதிர்த்து நின்று போரிட்டுப் பழி தீர்த்ததுடன் வெற்றியும் பெற்று “சுதந்திரதேவி“ போல் அரசாண்ட தமிழ் மங்கை வேலுநாச்சியார்.

**முடிவுரை**

வேலுநாச்சியார் போல் ஒவ்வொருப் பெண்களும் அந்நியருக்கு இடம் கொடுக்காமல் நம் நாட்டிற்காக பெருமை சேர்க்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் ஏற்படும் ஒவ்வொரு கொடூர செயல்களையும் எதிர் கொண்டு நம் நாட்டில் ஏற்படும் பிரச்சனைகளை முறியடித்து நம் **தாய்திருநாட்டை** நல்லதொரு நாடாக கொண்டு வர முடியும். **“பெண்களால் முடியாதது எதுவுமில்லை”** என்பதை வேலுநாச்சியார் நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றார் என்பதை கூறி எனது கட்டுரையை முடிக்கிறேன்.

# சூழலியல் பெண்ணியம் - ஒரு பார்வை

***லோ.துளசிமணி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.

**முன்னுரை**

வேளாண் நாகரிகத்தின தொடக்கத்தில் போற்றப்பட்ட தாய்வழிச்சமூகம் நாளடைவில் தந்தைவழிச்சமூகமாக மாற்றமடைந்தது. அதனைத்தொடர்ந்து பெண் என்பவள் பல ஒடுக்குமுறைகளுக்குள் உட்படுத்தப்பட்டாள். இதில் கல்வி மறுப்பும் ஒன்று, மேலும் பேச்சுரிமை, சொத்துரிமை கூட மறுக்கப்பட்டிருந்தது. இத்தகைய அடக்குமுறையைத் தகர்த்திடும் விதமாக, பெண்கள் தங்கள் எண்ணத்தின் வெளிபாடுகளை வெளிக்கொணர பெண் உரிமை என்ற கருத்தாக்கம் உருவானது. அதுவே, காலப்போக்கில் ‘பெண்ணியம்’ என்ற கோட்பாடாக தோற்றம் பெற்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதேனும் ஒரு கருத்தை மையமாகக் கொண்டு கோட்பாடுகள் பல தோன்றியவாறே உள்ளன. அவ்வகையில் இயற்கையை மீட்க சூழலியல் என்ற கோட்பாடு சூழலியலாளர்கள் மத்தியில் பேசப்பட்டது. தொன்மை இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை இயற்கையையும் பெண்மையையும் ஒரு நுகர்வுப்பொருளாகவே சித்தரிக்கிறது. எனவே, இயற்கை மற்றும் பெண்ணை ஒருசேர மீட்கும் நோக்கில் உருவானதே ‘சூழலியல் பெண்ணியம்’. சூழலைப் பேணும் பெண்களின் இயற்கை மீட்புப்போராட்டங்களை முன்வைத்து இக்கட்டுரை அமைகிறது.

**சூழலியல் திறனாய்வு**

இயற்கைக்கும் மனிதன் உட்பட மற்ற உயிரினங்களுக்கும் உள்ள உறவைப் பற்றிப்பேசுவது சூழலியல். நடப்பு நூற்றாண்டின் மாபெரும் பிரச்சினையாக வளர்ந்து கொண்டிருக்கும் சூழல் மாசுபாடுகளைத் தடுத்திடும் விதமாகப் பல பசுமை இலக்கியங்களும் தீர்வுகளும் தோன்றிய வண்ணம் உள்ளன. அவ்வகையில் இலக்கியங்கள் வழி இயற்கையைப் பேணுவது குறித்து க.பஞ்சாங்கம் அவர்கள் தான் எழுதிய இலக்கியங்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும் எனும் நூலில் “இலக்கியத்திற்கும் சுற்றுக்சூழலுக்கும் உள்ள உறவைக் கற்பதே சூழலியல் திறனாய்வு” என விளக்கமளிக்கிறார்.

நுஉழ உசவைைஉளைஅ என்னும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் வில்லியம் ரூக்கார்ட் ஆவார். அவரைத் தொடர்ந்து செரில்கிலாட் என்ற மாணவி தனது கட்டுரை ஒன்றில் பயன்படுத்தியதன் மூலம் சூழலியல் திறனாய்விற்கு உயிர் கொடுத்தார். அவரை அடுத்து டேவிட் மாசல், லாரன்ஸ் பௌல் என்பவர்களால் இது ஒரு முக்கிய இலக்கியமாக வளரத்தொடங்கியது. லாரன்ஸ் பௌல் எழுதிய ‘சுற்றுச்சூழல் கற்பனைகளும் அழியும் பூமி குறித்த இலக்கியங்களும் என்ற நூல் சூழலியல் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

**சூழலியல் பெண்ணியம்**

நவீனமயமாக்கமும் தாராளமயமாக்கமும் வளர்ச்சியடையத் தொடங்கியது முதல் இயற்கை மீதான லாபவெறி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இயற்கைக்குப் பயந்து வழிபட்டு வந்த நிலை மாறி அவற்றை மனிதனின் தேவைக்கு உடைமையாக்கிக் கொண்டான். பொருளாதார வளர்ச்சியை மட்டுமே நோக்கமாக் கொண்டபின் இயற்கை சார்ந்த மரம், மண், நீர் முதலான ஐம்பூதங்களின் மீதும் உயிருள்ள விலங்கு மற்றும் பறவைகளின் மீதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டான். இதனால், ஏற்படும் சூழலியல் பாதிப்புகளால் முதலில் பாதிக்கப்படுவது பெண்களே ஆவார். இதனை, பேரா.க.பஞ்சாங்கம் “சுற்றுச்சூழல் மாசுபடும் பொழுது பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகிற பாலினம் பெண்கள் தான் என்கிற பார்வையிலிருந்து சூழலியல் பெண்ணியம் உருவாகிறது.”என்று விளக்குகிறார். பெண்கள் பிறந்து வளர்ந்த இடத்திலிருந்து கணவன் வீட்டிற்குச் செல்லும் போது அவளுடைய சூழல் முழுதும் மாறுபடும். இருந்தபொழுதிலும் அவள், அதை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தன்னைத் தக்கவைத்துக்கொள்கிறாள். எனவே பெண்கள் சூழலுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொள்வதிலும்,

வாழும் சூழலைப் பாதுகாப்பதிலும் பெரும் பங்காற்றுகின்றனர். அதற்காக பல எதிர்ப்புகளையும் மீறிச் சமுதாயத்தில் போராடி வருகின்றனர்.

சங்ககாலம் முதல் இன்று வரை பெண் என்பவளுக்குப் பெயரளவில மட்டுமே மரியாதை கொடுக்கப்பட்டு சடங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. பெண் என்பவள் பூப்பெய்தும் போது நடக்கும் சடங்கு ஓர் ஆணுக்கு மனைவியாகும் நிலையை எய்திவிட்டாள் என்பதைத் தெரிவிக்கும் விதமாகச் சடங்கு நடத்தப்படுகிறது. மேலும், திருமணத்தின் போது வரதட்சணை என்னும் பெயரில் ஓர் ஆணிற்குப் பணப்பயிராக மாறுகிறாள். திருமத்திற்குப் பிறகு நுகர்வுப்பொருளாகவும் வாரிசைப் பெற்றெடுக்கும் கருவியாகவும் உட்படுத்தப்படுகிறாள். குழந்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் கணவனால் கைவிடப்படுகிறாள்.

பெண்ணைப் போலவே இயற்கையும் பல இன்னல்களுக்கு உள்ளாகின்றன. நிலத்திலிருந்து கனிம வளங்கள், மீத்தேன், ஹைட்ரோ கார்பன் எடுத்தல், மலைகளில் பெரிய ஆயுர்வேத நிறுவனங்களால் மூலிகை எடுக்கப்படுவதும், மண்சரிவை தடுக்கும் மரங்களை அழித்துப் பணப்பயிர்கள் பயிரிடுவதும், காடுகளில் மரங்களை வெட்டுதல், விலங்குகளை வேட்டையாடுதலும், கடல் பகுதிகளில் கடல் அட்டை, கடல் குதிரை போன்றவற்றை இலாப நோக்கத்தோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது. மேலும், விசைப் படகுகளின் துணையோடு அரசு அனுமதியின்றி இரட்டை வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் போன்ற செயல்களால் அதிக வளங்கள் சுரண்டப்படுகிறது. இயற்கையின் கொடையாகிய நிலம், நீர், மலை, காடு, போன்றவற்றிற்குப் பூமாதேவி, மலைமகள், வனமகள், கடல்மாதா, காவேரி, யமுனை என பெண்ணின் பெயர்களை வைத்து சிறப்பு செய்த காலம் மாறி இன்று பெண்களும் இயற்கையும் நுகர்வுப்பொருளாகவே பார்க்கப்படுகின்றன.

மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்திருந்தபோது அதனைக் கடவுளாக வணங்கினான். இயற்கை சீற்றங்களிலிருந்தும் விலங்குகளிடமிருந்தும் தன்னை காத்துக்கொள்ளும் பொருட்டு அவற்றைக் குறியீடுகளாக வைத்து வணங்குவதோடு சடங்குகளையும் செய்து வந்தான். ஆனால் இன்றோ இயற்கையானது முதலாளித்துவத்தின் லாபவெறிக்காகச் சுரண்டப்படுகிறது. அந்நியர்களின் அநாவசியத் தேவைகளுக்கு நம் நாட்டின் அடிப்படை மூலப் பொருள்களை இழப்பது நம் அழிவுக்கு நாமே வளர்ச்சிக் குழல் ஊதிக்கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுகின்றது.

**பெண் எழுத்தாளர்களின சூழலியல் பார்வை**

பெண்கள் தங்கள் மனதில் தோன்றும் கருத்துக்களை வெளிப்படையாகப் பேசுவதில்லை. எனவே எண்ணத்தில் எழுந்தவற்றை வெளிக்கொணர பெரும்பாலும் கவிதை, சிறுகதை, போன்ற இலக்கியங்களையே துணை கொள்கின்றனர். அவ்வகையில் சுற்றுச் சூழலைப் பேணும் பெண்கவிஞர்கள் வைகைச்செல்வி, சல்மா, சக்திஜோதி, மாலதி மைத்ரி, தேன்மொழி போன்ற பெண்கவிஞர்கள் இயற்கைப் பாதுகாப்பு குறித்த சிந்தனைகளைக் கவிதைகளில் பதிவுசெய்து வருகின்றனர். அவற்றில் இயற்கையோடு உறவாடும் வைகைச்செல்வியின் 'அம்மி' எனும் கவிதைத் தொகுப்பு சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது. அதனை,

**"இறைவா ஒரு**
**வரம் வேண்டும் எனக்கு**
**வெட்டவெளியில் நின்றாலும்**
**பட்டமரமாய் ஆனாலும்**
**பூங்கதவாய் உருவெடுப்பேன்**
**வெட்டவரும் மனிதனை**
**விரட்டிப் பிடித்து**
**உயிரைத் தொங்க விடுவேன".**

என்ற கவிதையின் வழி தனக்கு இயற்கையின் மீதுள்ள பற்றையும் இயற்கையை அழிக்கும் மனிதனின் உயிரை எடுப்பதாகவும் பதிவு செய்துள்ளார். மேலும் இயற்கையை அழிக்கும் மனிதர்களுக்குப் 'பஞ்ச பூதங்கள் பூதங்களாகவே இருக்கட்டும்' என்கிறார். தொழில்மயம், நகரமயம், வாகனப்பெருக்கம் போன்றவற்றால் ஏற்படும் வளிமண்டல மாசுபாடுகளைத் தவிர்க்க முடியாமல் போய்விட்டன. என்பதனை நீலமணி தமது கவிதையில்,

**"நாளும் நஞ்சுண்டு**
**காற்று மண்டலம் கண்செருகுகின்றர்........**
**வீங்கும் கடல் நீரில் தீவுகள் தலை முழுக்கு"**

என்னும் வரிகளில் வாகனம் மற்றும் தொழிற்சாலை வெளியிடும் நச்சுப்புகை, காற்று மண்டலத்தை மாசடையச் செய்கிறது. மரங்களின் அழிவால் புவி வெப்பமடைதலும் புவி வெப்பத்தால் பருவங்களின் மாற்றமும் வாழும் சூழலை நிலை குலையச் செய்கிறது. மேலும் பல நதிகள், ஆறுகளில் ஓடும் கழிவுகளால் கடலும் மாசடைகிறது என்பன போன்ற சிந்தனைகளைக் காணமுடிகின்றது.

எழுத்தாளர்கள் எப்பொழுதும் தனது எழுத்து வரிகளின் வழி மனதில் நுழைந்து பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதுண்டு. அவ்வகையில் இயற்கையோடு ஒன்றி வாழும் சக்திஜோதி தான் கண்ட இயற்கைச் சூழலின் நிலையைப் பற்றி தன் கவிதைகளில் ஆதங்கத்தோடு பதிவு செய்கிறார். அதனை, “மணல் இல்லாத ஆறு” என்னும் அவருடைய கவிதையில்

**“ஆற்றங்கரையில் நாங்கள் நட்டுவைத்த**
**செடிகளை யாரோ பிடுங்கி எறிந்து விட்டனர்,**
**தட்டாங்கல்லுக்கு பொறுக்கி வைத்திருந்த**
**கூழாங்கல்லைக் காணவில்லை**
**ஊத்து தோண்டிவிளையாடும் சிறுமிகள்**
**மிரண்டு ஓடுகின்றனர்**
**ராட்சஷ ஓனாய்களைப் போல**
**ஓலமிட்டு வருகிறது மஞ்சள் நிற லாரிகள்**
**ஈரம் உலர்த்துவதற்கென நின்றிருந்த வேம்புகள்**
**இன்னும் சிறிது நேரத்தில் விழப்போகின்றன**
**லாரிகள் சுமந்துபோகும் நதி மணலில்**
**ஈரம் வற்றிட சுருண்டு மடிகின்றன சிறு நத்தைகள்”**

என்னும் கவிதையில் சிறுவயதில் ஆற்றில் விளையாடிக் கொண்டே மீன்பிடித்தலும் நீரில் இருக்கும் கூழாங்கற்களை எடுத்து விளையாடியதும் ஆற்றின் அருகில் சிறு குழி தோண்டி அதில் வரும் ஊற்று நீரை அள்ளிப் பருகியதையும் பசுமை நினைவுகள் மாறாமல் பதிவு செய்கிறார். அதே ஆறானது மணல் அள்ளும் கம்பெனி லாரிகளின் சக்ரங்களின் அடியில் நசுங்கி உயிர்ச்சூழல் அழிவை ஏற்படுத்தியதையும் பதிவுசெய்துள்ளமை மனதைக் கணக்கச் செய்கிறது. இதில் ‘ஈரம் வற்றிட சுருண்டு மடிகின்றன சிறு நத்தைகள்’ என்ற வரிகளில் முதலாளிகளின் லாபத்திற்காகப் பாமரமனிதன் ஒரு நாள் கூலிக்கு மணல் அள்ளும் வேலை செய்து தன் சூழலைத் தானே அழித்துக்கொள்கிறான் என்பதை மறைமுகமாக சொல்ல விளைகிறார். அதோடு மனிதனின் வாழ்நாள் அழியும் தருணத்தை எதிர் நோக்கிச் செல்கிறது என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

**பெண்களின் சூழலியல் போராட்டங்கள்**

படைப்புகளின் வழி சூழலியலைப் பேணும் பெண்போராளிகள் ஒருபுறம் என்றால், போராட்டங்களின் வழி சுற்றுச்சூழலைக் காத்திடப் போராடும் பெண்கள் மறுபுறம் தீவிரமாகச் செயல்படுகின்றனர். நாம் வாழும் இயற்கைச் சூழலை வளரும் தொழில் நுட்பங்களிடமிருந்தும் கார்ப்ரேட் கம்பெனிகளிடமிருந்தும் மீட்கப் பெண்கள் பல வழிகளில் போராடிப் பல இன்னல்களையும் சந்திக்கினற்னர். உதாரணமாக மீத்தேன் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடிய வளர்மதி என்னும் கல்லூரி மாணவி சிறைக்குச் சென்றதும், சிறையிலிருந்து வந்து மீண்டும் அதற்காகப் போராடியதும் மறக்க முடியாது.

மேலும், இயற்கை வளம் மிகுந்த உத்திரகாண்ட் மாநிலத்தில் மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்கப் பெண்கள் மரங்களைத் தழுவிக்கொண்டு போராடியதோடு, ‘தங்களைக் கொன்று விட்டு மரங்களை வெட்டுங்கள்’ என்று உறுதியான மனதுடன் எதிர்த்துப் போராடி மரங்களைப் பாதுகாத்தனர். அதைத் தொடர்ந்து பதினைந்து வருடங்களுக்கு மரங்களை வெட்டக்கூடாது என தடைவிதிக்கப்பட்டது. காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கத் தொடங்கிய இப்போராட்டமே “சிப்கோ” இயக்கமாக மாறியது. சிப்கோ இயக்கத்தின் வாசகம் என்னவெனில் ‘சூழ்நிலையியல் தான் நிரந்தரப் பொருளாதாரம்’ என்பதாகும். அதுபோல, சமூகப் போராளியான மேதா பட்கர் எனும் பெண்மணி பசுமைப் போராட்டத்தின் அடையாளமாக கருதப்படுகிறார். காரணம் அவர் தன்னோடு சில பெண்களைச் சேர்த்துக்கொண்டு கும்மிடிப் பூண்டி அருகில் விவசாய நிலத்தில் தொடங்கவிருந்த டயர் தயாரிப்பு நிறுவனத்தை எதிர்த்துப் போராடினார். மேலும் 1969 – ல் நர்மதை நீர் சச்சரவுத் தீர்ப்பாயம் ஏற்பட முக்கியக் காரணமாக இருந்தார். 1986 –ல் ‘நர்மதா பச்சோ அந்தோலன்’ என்ற அமைப்பையும் தொடங்கினார்.

பல பெண் சூழலியல் போராளிகள் வெவ்வேறு இடங்களில் பிறந்து வெவ்வேறு சூழலில் வளர்ந்திருந்தாலும் அவர்களின் சூழலியல் சார்ந்த ஒருமித்த நோக்கம் வெவ்வேறு வழிகளில் சூழலைப் பேணுவதாகவே உள்ளது.

மேதா பட்கர் போன்றே யானைகளைப் பேணும் சிந்தியா மோஸ், தமிழகத்தில் பிறந்து அமெரிக்காவில் சூழலியல் தொடர்பான கல்வியைப் பயின்று காட்டுயிர்களை வளர்க்கும் பிரியா டேவிதார், நெகிழிகளை மறுசுழற்சிக்கு அனுப்பவும் குப்பைகளை ஒழிக்கவும் போராடிய அல்மித்ரா போன்றோர் சூழலியலை மீட்க பல வழிகளில் போராடுகின்றனர். அதற்காகப் பல முதலாளித்துவ வர்க்கத்தால் இன்னல்களையும் அடைந்துள்ளனர்.

**முடிவுரை**

பெண்ணுரிமைக்காகப் போராடும் பெண்ணியவாதிகள் சுற்றுச்சூழலையும் பெண்ணியத்தையும் ஒரு சேர மீட்கும் விதமாகத் தோற்றுவித்ததே சூழலியல் பெண்ணியம். பெண்ணும் இயற்கையும் நுகர்வுப்பொருளல்ல என்பதையும் பல நிலைகளைக் கடந்த நிலைகளிலும் தன்னை மறுசுழற்சி செய்துகொள்ளும் திறனை உடையது என்பதை மறுக்க முடியாது. இயற்கையை அத்தியாவசியத் தேவைக்கு மட்டுமே பயன்படுத்தல் வேண்டும். சுயநலத்திறகாகச் சுரண்டுதல் கூடாது என்பதே சூழலியல் போராளிகளின் வேண்டுகோளாக உள்ளது. எனவே எதிர்காலத்தின் தேவையை உணர்ந்து செயல்படுவோம். இயற்கையைப் பேணுவோம்.

# ஆனந்தாயி நாவலில் பெண்கள்

***முனைவர் சீ.வைஜெயந்திமாலா,** தமிழ் உதவிப் பேராசிரியர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-7.

இலக்கியம் என்பது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ள உதவுவதுடன் உணர்வுகளை அழகுக்கலையாக்கி அவற்றின் மூலம் இன்பத்தைத் தரும் ஒரு கருவியாக உள்ளது. அத்தகைய இன்பம் திட்பமானதாகவும் இருக்க வேண்டும். தமிழ்மொழியில் உள்ள தற்கால இலக்கிங்களுள் ஒன்றான ஆனந்தாயி புதினத்தில் பெண்கள் எவ்வாறு ஆசிரியர் படைத்துள்ளார் என்பதோடு ஆனந்தாயி (1992) கதைக்கரு, கதைச்சுருக்கம், பெண் பாத்திரங்களின் வகைகள் இவற்றை வெளிப்படுத்துவே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆசிரியர் குறிப்பு**

ஆனந்தாயி நாவலின் ஆசிரியர் சிவகாமி என்ற பெண் எழுத்தாளர். தாயார் – தாண்டாயி. தந்தை – பழனிமுத்து. தந்தை இருதார மணம் புரிந்தவர். தலித் மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் தலைவர். 1952-1957 வரை பெரம்பலூர் வட்ட சட்டமன்ற உறுப்பினர். சிவகாமி இந்திய ஆட்சித் துறை பணியாளர் (IAS) தேர்வில் வெற்றி பெற்ற மாவட்ட ஆட்சியர். இந்திய மாணவச் சங்கத் தலைவியாக சிறிதுகாலம் இருந்தவர். தலித் மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் தலைவி.

**கதைக்கரு**

நகரமாக வளர முற்படும் போது மாறுதலுக்குள்ளாகும் ஒரு கிராமத்தின் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை முறையையும் அம்மக்களில் ஆண்களால் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் கருவாகக் கொண்டு ஆசிரியர் ஆனந்தாயி நாவலைப் படைத்துள்ளார்.

**கதைச்சுருக்கம்**

ஆனந்தாயி நாவலின் கதைத்தலைவன் பெரியண்ணன். இவன் காண்டராக்டராகி ரோடு போடுதல், பாலம் கட்டுதல் போன்ற ஒப்பந்தங்களை எடுத்து அந்தஸ்தை உயர்த்தி கொள்கிறான். இவரது மனைவி ஆனந்தாயி. இவர்களுக்கு ஆறு குழந்தைகள். மனைவியையும் குழந்தையையும் கொத்தடிமையாக வைத்து துன்புறுறுபவன். ஆனந்தாயி இளமையிலேயே பெற்றோரை இழந்தவள். அதனால் கணவன் செய்யும் கொடுமைகளை குடும்பநலனுக்காக பொறுத்துக் கொள்கிறாள்.

தன் தொழில் அதிக வருமானம் கிடைத்ததும் பெரியண்ணன் மது, மாது என்று வாழ அச்சமூகத்தை சேர்ந்த விடுதியில் உள்ள லெட்சுமியை அழைத்து வந்து குடும்பம் நடத்துகிறான். காலப்போக்கில் பெரியண்ணன் சுயரூபம் தெரிய அவனை விட்டுவிட்டு செல்கிறாள். ஆனால் அவளை அழைத்து வருகிறான். இறுதியில் அவள் தற்கொலை செய்து கொள்கிறாள்.

ஊர் பெரிய மனிதர்களுள் ஒருவனாக பெரியண்ணனின் எதிரியாகவும் கங்காணி விளங்குகின்றான். இவளது மூத்த மனைவி இறக்க இரண்டாவது மனைவி கங்காணியம்மாள் இவளுடைய மூத்த மகளைத் தவிர மற்ற இருவரும் தந்தையோடு சேர்ந்து பெரியண்ணனின் எதிரியாக விளங்குகின்றனர்.

இவரது மூன்றாவது மகன் மாணிக்கத்துடன்தான் லெட்சுமி இறுதியாக வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். இதன் காரணமாகத்தான் இரு பிரிவினரிடையே இருந்த பகை முற்றி கைகலப்பு ஏற்படுகின்றது.

பெரியண்ணன் வீட்டில் வேலை பார்க்கும் வடகத்தியான். வடக்கத்தியானுக்கு மூன்று குழந்தைகள். வடகத்தியான் மது அருந்துவதால் இறந்துவிடுகிறான். அவனது மகள் பூங்காவனம் சிறுபருவத்திலே கூலி வேலை செய்கிறாள். சூழலால் காதல்வயப்பட்டு கர்ப்பமானதும் அவனை விரும்பியவன் கைவிட்டு விடுகிறான். அந்த கவலையில் தாயும் இறந்துவிடுகிறாள்.

பூங்காவனத்துக்கு குழந்தை பிறந்ததும் உரிமை கொண்டாடி வரும் கணவனை துரத்தி விடுகிறாள்.

இறுதியாக ஆனந்தாயி குழந்தைகள் திருமணம் முடிந்து பேரக் குழந்தையுடன் வாழ்கிறாள். தன் சிறுவயதில் நடந்த துன்பத்தை நினைத்துப் பார்க்கிறாள். இறுதிவரை பெரியண்ணன் திருந்தவே இல்லை என்பதோடு ஆசிரியர் கதையை முடிக்கிறார்.

**ஆனந்தாயி நாவலில் பெண்கள்**

மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கக்கூடிய பெண்களின் வாழ்வில் சிக்கல்கள் பெருகிக் கொண்டேதான் இருக்கின்றன. கண்ணுக்குப் புலப்படக்கூடிய பெண்ணடிமைத்தனம் ஒழிந்துவிட்டதுப் போலத் தோன்றினாலும் வெளிப்படா வண்ணம் புதிய வடிவங்களில் பெண் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

**ஆனந்தாயின் துயரநிலை**

பெண் என்பவள் எத்தகைய கொடுமைகளையும் தாங்கிக் கொள்வாள். ஆனால் தன் கணவன் இன்டினாரு பெண்ணுடன் உறவு கொண்டுள்ளான் என்பதை தாங்கிக் கொள்ளமாட்டாள். தன் குடும்ப நலனுக்காகவும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்கிறான். இப்புதினத்தில் தலைமைப் பாத்திரம் ஆனந்தாயி.

**ஆனந்தாயி தாயாகும் நிலை**

மருத்துவ வசதிகள் அதிவேகமாக முன்னேறி வரும் இக்காலத்தில் இன்னும் சில கிராமப்புற பெண்கள் மருத்துவத்தின் உதவி இன்றியே குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். அதன் விளைவாக பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இதனை இப்புதினத்தில் வாயிலாக ஆசிரியர் விளக்கியிருக்கிறார்.

> **“எலேய் அம்மாளுக்கு ஜன்னி கண்டு இருக்குதுடா… ஓடிப்போய் டாக்டரை அளைச்சாடப்பா… நெஞ்சில் அடித்துக் கொண்டாள் முத்தக்கா… (ஆனந்தாயி,ப.3)**

சிறிது நேரத்தில் டாக்டர் வந்தார். தொப்புள் கொடியை அறிவாளால் அறுத்தாங்களா? என்று கேட்டப் பிறகு ஊசியை செருகினார் உடம்பில்… சிறிது நேரம் களித்து ஆனந்தாயி தன்னிலைக்குத் திரும்பினார்.

நம் நாட்டில் பல இடங்களில் நடக்கும் கணவன்மார்களின் கொடுமைகள், சந்தேகம் கொள்வது, பெண்களை அடிமைப்படுத்தி ஆள நினைப்பது, துரோகம் செய்வது போன்ற பல நிலைகளில் ஆண்களின் ஆணாதிக்கம் வெளிப்படுத்துகின்றது. இப்புதினத்தில் ஆனந்தாயி கணவன் பெரியண்ணனை மனைவி, குழந்தைகளை தனக்குக் கீழ்படிந்து வாழ வேண்டும் என்பதை ஆசிரியர் சிவகாமி அழகுபட சித்தரித்துள்ளார்.

ஒருநாள் பெரியண்ணன் சுற்று சுவரருகில் ஒரு உருவத்தைக் கண்டு யாரது என்றதும் அந்த உருவம் ஏன என்று கேட்காமலே சற்று தூரம் நடந்துச் சென்றது. உடனே பெரியண்ணன் விரைந்து அந்த உருவத்தைப் பிடிக்கின்றான். அந்த உருவம் காது கேளாத ஊனமானவன் என்பதை அறிந்து ஆனந்தாயி அவள் மீது இரக்கம் காட்டுகிறாள். அவள் மீது இரக்கம் காட்டுவதை விரும்பாத பெரியண்ணன்,

**ஏன்டி அவள் என்ன கள்ளபுருசனா, ரொம்பத்தான் பாவப்படறியே… என்கிறான் (ஆனந்தாயி, ப.75)**

இதன் மூலம் சில ஆண்களால் பெண்கள் இயலாதவர்களைப் பார்த்து பாவப்படக்கூட முடியாத நிலையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**பாலியல் துன்பம்**

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் முக்கிய கொடுமைகளுள் ஒன்றானது பாலியல் மணம். இத்தகைய கொடுமையால் பல பெண்கள் பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். ஆனந்தாயி வயதுக்கு வரும் முன்பே பெரியண்ணனுக்கு மணமுடிக்கப்படுகிறாள். அதனால் அவனிடம் பாலியல் துன்பத்திற்கு ஆளாகிறாள்.

**லெட்சுமி நிலை**

பெண் சுதந்திரமாக வாழ வேண்டும் என முடிவெடுத்தாலும் அந்த முடிவே அவளுக்கு தீங்காய் அமைகின்றது. இதனை ஆசிரியர் லெட்சுமியின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

தன்னை பெரியண்ணன் சந்தேகம் கொள்வதைப் பிடிக்காத அவள் அவனை விட்டு விலகி செல்ல முடிவு எடுக்கிறாள். ஆனால் அவள் எடுத்த முடிவு எதுவுமே அவளுக்கு பலனளிக்கவில்லை. மாறாக அடியும் உதையும் கிடைத்தது.

> **ஊளையிடுவது போல் அழுகுரல் வாசலில் கேட்டது பெரியண்ணனும் மணியும் அவளை மாறி மாறி உதைத்துக் கொண்டு வந்தனர்... முழுசும் நனஞ்சவளுக்கு முக்காடு எதுக்குடி?... (ஆனந்தாயி, ப.178)**

லெட்சுமி கேவலமானத் தொழிலைச் செய்தாலும் மனம் திருந்தி வாழ நினைக்கும்போது அவளின் இறந்தகாலம் வாழவிடவில்லை. இறுதியாக நஞ்சை உண்டு இறந்து விடுகிறாள்.

**கலாவின் துயரம்**

ஆணின் வார்த்தைக்கு மறுவார்த்தைக் கிடையாது என்பதைப் போன்றே இன்றைய ஆணாதிக்க சமூகத்தின் எண்ணம் உள்ளது என்பது வெளிப்படல்.

ஆனந்தாயின் மூத்தமகள் கலா. தனக்குப் படிஞ்சிதான் வாழ வேண்டும். தன் குடும்பத்தில் உள்ளவர்கள் என்று நினைக்கு பெரியண்ணன் அடிமைப்படுக்கிறான்.

> **"ஆம்புளப் பயக் கிட்டப் போய் புஸ்தகம் வாங்கிக்கிட்டு வர்ற அளவுக்கு ஒனக்கு தகிரியம் யார்பு குடுத்தது ஒங்கம்மா ஒன்ன ஊர் பொறுக்கச் சொல்லி தாரவார்த்துட்டாடி? (ஆனந்தாயி, ப.48)**

**நீலவேணி**

தலித் பெண்களை சில அதிகாரிகளும் சில பெரிய மனிதர்களும் பல பாலியல் துன்பங்களுக்கு ஆளாக்குகின்றனர். அத்தகைய கொடுமைகளை இப்புதினத்தில் நீலவேணி கதாபாத்திரத்தின் மூலம் எடுத்துக் கூறியுள்ளார்.

நீலவேணி என்பவள் கங்காணி அம்மாளின் இளைய தங்கை. நல்ல அழகு வாய்ந்தவள். ஊரில் உள்ள ஆண்கள் எல்லாம் பார்க்கத் துடிக்கும் அழகியாகத் திகழ்பவள். தம் கல்வி பருவத்தில் சில தீய எண்ணம் கொண்ட ஆசிரியர்களால் பாலியல் துன்பத்திற்கு ஆளாகி முப்பது வயதாகியும் திருமணம் ஆகாமல் இருக்கிறாள்.

> **படிக்கும்போது பள்ளிக்கூடத்தில் ரெங்கசாமி வாத்தியார் அவள் பரீட்சை எழுதுவதைப் பார்க்கும் சாக்கில் உரசிக் கொண்டு நிற்பதும் விடை சொல்லித் தருவதும் அதிக மார்க்குகள் போடுவதும்... (ஆனந்தாயி, ப.36)**

இவ்வாறாக பெண்கள் சமூகத்தில் உள்ள சிலரால் பல கொடுமைகளுக்கு ஆளாகின்றனர்.

**பூங்காவனம்**

நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டிய பெண்கள் பலர் வறுமைச் சூழ்நிலையாலும், குடும்ப குதர்கங்களாலும் படிப்பைத் தொடர முடியாமல் வாழ்க்கையில் பின்தங்கிப் போக வேண்டிய, பழிக்கு ஆளாவதை பூங்காவனம் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

> **வடக்குத்தியாள் பூங்காவனத்துக்கு பரிந்து குசுகுநுத்தான். பூங்காவனத்தை களைவெட்ட அழைத்து வந்திருந்தாள்... அவளுடைய படிப்புக்கு முற்றுப்புள்ளி...**

இவ்வாறக வறுமையின் கொடுமையும் கணவன் இறந்தவுடன் பெண் பொட்டு பூ இன்றி வாழ வேண்டும் என்பதே மிகப் பெரிய கொடுமை. துணை இன்றி வாழ்ந்தால் அவளை இச்சமூகம் பார்க்கும் பார்வை மிகவும் வேதனையாக உள்ளது.

**பெண்களின் துணிவு**

பெண்கள் பல இடங்களில் ஆணுக்கு அடிப்பணிந்து வாழ்ந்தாலும் சில நேரங்களில் பொங்கி எழுகின்றனர் என்பதையும், ஆணாதிக்க வெறியர்களை சவாலுடன் எதிர்கொள்ளும் பெண்கள் இருக்கின்றனர் என்பதை லெட்சுமியின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்கள் பல விதங்களிலும் பல நிலைகளிலும் சுரண்டப்படுகின்றனர். ஒரு பெண் தாயாக இருக்கும் நிலையில் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல சோதனைகளை எதிர்கொண்டு வெற்றி காண வேண்டியுள்ளது.

குழந்தை தொழிலாளர் நிலை, பாலியல் விவாகம் முதலியவை கண்டிக்கப்பட வேண்டும்.

தலித் பெண்கள் சமுதாயத்தில் உள்ள சில கொடிய எண்ணம் கொண்ட ஆண்களால் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகின்றனர் என்பதும் இப்புதினத்தின்வழி அறியமுடிகிறது.

# ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் காட்டும் பெண்

***முனைவர் பி.விஜயராணி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கல்லூரி, நாமக்கல்.

**முன்னுரை**

உலகநாடுகளில் பெண்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள் உண்மையென்றாலும் ஆணாதிக்கத்தின் அடக்குமுறை இன்னும் நீங்கவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. தமிழகத்திலும் பிறமாநிலங்களிலும் தற்காலத்தில் குடும்பங்களில் வன்முறைகள் மிகுதியாக நிகழ்கின்றன. பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களில் வெளியிடங்களில் ஆண்களின் வாய்ச்சொற்களால், செயல்களால் பெண்களுக்கு கொடுமைகள் நிகழ்வதை நாள்தோறும் காணமுடிகின்றது. வரதட்சனைக் கொடுமை, பெண் சிசுக்கொலை, பெண்கள் பலரை ஏமாற்றித் திருமணம் செய்தல் போன்ற செயல்களால் பெண்களே மிகவும் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகளைக் கூட ஆணின் வன்கொடுமை விட்டுவைக்கவில்லை. இவற்றிற்கெல்லாம் தீர்வு காணும் வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் ஆய்வுநோக்கோடு அமைந்துள்ளன. இவர்காட்டும் பெண்ணின் நிலைப்பாடு என்னவென்பதை ஆராய்வதாக இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வலி**

'வலி' என்னும் சிறுகதையில் வரும் 'நிலா' என்ற ஓர் சிறுமியின் கதாப்பாத்திரம் இன்று பெண் குழந்தைகளுக்கு ஆண்களால் இழைக்கப்படும் அநீதியை, பாலியல் வன்கொடுமையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. மரப்பாச்சியும், பார்பியும், கார்ட்டூனும், குழந்தைப் பாடலும், விளையாட்டும், களங்கச் சாயல்படாத பனித்துளி வார்த்தையும் என சிட்டுக்குருவியாய் துள்ளித்திரிந்த நிலா பருவமடைந்தது இயற்கையின் நியதியென்றாலும், அவள் இன்னும் ஓர் சிறுமிதான் என்பதை குழந்தையிலிருந்து அச்சிறுமியைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் காரோட்டிக்கு தெரியவே இல்லை. ஆகையால் அவனின் பார்வையில் விஷத்துளிகள் கலக்க ஆரம்பித்தன. அவன்மீது அவள் குடும்பத்தாருக்கும் அவளுக்கும் நம்பிக்கை அதிகமாயிருந்தது. ஆகையால்தான் தொடர்ந்து அவனையே காரோட்டியாக வைத்திருந்தனர். அவன் அடிக்கடி "நம்ம பாப்பா மேல தூசுபடவிடுவேனா? நா கேரண்டியம்மா" என்று கூறுவான். இந்த வார்தையில் பொதிந்திருக்கும் அவனின் காமக்கொடூரம் யாருக்குமே புரியவில்லை.

நிலாவுக்கு வயது பன்னிரண்டை தொட்டதால் அவள் குடும்பத்தில் பிறந்தநாள் கொண்டடினர். வழக்கம்போல் எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்தாள். வழக்கமான பள்ளிச் சீருடையில் இல்லாமல் தலைப்பின்னி, வழுவழுத்தத்தலைமுடியும், பூவாசமும், பட்டும், ஜாக்கட்டுமாய் சாக்லேட் டப்பாவோடு வந்தபோது அந்தக் காரோட்டியின் மனசு பரபரக்கத் தொடங்கியது. அன்று நிலாவைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும்போது தான் ஒன்னும் அறியாத சிறுமியை அவன் கசக்கிப்பிழிந்தான்.

பள்ளிக்கூட வழியிலிருந்து தனிமைத் தோப்புக்குள் வண்டி நுழைந்ததும் நிலா திகைத்தாள். இங்க ஏன் டிரைவர் எனக்கேட்டாள். உன் பிறந்த நாள் இன்று ஆகையால் கோவிலுக்குப் போக வேண்டும் என்றான். தோப்புக்கள் ஓர் கோயில் இருக்கு வா கும்பிட்டுப் போகலாம் என்றான். இல்லை நான் தாத்தாவோடு சாயங்காலம் போறேன் என்றாள். பள்ளிக்கு நேரமாகுதே என்றாள். அடுத்த ஐந்து நிமிடத்தில் பள்ளிக்கூடத்தில் விட்டுவிடுவேன் வா என்றழைத்தான்.

**காரோட்டியின் காமக்கொடூரம்**

அவனின் நம்பிக்கையைச் சுமந்து 'நிலா' கோயில் பிரகாரத்தைச் சுற்றினாள். அந்தக் குருத்து நடக்கும்போதும், கும்பிடும்போதும் அந்ததளிரைத் தீண்டி, உராய்ந்து. ஸ்பரிசித்துத் தனக்குள் தீயின் விதையை ஊன்றிக் கொண்டான் அவன். சிறுமியை அப்படியே உண்ணத் துடித்தான். சாமி பார்த்த மகிழ்ச்சியில் வண்டி ஏறினவள் பாவாடைத்தடுக்கி கீழே விழுந்துவிட்டாள். நிலாவைச் சட்டென இறுக்கிப் பிடித்து அரவனைத்து ஆசுவசைப்படுத்தி, தலை வருடி, பூவாய் பூப்பந்தாய் தூக்கி இருக்கையில் அமர்த்தினான். அவனுக்குள் புதைந்து கொண்டிருந்த எரிமலை வெடித்தது. நிலாவைத் தன் இரும்புக் கரத்தால் இறுக்கினான். அந்தக்

குழந்தையின் ரத்த அணுக்களில் இன்னமும் துளிர்த்திடாத இருக்கும் பிஞ்சியைக் காமத்துளிகளால் நசுக்கிக் கருக்கினான். "உடம்பில் பெண்மையின் மென்மைத்தடம் பதிந்தாலும் மனசுக்குள் மணல் வீடுகட்டி விளையாடும் நிலாவுக்குள், இனுக்கு இனுக்காய் கசடுகளை இறக்கினான். பின்னால் நேரவேண்டிய பெண்நிலை நிலாவுக்குத் தெரிந்தது. கழிப்பறையின் துர்நாற்றத்தோடு, பூந்தோட்டம் துவம்சமானது. அனிச்ச மலரினும் மென்மையான பௌதீகப் பூ மதம்பிடித்த யானையால் சிதைக்கப்பட்டது" சிறுமி துடியாய்த் துடித்து உதிரம் கொட்டக் கொட்ட நொறுங்கினாள்.

வீட்டிற்கு வந்தவுடன் தன் தாயிடம் அம்மா வலிக்குதே, ஐயோ என்று கதறினாள். வீட்டில் உள்ள அனைவருக்கும் நிலாவுக்கு நடந்தது தெரிந்தது. அந்த காமுகன்மேல் வழக்குப் போட்டு சிறையில் அடைக்கலாம் என அவளது தாத்தா சொல்ல, அவளின் பெற்றோரோ அவளின் எதிர்காலத்தை நினைத்து வேண்டாம் என்று சொல்லி விட்டனர். ஆகையால் அவன் பிழைத்தான். ஆனால் சிறுமியும் பெற்றோரும் கண்ணீரில் கரைந்தனர். அவளின் தாத்தா மனவலியில் துடித்தார். இன்று எத்தனைப் பெண் குழந்தைகளும் சிறுமிகளும் இப்படி ஆண்களின் கட்டுக்கடங்கா வக்கிரநிலைக்கு ஆளாகின்றனர், ரித்திகா, ஹாசினி போன்ற எத்தனையோ பெண்குழந்தைகளின் நிலை இன்றும் கேள்விக்குரியாகவே உள்ளது. சிதைத்துப் புதைக்கப்படுகின்றார்கள். என்பதை வெளிப்படையாகவே ஆண்டாள் பிரியதர்ஷினி 'வலி' என்ற தமது சிறுகதையில் பெண்குழந்தைக்கான நீதியைத் தேடுகின்றார் என்பதை இக்கதை விளக்குகின்றது.

ஆண்டாள் பிரியதர்ஷினியின் மற்றொரு கத்தீ. இக்கதையில் ஓர் ஏழைத்தலைவன் மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்றதனால் படும் பாட்டையும், வறுமையின் கோரப்பிடியில் நசுங்கி சிதைவதையும் இக்கதை குறிப்பிடுகிறது. அந்த தகப்பன் சீர்வரிசை எதுவும் செய்ய முடியவில்லை. தன் மூத்த மகளுக்கு திருமணமான சுமையே இன்னும் தீரவில்லை. அதற்குள் அவளுக்கு பிள்ளை பேறு பார்த்து மறுபடியும் குழந்தைக்கு கொலுசு, அரணாக்கொடி எதுவும் வாங்கிப் போட முடியவில்லை திருமணத்தன்று கொடுத்த வாக்கையும் அவளின் தந்தையால் காப்பாற்ற முடியவில்லை.

**மாப்பிள்ளை வரதட்சனைக் கேட்டல்**

மூத்தமகள் சரசுவின் கணவன் காரும், செயினும் வேண்டும் என்ற அடிக்கடி வீட்டில் சண்டைப் போடுகிறான். நீ உன் அப்பன் வீட்டில் போய் நான்கேட்டதை வாங்கி வா என்று அடித்து உதைக்கின்றான். ஒரு நாள் இவனின் தொல்லைத் தாங்காமல் சரசு தன் தந்தை வீட்டிற்குத் தன் குழந்தையுடன் செல்கிறாள். அங்கோ வீடெல்லாம் வறுமை. ஆனாலும் சரசுவின் புலம்பல் நிற்கவில்லை. இதைக் கேட்டத்தந்தை நொந்து போகின்றான்.

மாப்பிள்ளையிட்ட சொல்லு செயினு வேணும்னா என் எலும்பைத்தான் கோர்ந்து செயினாப் போடனும் பேறு காலம் பாக்கறதுக்கே முழி பிதுங்கிடுச்சி. நாக்கு தொங்கிடுச்சி இந்த அழகுல காரு வாங்கப் பணம் வேணும்னா, நா திருவோடு தூக்கித் தெருவோடத்தான் அலையனும். எலும்பும் தோலும்தான் மிச்சம். துணிய உருவுற மாதிரி சம்பந்திம்மா பேசுவாதான். கபோதின்னு என்னைத் திட்டுவதால். ரோஷம் காட்டாதே காதை செவிடாக்கிக்கோ, கௌரவம் பார்க்காத அரசு" 2 என தந்தை புத்திமதி கூறுகின்றார்.

சரசுவின் தாயோ பொட்டப்புள்ளைய பெத்திருக்க புருஷன் வீடுதான் முக்கியம். வைப்பாட்டியாக்கூட இருக்கலாம். ஆனால் வாழாவெட்டியா இருக்கக்கூடாது என்கிறாள். இன்றும் இரு பெண்பிள்ளைகள் இருப்பதால் அங்கேயே வாழு என்று தாயும் புத்தி புகட்டுகின்றாள். இதைக்கேட்ட சரசுக்கு சுமை வாட்டியது. நினைத்துப் பயனில்லை என்றாலும் ஏழ்மை நினைவுகளோடு தன் கணவன் வீடு செல்லுகின்றாள். அடுத்த வீதியில் தன் தாய்வீடு இருந்தாலும் அங்கேயும் நிரந்தரமாய் கதவ அடைக்கப்பட்டது.

**மனைவியின் கற்பை விற்கும் கணவன்**

மனத்தில் நிறைய ரணங்களோடு வந்தவருக்கு வேறோர் ரணம் காத்திருந்தது. சரசுவின் கணவன் அண்ணாமலை தான் காரோட்டும் ஓனருக்கு அண்ணன் ஒருவன் தன் மனைவியை இழந்தவன். வயது ஐம்பது இருக்கும் அவன் வீட்டில் வந்து அமர்ந்திருக்கின்றான். போயி நாலு வார்த்த சிரிச்சிப் பேசு. அவருக்கு உதவி செஞ்சா நானே வண்டி வாங்கி ஓட்டுவேன் என்றான். சரசு இடிவிழுந்ததைப்போல் உணர்ந்தாள்.

**மருமகளின் கற்பை விற்கும் மாமியார்**

நீ என்ன பெரிய கண்ணகியா? பத்தினியா? போடி ஐயா காத்திட்டிருக்காரு என்றாள் மாமி. வயசுப் புள்ளன்னா மயக்குருவியோ? கெழம்னா கசக்குதோ போடி உள்ள என்றாள். தனது குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்த சரசிடமிருந்து குழந்தையைப் பிடுங்கினாள். மல்லிகைப் பூ, புதுப்புடவை, சந்தனம், பன்னீர் பாட்டில் என கணவன் வாங்கிவந்தப் பொருட்களை ஆச்சரியமுடன் பார்த்தாள் சரசு. சரியான நேரத்துக்கு வரச்சொல்லியிருக்கியாப்பா என்றாள் மாமியார். யாரை என்று சரசு கேட்டாள். வரது யாருன்னு தெரிஞ்சாத்தான் முந்தானை விரிப்பீங்களோ? அனாவசியக் கேள்வி கேட்காதே. புருஷன் சொல்றதக் கேளு என்றாள். இப்படிப்பட்ட கேவலமான வேலையெல்லாம் என்னால் செய்ய முடியாது என்றாள் சரசு.

ஓர் பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்ற பழமொழி இங்கு உண்மை. மனதில் எந்தவருத்தமும் இல்லாமல் தன் மருமகள் என்றும் பாராமல் வேறொருவனுடன் தாம்பத்தியம் வைத்துக்கொள் என்று மாமியார் கட்டளையிடுகின்றாள்.

“இந்தா சும்மாக்கெட, முரண்டு பிடிக்காத எம்புள்ள வண்டி வாங்க உங்கப்பனும் பணம் தரமாட்டான். நீயும் சம்பாரிச்சுத் தரமாட்டேன்னா என்ன அர்த்தம்? தம்பி இவ ஒத்த வராளான்னு பாரு இல்லாட்டி வெரட்டியனுப்பு. உனக்கு வேற கல்யாணம் கட்டி வைக்கிறேன். ஆம்பள நீ, ராஜா, எத்தனக் கல்யாணம் வேணுமானாலும் கட்டிக்கலாம். சீரு, செனத்தி, தட்சனைன்னு அத்தனையும் வருமானம் தான். நம்ம ஊருல பொண்ணுக்கா பஞ்சம்? என்று சரசுவின் கற்பை விற்க மகனை ஏற்றிவிடுகிறாள்.

சரசுவோ வேறு வழியில்லாமல் மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஏற்கனவே கிழவன் இருக்கும் அறைக்குள் போவதற்கு முன்பே மாமியார் தள்ளி விட்டுக் கதவைச் சாத்துகின்றாள். அந்த அறையில் எரியும் விளக்கை அணைத்தாள். தன் குழந்தை அழுது கொண்டே இருந்து உறங்கியது. மாமி சொல்கிறாள் குழந்தையை ஒரு ஓரமாய்ப்போடு. அதுக்கென்னத் தெரியவரப் போகுது. ஐயா எவ்ளோ நேரம் காத்துட்டிருக்கார். என்றாள். சரசு எரியும் விளக்கை அணைத்தாள். சாராய நாற்றத்தோடு கிழவன் கால்பின்ன அருகில் எழுந்து வருகின்றான். சரசு மீண்டும் விளக்கை ஏற்றினாள்.

**தன்நிலையை எண்ணி தீயைப்பற்றவைத்தாள்**

கிழவனோ பசியார வா. சீக்கிரம் வா என அழைக்கிறான். எதிர்பாராத நிலையில் பால்கொட்டிய தன் மார்பகம், வயிறு, தொடை, தலை, முகம் என அனைத்து இடங்களிலும் தீவைத்துக்கொண்டாள். சொற்ப நேரத்தில் தன்னையெரித்த தீ அவளது குழந்தையையும் எரித்தது. இந்நிகழ்வு எல்லோருக்கும் தெரிந்ததனால் காவல் துறையில் வழக்கானது குழந்தை எரிந்தது. சரசுவோ உயிருக்குப் போராடினாள் கடைசியில் இறந்தே போனாள். மரண வாக்குமூலத்தில் நேரத்தில் எம்புருஷன்தான் எங்கள எரிச்சாறு என்றாள். இனிமேல் அவனுக்கு தண்டனைக் கொடுத்தால் சரசு பார்க்கவாப் போகிறாள். வாழ்க்கை முடிந்தது. அதாவது கையாலாகாத மனிதன் கணவனாகவும் கையாளாகாத பெண் மாமியாராகவும் வாய்த்தால் இப்படியும் அவலம் நடக்கும் என்பதை ‘தீ’ என்ற சிறுகதை உணரவைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வார்த்தை**

இச்சிறுகதையில் திருமணமாகி ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது 40 ஆண்டுகாலம் குடும்பம் நடத்தி அப்பெண் இறக்கும் நிலையிலும் அவளது கணவனுக்கு அவள்மேல் ஏற்பட்ட சந்தேகம் தீரவே இல்லை. அந்தக் குழந்தை எனக்கே பிறக்கவில்லை என்றான். எங்கு சென்றாலும் நின்றாலும் பாத்தாலும் வார்த்தைகளால் ஊசிபோல் குத்தினான். அவள் மரணவாழ்க்கையைத்தான் வாழ்ந்தாள். இதற்கொல்லாம் காரணம் திருமணத்திற்கு முன்பு ஒருவனைக் காதலித்த விஷயத்தை தன் கணவனிடம் கூறியதுதான். அன்று பிடித்த சந்தேகச் சனி அவள் இறக்கும்வரைத் தொடர்ந்தது.

தான் மரணப்படுக்கையில் இருக்கும்போது இப்போதாவது தன்னைப் பார்க்கமாட்டாரா? இதுவரைப் பேசாத வார்த்தையெல்லாம் பேசமாட்டாரா? என் உயிரின் கடைசி நிமிடம் அன்புத் துளிர்க்காதா? சந்தேகம் மறையதா என ஏங்கியவளுக்கு எஞ்சியது ஏமாற்றமே. இதனை,

“எதுக்காக இப்படி அல்லாடறா? இப்பவோ அப்பவோன்னு இழுத்திட்டிருக்கா? வேற ஏதாச்சும் குறை மனசுல? கடைசி ஆசை ஏதாச்சும் ரகசியமா இருக்கா? என உறவுகள் கரிசனம் காட்ட, வேற எவனும் வந்து பார்க்கனுமோ என்னமோ. யாரு கண்டா அவ ஆசைய?”[4] என அவளின் கணவன் பேசுவது மனசாட்சி அனைவரையும் வேதனையடையச் செய்வதாகும்.

பெண் என்றால் எப்படியும் நடத்தலாம். அவளது நடத்தையில் சந்தேகப்படலாம். ஏனென்று கேட்க யாரும் இருக்கக்கூடாது. பெண் என்றால் தவறு செய்பவள் ஆண் தவறு செய்தாலும் நல்லென். என்ற கட்டுக்கதைகளை பெண்மேல் புகுத்தி இறக்கும் வரை கேவடத்தை அவலத்தையும் கொடுப்பதுதான் ஆணின் வேலை என்பதை மிகச் சரியாகப் படம் பிடித்துக்காட்டுகிறார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

**வெளி**

'வெளி' என்ற இச்சிறுகதையில் கவிதை எழுதத்துடிக்கும் ஒரு பெண்ணின் ஆசையை நிராகரித்து அவளை முட்டாளாக்கி மூளையில் உட்கார வைப்பதோடு ஒரு வீட்டின் மருமகள் என்றாள் அவள் வேலைக்காரி என்பதும், வீட்டாருக்கும் உறவினருக்கும் சேவை செய்யமட்டுமே இருப்பவன் என்பதும் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டு மொத்த குடும்பத்தாரால் எவ்வளவு பெரிய வேதனைகள் சூழ்கின்றன என்பதையும் தெற்றென விளக்குவதாகும்.

**பாரதியின் கவிதையுள்ளமும் இடைமறிக்கும் துன்பமும்**

நிறைய கவிதைகள் எழுதவேண்டும் எனத் துடித்திருப்பவள். வேலைகளுக்கிடையே ஓடிவந்து எழுதுபவள். இரண்டாவது முறை காப்பிக்கான அழைப்பு பொங்கும் பால், தீயும் தோசை, சுண்டிய ரசம், கரைக்க வேண்டிய புளி, மழை வருமுன் எடுக்க வேண்டிய துனி, தங்கும் உறவுகளின் தேவைகள், அக்கம்பக்கத்தார் வருகை, தொலைபேசிகள், அழைப்பு மணிகள் இப்படியாக பலதரப்பட்ட குறுக்கீடுகள். ஒவ்வொருமுறை பேனாவைத் தொடும்போதும் விதவிதமான பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இதற்கிடையிலும் தன் கற்பனைகளில் மனதை முகிழ்க்கச் செய்தாள், தனிமையைத் தேடி தவம் கிடந்தாள். பிறகு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் என் கவிதைக்குத் தனிமையும், தனியறையும் தேவையென தன் கணவனிடம் சொல்லியும் செய்யவில்லை யென்பதால் புதிதாக வோறொரு அறையை வாடகைக்கு எடுத்துத நன்கு எழுதி வந்தாள்.

**மாமியாரின் முனகல்கள்**

பாரதி வீட்டில் உள்ள மாமி மாமனார் நாத்தனார், கொழுந்தனார், உறவினர் என அனைவருக்கும் வேலை செய்து கோண்டேயிருப்பாள். இவள் போனாவை எடுத்தாலே அவர்களுக்குப் பிடிக்காது. நீயெல்லாம் எழுதி என்ன கிழிக்கப்பபோே என்றனர். மாமியோ, தன் மகனிடம் 'கக்கூஸ்ல' உக்கார்ந்து எழுதறாடா உம்பொண்டாட்டி நாதாசரம் த்தூ... பொம்படையா இவ? பெரிய ஔவைன்னு நினைப்பு, என அக்கினி நெருப்பை அடிக்கடி கொட்டினாள்"[5]

**பாரதியின் கனவு நினைவாதல்**

பெண்விடுதலை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என முற்போக்குச் சிந்தனைகளைத் தமது கவிதைகளில் படைத்தாள் பாரதி. தன் கணவனிடம் கெஞ்சியும் தனியறைக்கு ஏற்பாடு செய்யாததால் தானே வாடகைக்கு ஓர் அறையெடுத்து தங்கினாள். தான் தனியாகப் போவதைப் பற்றியோ, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் வெளியேறினாள். எவ்வளவுதான் பெண்ணுக்குப் பொறுமை இருக்கும். இதுவரை பாரதியின் எழுத்துக்களுக்கும், சிந்திக்கும் மனத்துக்கும் தடைபோட்ட மாமியார் கொடுமைகளை உடைத்தெரிந்து புரட்சி நாயகியாய் மலர்ந்தாள். பேரும் புகழும் கவிதைகளால் குவிந்தன.

**முடிவுரை**

ஆண்டாள் பிரியதர்ஷினி தனது சிறுகதைகளில் பெண்ணிற்கு ஏற்பட்ட அவலம், அழுக்கு, கணவனால் நம்பப்படாத கேவலமான சந்தேகம், அறிவிருந்தாலும் அடக்கிவைக்கும் குடும்பச் சூழல் இவற்றையெல்லாம் உடைத்தெரிந்து சுதந்திரப் பெண்ணாய், லட்சிய நாயகியாய் இலக்கியப் படைப்பில் உயர்ந்து நிற்கும் பேராற்றலாய் விளங்கிவருவதை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**அடிக்குறிப்பு**

1. ஆண்டாள் பிரியதர்ஷினி – வலி. ப.77
2. ஆண்டாள் பிரியதர்ஷினி – தீ. ப.104
3. ஆண்டாள் பிரியதர்ஷினி – தீ. ப.107
4. ஆண்டாள் பிரியதர்ஷினி – வார்த்தை. ப.162

# செம்பியன் மாதேவி கலைப்பணிகள் - ஓர் பார்வை

***முனைவர் மு.அபிராமி,** கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (த), கும்பகோணம்.

**முன்னுரை**

செம்பியன் மாதேவி சிறந்த சிவபக்தராகவும், சிவனடியாராகவும் திகழ்ந்த கண்டாராதித்த சோழனின் இரண்டாவது மனைவியும், மழவரையர் மகளும் ஆவார். சைவப்பற்று மிகுந்தவர். **"கலையரசி"**என்று போற்றப் பெற்றவர். பலகோயிலுகளுக்கு அறச்செயல்கள் செய்துள்ளதால் "மாதேவடிகள்" என்று புகழ் பெற்றவர். சிறந்த சிவபக்தரான இவ்வம்மையார் செங்கற் கோயில்களைக் கற்றளியாக்கியவர். திருநல்லம் என்னும் கோனேரிராசபுரத்து பெருங்கோயிலைக் கற்றளியாக்கினார். இக்கோயிலுக்கு "ஸ்ரீ கண்டராதித்தம், என்று பெயரிட்டு மகிழ்ந்தார் செம்பியன் மாதேவியார் தன்னுடைய பெயரிலேயே அமைந்த செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் ஸ்ரீ கயிலாயம் என்ற கோயிலை கற்றளியாக்கினார்.

திருமுதுகுன்றம், திருபாரூர் அரநெறி, திருமணஞ்சேரி, தென்குரங்காடுதுறை, திருக்கோடிகா ஆளாங்கூர், திருத்துருத்தி, திருவக்கரை, திருச்சேலூர் ஆகிய ஊர்களில் உள்ளசிவன் கோயில்களை கற்றளியாக்கினார். புலசிவன் கோயில்களுக்கு திருப்பணிச் செய்துள்ளார். பலகோயில்களுக்கு தங்கக் குடங்களும், வெள்ளிகலன்களும் செய்தளித்துள்ளார் கோயில்களில் வழிபாட்டிற்காக பொன், வெள்ளி, செம்பு, ஆகியவற்றால் திருமேனிகளைச் செய்தளித்துள்ளார் என்பதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

செம்பியன் மாதேவி, கோனேரி, ராஜபுரம் ஆகிய இடங்களில் ஸ்தபதி குடும்பங்களை நிலைபெற செய்து செப்புத் திருமேனிகளை வார்க்கும் கலையை வளம் பெறச்செய்தார்.

தொடக்க காலத்தில் சிறிய அளவில் செய்யப்பெற்ற திருமேனிகள் பின்னர் பெரிய அளவில் செய்துபெற்றன. கோனேரி ராஜபுரம் கோயிலில் உள்ள பெரியநடராசர், சிவகாமி, பிடாரி, திருபுரசுந்தரி, பிரதோஷ நாயக்கர், விநாயகர், திருஞானசம்பந்தர், அப்பர், போகசக்தி அம்மன் ஆகிய திருமேனிகள் செம்பியன் மாதேவதியார் காலத்தை சார்ந்தவை. இக்காலத்தைச் சார்ந்த திருமேனிகள் **"பெண்தன்மை"**சாயலைமிகுதியாக உடையவை. ஆழகான உடற்கட்டும் புன்சிரிப்பு தவமும் முகமும் உடைய இக்காலத் திருமேனிகள் திரிபங்க நிலையில் அமைந்தவையாகும். தமிழ்நாட்டில் உள்ள செப்புத் திருமேனிகளில் மிகவும் எழில் வாய்ந்தவை செம்பியன் மாதவியார் செய்தளித்தவையேயாகும்.

**செம்பியன் மாதேவி கலைப்பாணி**

உலகமே போற்றிவியக்கும் சோழர்களின் கலைப்படைப்புகளான திருக்கோயில்கள் கற்சிற்பங்கள், செப்புத்திருமேனிகளை வரிசைப்படுத்தி நோக்கும் போது**'செம்பியன் மாதேவி பாணி'**எனத் தனித்த ஒருவகைப் பாணியை உருவாக்கிய பெருமை இத்தேவியின் வரலாற்றுச் சாதனையாகும் **"பாரட்"**போன்ற வெளிநாட்டுச் சிற்ப இயல் வல்லுனர்கள் **"செம்பியன் மாதேவி பாணி"**எனத் தனித்த முத்திரையுடன் கலைப் படைப்புகளை அவர் தம் நூல்களில் வெளியிட்டுள்ளார்.

செம்பியன் மாதேவியின் அறக்கொடைகளும் கலைப்பாணிகளும் மதுராந்தக உத்தம சோழனின் இரண்டாம் ஆட்சியாண்டில் தொடங்கப்பட்டன என்பதைக் காட்டுமன்னார்குடியில் உள்ள சாசனத்தின் வாயிலாக அறியமுடிகிறது. கி.பி 972-இல் தொடங்கப்பட்ட இப்பணி இராசராசனின் 16ம் ஆட்சியாண்டான கி.பி 1001 வரை தொடர்ந்தது. சுமார் 30 ஆண்டுகாலப் பணியில் இத்தேவியின் கலைத்துறை மற்றும் சமயத்துறை சாதனைகள் எத்தனை..... எத்தனையோ.

**செம்பியன் மாதேவியாரின் உருவச்சிலைகள் காணப்படும் இடங்கள்**

**சக்கராப்பள்ளி**

தஞ்சாவூர் மாவட்டம் ஐயம்பேட்டைக்கு அருகில் உள்ள சக்கராப்பள்ளி சக்கரவாகீசுவரர் திருக்கோயிலில் மதுராந்தக உத்தம சோழனின் ஆட்சிகாலத்தில் காணப்படும் கல்வெட்டுசாசனம் இத்தேவியால் அளிக்கப்பட்ட அறக்கொடைகள் பற்றிப் பேசுகின்றது. இச்சக்கராப்பள்ளித் திருக்கோயில் செம்பியன் மாதேவியாரால் திருப்பணி செய்யப்பட்ட ஒன்றாகும். இங்கு சிற்பங்கள் பொதிந்துள்ள மாடத்தின் ஒருபுறம் மேடைமீது இலிங்க உருவம் உள்ளது. ஒரு மாலை சிவலிங்கத்தின் மேல் சூடப்பட்டுள்ளது. இருபுறமும் இரண்டு விளக்குகள் எரிகின்றன. சிவலிங்க உருவத்திற்கு மேலாக ஒருகுடையும் இரண்டு சாமரங்களும் உள்ளன. எதிரே செம்பியன் மாதேவியார் அழகிய கொண்டையும் அணி செய்யப்பட்ட ஆடைகளும் திகழ இரு கரங்களை குவித்து நின்று சக்கராப்பள்ளி இறைவனாகிய லிங்கத்தை வணங்குகிறார்.

**செம்பியன் மாதேவி**

நாகப்பட்டினம் அருகிலுள்ள செம்பியன் மாதேவி எனும் ஊரில் உள்ள கயிலாசநாதர் திருக்கோயில் செம்பியன் மாதேவியரால் எடுப்பிக்கப்பட்டதாகும். இத்திருக்கோயிலில் கடாரம் கொண்ட பெருமன்னன் இராசேந்திரசோழனால் செம்பியன் மாதேவியின் படிமம் எடுப்பிக்கப்பட்டு அதற்கு பூசைகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதை இம்மன்னனின் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கின்றது. கி.பி 1019இல் இராசேந்திரசோழனால் எடுக்கப்பட்ட இப்படிமம் இன்றும் இத்திருக்கோயிலில் வழிப்பாட்டுக்குரிய தெய்வமாக போற்றப்படுகிறது.

**திருநல்லம்**

கண்டராதித்தன் என்ற பெயரில் திருநல்லமெனும் கோனேரிராயபுரத்தில் இத்தேவி எடுத்த திருக்கோயிலின் தெற்குச்சுவரில் செம்பியன் மாதேவி சிற்பம் காணப்படுகிறது.

**காமரசவல்லி**

திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வட்டத்தில் திருழபாடியிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ள சிற்றூரே காமரசவல்லியாகும். சோழ மன்னர்கள் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட கார்க்கோடகேசுவரர் கோயிலில் செம்பியன் மாதேவியின் செப்புத்திருமேனி படிமம் காணப்படுகிறது. இவ்வூரின் செப்புத்திருமேனிகள் அனைத்தும் செம்பியன் மாதேவியார் காலத்தின் படைப்புகளாகும்.

**முடிவுரை**

செம்பியன் மாதேவியார் முன்பு செங்கற்கோயிலாக திகழ்ந்த கோயில்களை கற்றளியாக மாற்றுதல் முன்புகற்றளியாக இருந்த கோயில்களின் தேவகோஷ்டங்களை அதிகரித்தல், திருமண்டங்கள், திருச்சுற்றுகள் எடுத்தல், செப்புதிருமேனிகள் அமைத்தல், திருக்கோயில்களுக்கு நிலம் முதலான முதலீடுகள் ஏற்படுத்தல் முதலியவற்றோடு அணிகலன்கள் பாத்திரங்கள், சாமரங்கள், பொற்பூக்கள் முதலிய அறக்கொடைகளையும் நல்கிச் சாதனை படைத்துள்ளார் பெரும்பாலும் தமது கணவரான கண்டாரதித்தரின் படிமத்தையும் தமது படிமத்தையும் எடுத்துக் கல்வெட்டுகளையும் வெட்டுவித்தது சிறப்பு அம்சமாகும்.

**அடிக்குறிப்புகள்**


1. K.A.NilakantaSastri, The Cholas, Vol – I.,
2. தி.வை.சதாசிவபண்டாரத்தார், பிற்காலசோழர் சரித்திரம்.
3. புலவர் வே. மகாதேவன், சோழர் செப்பேடுகள்.
4. குடவாயில் பாலசுப்ரமணியன், சோழமண்டலத்துவரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும்.
5. ARE : 444/1918,481/1925,361/1917.
6. கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, சோழர்கள் - புத்தகம் 1,2
7. S.R.Balasubramaniam, Early Chola Temples
8. நடனகாசிநாதன், தமிழர் நாகரிகம்.

# சங்க இலக்கியம் ஏலாதி வாழ்வியல் நெறிகள் ஒப்பீடு

***முனைவர் வெ.பிரேமசுதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

**முன்னுரை**

பதினென்கீழ்க்கணக்கு அற இலக்கியங்களில் ஏலாதியும் ஒன்று. ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு முதலிய ஆறு பொருள்களையும் பொடி செய்த மருந்துக் கலவைக்கு ஏலாதி என்று பெயர். ஏலாதியின் வாழ்வியல் நெறிகளை சங்க இலக்கியங்களோடு ஒப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தாயெனப் போற்றப்படுபவர்**

நல்ல இயல்புடைமை, ஈகை உடைமை, பிறர் நமக்கு தீமை செய்தால் பொறுத்தல் உடைமை, பொய் கூறாதிருதல், புலால் உண்ணாமை ஆகிய இயல்புகளை உடையவர்கள் எல்லா உயிர்களுக்கும் தாய் எனப் போற்றப்படுபவர்கள். இதனை,

**"நிறையுடைமை நீர்மை உடைமை கொடையே**

**பொறையுடைமை பொய்ம்மை புலால் கண்ட மறையுடைமை**

**வேயன்ன தோளாய் இவையுடையான் பல்லுயிர்க்கும்**

**தாயன்னன் எண்ணத் தகும்"** (ஏலாதி 6)

எனும் பாடல் உணர்த்துகிறது.

**விருந்து உபசரித்தல்**

தமிழர்கள் விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கினர். பெண்கள் விருந்து உபசரிப்பதே தங்களது தலை சிறந்த கடமையாகக் கொண்டிருந்தனர்.

**"விருந்து புறத்தாத் தானுண்டல்சாவா**

**மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"**

என்று திருவள்ளுவர் உரைக்கின்றது.

**"வருவிருந்து வைகளும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவத்து பாழ்படுதல் இன்று"** (குறள் 83)

நாள்தோறும் தன்னைத் தேடிவரும் விருந்தினர்களைப் பேணுபவன் வாழ்வில் துன்பத்தால் வருந்தித் தவிப்பது இல்லை. இதனையே ஏலாதி,

**"நாளும் விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து** (ஏலாதி ப. 74)

என்னும் தொடர்களால் விளக்குகிறது.

**"நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்**

**இல்புறம் செய்தலின் ஈன்றதாய் தொல்குடியின்**

**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்**

**கற்புடையாள் புண்ட கடன்"** (திரிகடுகம் 64)

மனைவியின் மாண்பு பற்றி திரிகடுகம் இல்லறத்திலே இன்பம் தவழ வேண்டுமாயின் இல்லாள் கற்புடையவளாயிருக்க வேண்டும். தன் காதலனுக்குக் கூட்டாளியாகவும், தாயாகவும் மனைவியாகவும் இருந்து உதவி செய்வதே கற்புள்ள பெண்ணின் கடமை என்கிறது.

**“சாறயர்ந்த தன்ன மிடாகக் கொன்றி**

**வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப**

**மலர்த் திறந்த வாயில் பலருணப்**

**பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலிஅடிசில்**

**வசையில் வான்றினைப் புரையோர் கடும்பொடு**

**விருந்துண் டெஞ்சிய மிக்சில பெருந்தகை” (குறிஞ்சி : 201-207)**

எனும் பாடலில் விருந்தின் சிறப்பை நம்மால் உணரமுடிகிறது. இயலாதவர்களுக்கும் முடியாதவர்களுக்கும் உணவினை வழங்குபவர்கள். தேவர்களாலாலும் விரும்பப்படுவர். யாருக்கெல்லாம் உணவினைக் கொடுத்துக் காக்க வேண்டும் என்பதனை,

**“காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்**

**பாலில்லார் பற்றிய நூலில்லார்” (ஏலாதி 36)**

எனும் அடிகள் விளக்குகின்றன. சங்கத் தலைவி இரவு நேரத்தில் விருந்து எதிர் வரினும் முகமலர்ச்சியுடன் உணவு படைத்தலை,

**“அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின்**

**மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே” (நற்றிணை 142 : 10-12)**

இதனையே சிலம்பும் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளா.

**“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**

**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**

**விருந்தெதிர் கோடலும்” (சிலம்பு 16 : 71-73)**

என சுட்டிக்காட்டியுள்ளது, வாழ்க்கையின் பயனை ஆராய்ந்து விருந்தினர்க்கு உணவு அளிப்பவன் நிச்சயமாக அரசாள்வான். இதனை,

**“தேறான் இடையான் தெளிந்து அடிசில் ஈத்து உண்பான்**

**மாறான்மண் ஆளுமாம் மற்று” (ஏலாதி 47)**

தன் வீட்டில் இனிய சொற்களைப் பேசி உணவினையளித்தும், அவர்களுக்கு அளித்து தானும் உண்ணலும் செய்பவன் அழிவில்லாத நிலையான அரசுரிமையைப் பெறுவான்.

**“தன் இல்லுள் சோற்று அரவம் சொல்லி உண்பான்**

**ஆயின் சொல்லி அரவம்**

**கேளான் கிளை ஓம்பற்கேடுஇல் அரசனாய்**

**வாளான்மண் ஆண்டு வரும்” (ஏலாதி 48)**

**“அன்புற்று அசனம் கொடுத்தான் துணையினோடு**

**இன்புற்று வாழ்வான் இயைந்து” (ஏலாதி 53)**

இரவு நேரத்தில் வந்த விருந்திற்கு இல்லை என்று சொல்லாது இரவு என்றும் பாராது, நெற்றி வியர்க்க, நெய்யைத் துழாவி தசைக்கறியைச் சமைத்து உணவு வழங்கிய தன்மையை,

**“எல்லி வந்த நல்லிசை விருந்திற்கு**

**இளரிழை அரிவை நெய்துழந்து கட்ட**

**விளர்ஊன் அம்புகை எறித்த நெற்றிச்**

**சிறுநுண் பல்லியர் பொறித்த”**

என்ற நற்றிணை பாடல் மூலம் அறியலாம். பிறருக்குப் பயன்படும் அறச் செயல்களைச் செய்பவர் செல்வம் மிக்கவராக வாழ்வர். குடிக்கும் நீர வளத்தையும், குளத்தையும், கிணற்றையும், வழியில் செல்பவர் தங்குவதற்கு பந்தலையும், மண்டபங்களையும் அமைப்பவர் செல்வராக வாழ்வர்.

**"உண்ணீர் வளம்குளம் கூவல் வழிப்புரை**

**தண்ணீரை அம்பலம்தான் பாற்படுத்தான் பண்நீர**

**பாடலோடு ஆடல் பயின்று உயர்செல்வராய்க்**

**கூடலொடு ஊடலுளான் கூர்ந்து" (ஏலாதி 51)**

எனும் பாடல் விளக்குகிறது. இதனையே சிறுபஞ்சமூலம்,

**"குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீது**

**உளம்தொட்டு உழுவயல் ஆக்கி – வளம்தொட்டுப்**

**பாகுபடுங்கிணற்றோ டென்றி வைம்பாற் படுத்தான்**

**ஏகும் சுவர்க்கத்து இனிது"** என்கிறது,

**பேரறங்கள்**

துன் தாயை இழந்த குழந்தைக்கும், கணவனை இழந்த மனைவிக்கும், பேச்சு இழந்தவர்களுக்கும், வணிகம் செய்து முதற் பொருளை இழந்தவர்க்கும் கையில் உள்ள உணவை இழந்தவர்க்கும் வேண்டியவற்றைத் தந்தவர் பொருட்களை சேர்த்து வைத்து மற்றவர்களுக்கும் அளித்து தாமும் பயன்படும் வகையில் வாழ்வர். இதனையே,

**"தாயிழந்த பிள்ளை தலையிழந்த பொண்டாட்டி**

**வாயிழந்த வாழ்வினார் வாணிகம் - போயிழந்தார்**

**கைத்தூண் பொருளிழந்தார் கண்ணியவர்க்கு ஈந்தார்**

**வைத்து வழங்கி வாழ்வார்" (ஏலாதி 78)**

இக்கருத்தினை ஒட்டியே சிறுபஞ்சமூலம்,

**"ஈன்றெடுத்தல் சூல்புறம் செய்தல் குழவியை**

**ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை ஆன்ற**

**அழிந்தாளை இல்வைத்துப் பேரறமா ஆற்ற**

**மொழிந்தார் முதுநூலார் முன்பு"** என்று கூறுகிறது.

**கொடையின் சிறப்பு**

பெருமை எது? இழிவு எது? என்பதனை புறநானூறு

**"ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனினும்**

**ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று**

**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று**

**கொள்வேன் என்றால் அதனினும் உயர்ந்தன்று"**

கொடுப்பவரும், பெறுபவரும் நிறைந்ததே இவ்வுலகம் என்பதை இப்பாடல் புலப்படுத்திற்று.

**"உண்டாயின் பதம் கொடுத்து**

**இல்லாயின் உடன் உண்ணும்**

**இல்லோர் ஏக்கல் தலைவன்" (புறம் 95)**

எனும் பாடல் அதியமானின் கொடைச் சிறபபை தொண்டைமானிடம் ஔவை கூறியதாக அமைந்துள்ளது.

**நட்பின் சிறப்பு**

பண்டைத் தமிழர் கண் போல் நண்பரை மதித்தனர். அவர்களுடன் கலந்து பழகிப் பெறும் மகிழ்ச்சியை இனிதாகக் கருதினர்.

**"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்**

**நஞ்சம் உண்பர் நனிநா கரிகர்" (நற்றிணை 355 : 6, 7)**

எனும் நற்றிணைப் பாடலடிகள் நட்பினை மதிக்கும் மனப்பான்மையையும். நண்பர்கள்பால் கொண்ட நம்பிக்கையையும் தெளிவாக்குகின்றன.

**"கட்டுக்கோல் கோல எரியும் புலவரே**

**நட்டார் எனப்படு வார்" (நாலடி 208)**

என்று நட்பின் சிறப்பினை நாலடியார் விளக்குகின்றது. இதனையே ஏலாதி நண்பர்களிடம் குறிப்பிட்ட ஆறு குணங்கள் இருப்பதாக சான்றோர்கள் கூறியுள்ளனர். இறந்த போது இறத்தலும், அவர்களுக்கு உதவி தேவையான போது பொருள் தந்து உதவுதலும், இன்சொல் கூறுதலும், அவர்களுடன் கூடியிருப்பதை விரும்புதலும், அவர்கள் வருந்தும் போது நாமும் வருந்துதலும், அவர்கள் பிரியும் போது கலங்குதலும் என்னும் இந்த ஆறு குணங்களும் உண்மையான அன்பு கொண்ட நண்பர்களிடம் இருக்கும். இதனை. "அன்புடையார் உள்ளன ஆறு குணம்" (ஏலாதி 68) என நட்பின் சிறப்பை ஏலாதி எடுத்துக்கூறுகிறது.

**முடிவுரை**

பிறர் துயர் நீக்கும் பெருங்கருணையே மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும். அன்பு தான் இரண்டு இதயங்களைப் பிரிந்து போகாதபடி இணைத்து வைக்கிறது. "தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு வீடு, சம்பாத்யம் இவையுண்டு தானுண்டு என்று தன்னலத்தில் வாழும் மனிதப் பிறவிக்கு எந்த மகத்துவமும் இல்லை. மண்ணில் மனிதராய் மலர்ந்த அன்பு மனம் வீச தன்னிடமிருப்பதை அடுத்தவருக்கு கொடுப்பது தான் உயர்ந்த வாழ்க்கை. அன்பிருக்கும் இதயமே ஆண்டவன் இருக்கும் ஆலயம். எனவேதான் சங்க மக்கள் அன்பே தன் வாழ்வியலாகக் கொண்டிருத்தலில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# அரசமரம், துளசித் தீர்த்தத்தில் காணலாகும் அறிவியல் சிந்தனைகள்

***ச.பிரபாகரன்,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முன்னுரை**

தமிழகத்தில் சைவ வைணவ கோவில்கள் அதிகமாக காணப்படுகின்றன. ஒவ்வொரு கோவிலுக்கும் தனிச் சிறப்புகள் உண்டு. அந்த வகையில் அர்ஜுனாபுரம் அருள்மிகு சாந்த மணவாள பெருமாள் கோவிலில் காணப்படும் அரச மரத்திலும், துளசி தீர்த்தத்திலும் மருத்துவ குணம் நிறைந்து காணப்படுகின்றன. துளசி தீர்த்தமும், அரச மரமும் வெரும் கோவிலில் இருக்கும் சாதாரண பொருள்கள் இல்லை அரச மரத்திலும், துளசி தீர்த்தத்திலும் காணலாகும் அறிவியல் சிந்தனையை இக்கட்டுரை வழியாக எடுத்துரைக்கப்படுகிறது.

**அர்ஜுனாபுரம் சாந்த மணவாளப் பெருமாள் கோவில்**

அர்ஜுனாபுரம் சாந்த மணவாள பெருமாள் கோவில் வத்திராயிருப்பு பகுதியில் இருந்து சுமார் 3 கி. மீ தொலைவில் உள்ளது. இக்கோவில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இக்கோவிலை பாண்டிய மன்னர்கள் கட்டினுள்ளனர். அக்கோவிலில் காணலாகும் மீன் சின்னம் இதற்குச் சான்றா பகர்கிறது.. பாண்டியர்கள் மட்டும் இல்லாமல் நாயக்கர்கள் திருப்பணி செய்ததை சிற்பங்களின் வழியாக அறியமுடிகின்றது.

**அரசமரம்**

கோவில்களில் பெரும்பாலும் மரம் என்பது இருக்கும். தெய்வத்திற்கு தெய்வம் இம்மரம் மாறுபடுகின்றன. மரத்தை ஏதாவது ஒரு நம்பிக்கைக் காரணமாக மக்கள் வழிபட்டு வருகின்றனர். வழிபடுவது மட்டுமில்லாமல் அந்த மரத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் மருந்தாக பயன்படுத்துகின்றனர். சிவனுக்கு வில்வ மரமும், மாரியம்மனுக்கு வேப்ப மரமும், விஷ்ணுவுக்கும், விநாயகருக்கும் அரச மரத்தையும் கூறுகின்றனர். பெரும்பாலும் அனைத்து தெய்வங்களுக்கும் அரச மரம் பிடிக்கும்.

**போதிமரம் (அரசமரம்)**

அரச மரத்தை தான் போதி மரம் என்று அழைப்பார்கள். அரச மரத்தடியில் தான் புத்தர் ஆறு ஆண்டுகள் தியானம் செய்து ஞானம் பெற்றார். இந்த போதி மரம் புத்தகயாவில் போதி மண்டா என்ற பகுதியல் உள்ளது. இந்த அரச மரத்தை புனித மரமாகவும் வணங்குகின்றார்கள்.

**அரசமரத்தின் வேறு பெயர்கள்**

அரச மரத்தினை அஸ்வத்தம், அச்சுவத்தம், திருமரம், போதி, கவலை, பேதி, கணவம், சராசனம், மிப்பலம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.

**அரசமரத்தின் சிறப்பு**

நன்கு வளர்ந்த அரசமரம் நாளொன்றுக்கு 1808 கிலோ கரியமில வாயுவை உள்வாங்கி 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதனாலேயே நம் முன்னோர்கள் மரங்களை வழிபட்டனர். அப்படி நம் முன்னோர்கள் வழிபட்ட மரங்களுள் அரசமரமும் ஒன்று.

**பெருமாள் கோவில் அரசமரம்**

அர்ஜுனாபுரம் பெருமாள் கோவிலில் அரசமரத்திற்கு முன்பு புளிய மரம் இருந்ததாகவும் அந்த புளிய மரத்தை “உறங்காப் புளி” என்று அழைத்தனர். அம்மரம் தற்பொழுது இல்லை. தற்பொழுது அரசமரம் உள்ளது. இந்த மரம் சுமார் 500 வருடங்கள் பழமையானதாக

கருதுகின்றனர் இக்கோவிலில் வழிபடும் பக்தர்கள். அரசமரத்தை சுற்றி வந்தால் நோய் குணமாகும் என்ற நம்பிக்கையில் வழிபடுகின்றனர். வெறும் நம்பிக்கை மட்டுமில்லாமல் அறிவியல் ரீதியாகவும் ஆதாரப் பூர்வமாகவும் கருதுகின்றனர். தமிழில் கிடைக்கும் நூல்களுள் காலத்தால் பழமையானது தொல்காப்பியமாகும். இந்த தொல்காப்பியத்தில் மரத்தைப் பற்றி தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார். இதனை,

**"தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை**

**செய்தி, யாழின், பகுதியொடு தொகை - இ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப"** தொல் - பொருள், நூ.பா, 966.

என்ற நூற்பா வழியாக தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அரசமரத்தினை வழிபடுவதால் ஏற்படும் நம்பிக்கை**

அரசமரம் குளக்கரை, கோவில்களில் மட்டுமில்லாமல் கிராமங்களிலும் தெய்வமாக வணங்கி வருகின்றனர். இதற்கு காரணம் அரசமரம் மருத்துவ குணம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. அர்ஜுனாபுரம் சாந்த மணவாளப் பெருமாள் கோவிலில் இந்த அரசமரத்தை தெய்வமாக வழிபடுகின்றனர். அரசமரத்தை வணங்கினால் குழந்தை இல்லாத பெண்களுக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் வழிபடுகின்றனர். இந்த அரசமரத்தில் பல மருத்துவ குணமும் காணப்படுகின்றது. அரசமரத்திலுள்ள பட்டை, வேர், விதை, கொழுந்து இலை போன்றவை மருந்துப் பொருளாக பயன்படுகின்றது. இந்த அரசமரத்தை ஏழு முறை சுற்றி வந்தால் உடல் ரீதியான பிரச்சினைகள் குணமாகும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. இது வெறும் நம்பிக்கை வார்த்தையில்லை அறிவியல் பூர்வமாக உண்மையாகும். ஹோம வழிபாட்டில் அரசமர குச்சிகளை பயன்படுத்துவதற்கான காரணம் என்னவென்றால் ஹோமப் புகை வீட்டில் பரவினால் கண்களுக்குத் தெரியாத பூச்சிகள், கிருமிகள் அழிந்துவிடும். அரசமர குச்சிகள் பூச்சிகளையும், கிருமிகளையும் அழிக்கும் ஒரு மருத்துவ பொருளாகப் பயன்படுகின்றது.

**அரசமரத்தின் மருத்துவ பயன்கள்**

பெருமாள் கோவிலில் பெண்கள் அரசமரத்தை வழிபடுகின்றனர். இந்த அரசமரத்தை வழிபடுவதன் மூலம் இதயம், ஜீரண உறுப்புகள் மற்றும் கர்ப்பப்பை கோளாறுகள், சரும வியாதிகள், பித்த வெடிப்பு போன்ற நோய்கள் குணமாகிவிடுகின்றன என்று அக்கோவிலில் வழிபடும் பெண்கள் கருதுகின்றனர். இதனை ஆராய்ச்சி வழியாகவும் நிருவியுள்ளனர். வயிறு வலி, ப்ரம்மிய நோய், தலைவலி, சூலை நோய், இருமல், தந்த வாயு போன்ற நோய்களைப் போக்குகின்ற மருத்துவ குணம் அரசமரத்திற்கு உண்டு. கொழுந்து இலையை அரைத்துப் பற்றிடப் புண்கள் ஆறிவிடும். அரசமரத்தின் பட்டை, வேர், விதை இவற்றை பாலில் கொதிக்கவைத்து ஆறிய பின் அதில் தேன் கலந்து தொடர்ந்து ஒரு மண்டலம் அருந்தி வந்தால் தாது விருத்தியடையும், பெண்களுக்கு கர்ப்பபைக் கோளாறுகள் நீங்கும்.

அரசமரப் பட்டையை நீரில் போட்டு கொதிக்க வைத்து ஆறிய பின் இந்த நீரால் வாய் கொப்பளித்து வந்தால் வாயில் உள்ள புண்கள் விரைவில் குணமாகும். அரசமரத்தின் விதைத் தூள் உயிர் அணுக்களைப் பெருக்கி ஆண் மலட்டை நீக்கும்.அதிக அளவு ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யும் மரங்களுள் அரச மரமும் ஒன்று. பெருமாள் கோவிலில் அரச மரத்தை வழிபடுவதால் அதன் பொருட்கள் மூலமாகவும் மக்கள் பல மருத்துவப் பயன்களைப் பெற்றுவருகின்றனர். இந்த அரச மரம் பழமையானதாக மட்டுமில்லாமல் மருத்துவ குணத்துடன் இக்கோவிலில் காணப்படுகின்றது.

**துளசி**

துளசி என்பது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. ஏறத்தாழ 50 செ.மீ வரை வளரக் கூடியது. இச்செடியின் அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணம் கொண்டவை துளவம், மாலலங்கம், ஸ்ரீதுளசி, ராம துளசி, துழாய் என்ற வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

**துளசியின் வகைகள்**

துளசி சில வகைகளாக பிரிக்கப்படுகின்றனர். அவை

நல்துளசி

கருந்துளசி

செந்துளசி

கல்துளசி

முள்துளசி

நாய்துளசி

காடுதுளசி என்று துளசியை வகைப்படுத்துகின்றனர்.

**துளசி தீர்த்தம்**

துளசிச் செடி மருத்துவம் நிறைந்ததாகும். இந்தச் துளசிச் செடியை மக்கள் தங்கள் வீட்டில் வளர்த்தும் வந்தனர். துளசிச் செடியை தினமும் உட்கொண்டால் குடல், வாயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் தீரும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் பெருமாள் கோவிலில் துளசி தீர்த்தத்தைக் கொடுக்கின்றனர். துளசி தீர்த்தம் பெருமாள் கோவிலில் புரட்டாசி சனிக்கிழமைகளில் துளசி தீர்த்தம் வழங்கப்படுகின்றது. இந்த துளசி தீர்த்தத்தில் ஏலக்காய், குங்குமப் பூ, பச்சை கற்பூரம், துளசி இலைகள் இவற்றை நீரில் கலந்து தயாரித்து பக்தர்களுக்கு வழங்குகின்றனர்.

**துளசி தீர்த்தத்தின் மருத்துவப் பயன்கள்**

துளசி என்பது வெறும் செடி கிடையாது. அதன் பகுதிகள் அனைத்தும் மருந்துகளாக செயல்படுகின்றது. இதனால் பல வியாதிகள் குணமாகின்றன என்பதை ஆராய்ச்சி முறைப்படி ஆதாரமாக நிருபவித்துள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இந்த துளசி தீர்த்தம் வழங்கப்படுகின்றது. துளசி தீர்த்தத்தை வெறும் வயிற்றில் குடித்தால் சகல நோய்களும் எளிதில் குணமாகும். இதயம், இரைப்பை பலம் பெரும், கண்களில் ஏற்படும் நோய் நீங்கும், நரம்புத்தளர்ச்சி, சளி நீங்கும், இரத்தம் சுத்தமாகும், பித்தம் குறையும், வாந்தி தலை சுற்றல், மயக்கம், வாய்க்கசப்பு, மூச்சடைப்பு, மார்புவலி, மாரடைப்பு போன்ற வியாதிகள் குணமாகும். நோய் குணமாகும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு பெருமாள் தலங்களில் இந்த துளசி தீர்த்தம் வழங்கப்படுகின்றது.

**முடிவுரை**

அரச மரத்திலும் துளசி தீர்த்தத்திலும் மருத்துவக் குணங்கள் இருப்பதையும் பெருமாள் தலங்களில் இருப்பதனால் வெறும் வழிபாடு சார்ந்த பொருளாக மட்டுமில்லாமல் அறிவியல் சிந்தனைகளும் உள்ளது. என்பதனை இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளன.

## விந்தன் படைப்புகளில் வாழ்வியல் சிந்தனைகள் - ஒரு பார்வை

***கு.விமலாரமணி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி-19.

**முன்னுரை**

விந்தன், ஏழை எளியவர்களிடையே பிறந்து வளர்ந்து, உழைத்துப் பண்பட்டவர். ஏழை எளிவர்களின் சுக துக்கங்களை ,தயம் ஒன்றி அநுபவித்து உணரும் ஆற்றல் மிக்கவர். அதனால்தான் அவருடைய கதாபாத்திரங்கள் எல்லாம் நம்மை நோக்கி கேள்வி கேட்கின்றன் சில சமயங்களில் உள்ளத்தைத் தொட்டு வாசகர்களை உலுக்கி விடுகின்றன. அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளராய் வாழ்க்கையைத் தொடங்கி, உதவி ஆசிரியர், கதாசிரியர், பாடலாசிரியர், திரைக்கதை ஆசிரியர் எனப் பல வளர்ச்சியை அடைந்தார். அவரின் எண்ணச் சிதறல்களின்வழி வாழ்வியலைக் காண்போம்.

**மனிதரிடையே வேற்றுமை**

சோற்றுக்காக நாயுடன் போராடும் சோலையப்பனுக்கு ஒரு ரொட்டிக் கடை வைத்துக் கொடுத்து அவன் பிழைப்புக்கு வழிகாட்டுகிறார் பொதுநலவாதி. பட்டணத்தில் ,ருந்து வந்த பொதுநலவாதிக்கு, கிராமத்து தீவிரமான தீண்டாமை கொடுமையைப் பற்றி அறியவில்லை. சோலையப்பன், “பறையன் கடையிலே மத்தவங்க எப்படி ரொட்டி வாங்குவாங்க? முதலியார் கடையில நல்ல வியாபாரம் நடக்குது. எங்க ஆளுங்க கஞ்சிக்குடிக்கவே வழியில்லை ரொட்டி வாங்க எப்படி வருவாங்க?” என்று கூறுமிடத்து, மனிதர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வை கூறியுள்ளார் அரிசனங்கள் ஆலய பிரவேசம் நடக்கிறது. அதில்கூட கலந்துக்கொள்ளாமல் “ஒரு நாள் வேலை கிடைத்ததே தெய்வ தரிசனம்” என்று என்னும் மக்களின் மனோபாவங்களையும் உள்ளம் உலுக்கும் வகையில் சித்தரிக்கிறார்.

**சமூக விரோதிகள்**

விந்தன் அவர்களின் சத்தியமும் ஆவேசப்படும் சமுதாய உணர்வும் ,ருப்பதை “சமுதாய விரோதி” என்ற கதை மூலம் வெளிப்படுத்துகிறார். சொந்த தகப்பனாராக ,ருந்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான் என்ற படியால், அவனை போலிஸ் வசம் ஒப்படைக்கும் புஷ்பராஜ். புஷ்பராஜிக்கு ஏற்படும் தர்மாவேசம் விபீஷ்ணனுக்கு ஏற்படும் ஆவேசத்தை போன்றது. நியாயம் நிலை நாட்டப்பட வேண்டும் அதர்மம் அழிய வேண்டும் சமூக விரோதம் (விரோதிகள்) ஒழிக்கப்பட வேண்டும் என்பதை காட்டுகிறது. கதையில் புஷ்பராஜிக்கும் பிறருக்கும் நடந்த உரையாடல்.

**“அவர் எனக்கு விரோதியில்லை”**

**“பின்னே யாருக்கு தம்பி விரோதி?”**

**“சமூகத்திற்கு விரோதி”**

**“சொந்த அப்பனைவிடச் சமுதாயம் பெரிதா?”**

**“அப்பணைவிட அரசாங்கத்தைவிடப் பெரிது?”** (சமுதாய விரோதி)

“காந்தியவாதி” என்ற கதையில் கதாநாயகன் துளசிங்கராயர், ஊர்க் குழந்தைகள் அனைவருக்கும் பட்டாசு தானம் செய்கிறார். அது ஊரில் உள்ள தனது வைப்பாட்டியின் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார் என்ற அவரின் சுயரூபத்தைக் குப்புலிங்கத்தின் மூலம் வெளிக்கொணர்கிறார். குப்புசாமி, “நான் எட்டிப் பார்த்தேன் என்ன ஆச்சரியம் ஏழெட்டுப் பெண்களுக்கு நடுவே எங்கள் ஊர் (பொய்) காந்தியவாதி ஒரே துண்டுடன் அமர்ந்திருந்தார். எளிமையின் உச்சத்தில் வாய்மையையும், தூய்மையையும், பண்பையும், பாரம்பரியத்தையும் வளர்த்துக் கொண்டு, ருந்தார்”.

**சுற்றமும் நட்பும்**

“குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு பாலூட்டும் தாய், மற்றொரு பக்கத்திற்கு மாற்றும்போது, அந்தக் குழந்தை வீறிட்டு அழுவதுபோல் மனிதன் மரணத்தைக் கண்டு அழுகிறான்” என்கிறார். கவியரசர் தாகூர். அந்த மரணத்தினை சுற்றமும் நட்பும்

சுயநலத்தோடு பார்க்கின்றது. நண்பன் ,றந்துவிட்டான். துக்கம் விசாரிக்கப் போனேன். அங்கே, “கேட்கும் பொழுதெல்லாம் கைமாத்தாய் பணம் கொடுக்கும் தங்க குணம் உடைய நண்பன் ,றந்திட்டானே? ,னிமேல் யார் உதவி செய்யப் போகிறார்” என்று தேடும் நண்பனும்,

“வாதம் புரிவதில் சிறந்தவனாய் ,ருக்கிற, உன்னை வக்கீல் வேலைக்குப் படிக்க வைக்கிறேன்னு சொன்னீங்களே? என்னோடு எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டு போட்டாரே?!!” என்று கூறும் மகன். “ஐயோ! மஞ்சள் குங்குமத்தோடு போய்ச் சேரலாம்னு ,ருந்தேனே! ,ப்படி ஆகிவிட்டதே” என்று அழுகின்ற மனைவியும், “என்ன கஷ்டம் வந்தாலும் என்னைக் கரையேற்ற அண்ணன் ,ருக்கிறான்” என்று தைரியமாக ,ருந்தேனே் அதுவும் போய்விட்டது” என்று தங்கை அழுகின்றாள். “,ந்த உலக வாழ்வை நீத்த அரங்கநாதனைப் பற்றி வருந்துவதற்கு யாருமில்லையே?” என முடிக்கிறார். (சுற்றமும் நட்பும்).

“அவனின்றி ஓரனுவும் அசையாது!” என்கிறார்கள். அப்படியானால், உலகத்தில் அவ்வப்போது நடக்கும் அநீதி, அக்கிரமங்களுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரி ஆகிவிடுகிறான். ஆனால் தண்டனை மட்டும் அவனுக்கு ,ல்லை. அவனால் ஏவப்பட்ட மனிதனுக்குத்தானாம் ,தென்ன வேடிக்கை! என்பதினை, உறவினர் எதற்கு? என்ற கதையில் கூறுகிறார். நான்கு பெண்களுக்கு தந்தையான அவர் உறவினர்களைப் பற்றி எடுக்கும் முடிவு கசப்பான மருந்தாக ,ருந்தாலும் ,ன்றைய யதார்த்த வாழ்க்கைக்கு நல்ல மருந்தாகும்.

இரண்டு பெண்களில் வயோதிகருக்கு ஒருவரையும் ,ருமல் நோயாளிக்கு ஒருவரையும் மணமுடித்தார். மூன்றாவது பெண்ணிற்கு உறவில் முடிப்பதற்காகத் தன் தங்கை வீட்டிற்கும் மைத்துனர் வீட்டிற்கும் அழையாத விருந்தாளியாகச் சென்று அவமானப்பட்டு வந்ததுதான் மிச்சம். அப்பொழுதுதான் உறவினர்களின் உண்மை சுயரூபத்தைத் தெரிந்து கொண்டார். தேசபக்தி மிக்க ,ளைஞன் ஒருவனுக்கு, மழையின்போது ,ரவில் தன் வீட்டில் ,ரவு உணவிட்டார். அதனைப் பெருமையாக நினைத்துத் தனக்குக் கடிதம் எழுதி நன்றி தெரிவித்தவனை உறவினர்களை விட உயர்வாக நினைத்தார். மூன்றாவது பெண்ணை அவருக்கு மணமுடிக்க நினைத்துக் கேட்டார். தன் மகள் ரெங்காவிற்காக கிருஸ்துவ மதத்தையே தழுவிவிடலாம் என்ற முடிவிற்கு வந்தார். அவன் சம்மதம் கேட்டுக் கடிதம் எழுதினார். அவன் நல்ல பதிலைத் தந்தான். ஜேம்ஸ் தாம்சனுக்கும் ரங்கா என்னும் மேரிரோசிக்கும் விவாகம் நடைபெற்றது. இந்தச் செய்தியைக் கேட்ட உறவினர்கள் அவன், இறந்து விட்டதாகக் கருதி புண்ணியஸ்தானம் செய்து கொண்டனர். செத்தால் தலை முழுகத்தான் அவர்கள் ,ருக்கிறார்கள்.

**முடிவுரை**

போலிகளைச் சுட்டெரிக்கும் புதுமை வாழ்க்கைகளை அலசி பரிசீலிக்கும், சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு, “மின்சார சிகிச்சை”யளிக்கும் புத்தம் புதுமுறைகளை குரூர வசீகரங்களைப் படம்பிடித்துக் காட்டி மனித உள்ளத்திலே எங்கோ, ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கொண்டு ,ருக்கும் மனிதாபிமானத்தைத் தட்டி எழுப்பும் உணர்ச்சிக்கு வாழ்வின் உயிரோவியம் எனலாம். இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தலே எழுத்தாளரின் கடமை என்ற கருத்தைக் கருவாகக் கொண்டவர் விந்தன் என்பதை படைப்புகளின்வழி அறியமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**


1. விந்தன் படைப்புகள் - சமுதாயவாதி
2. விந்தன் படைப்புகள் - காந்தியவாதி
3. விந்தன் படைப்புகள் - ஏன்? எதற்கு?
4. விந்தன் படைப்புகள் - சுற்றமும் நட்பும்
5. மு.பரமசிவம் - ,ந்திய ,லக்கியச் சிற்பி விந்தன்


# பரிமேலழகரின் திருக்குறள் உரை உத்திகள்

*த.ஜான்சிபிரியா, முனைவர்பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113.

**முன்னுரை**

நூலாசிரியனும் உரையாசிரியனும் ஒரு நூலின் பொருண்மை யினையும் அதன் கருத்துக்களையும் சுவைபட எடுத்துரைக்க பல நுட்பங்களைக் கையாளுகிறான். இந்நுட்பக் கூறுகளை இலக்கண இலக்கிய உலகம் 'நூல் உத்தி' எனக் கூறுகிறது. தொல்காப்பியம் போன்ற சில இலக்கண நூல்கள் உத்திக் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் விரிவாகப் பேசியுள்ளன. இவ்வுத்தியானது படைப்பின் ஆக்கமுறைக்கு மட்டுமின்றி அப்படைப்பின் நோக்கம் நிறைவுறவும் பயன்படுத்தப்படுகிறது என்பது சிந்தனைக்குரியது. இவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாவது, உலகப் பொதுமறையான திருக்குறளுக்கு உரை எழுதியுள்ள பரிமேலழகர் தனது உரைக்கு அவர் பயன்படுத்தியுள்ள தொல்காப்பிய உத்திகளை குறித்து ஆய்வதேயாகும். பரிமேலழகர் இவ்வுத்தியினை எக்குறளுக்கு எவ்விடங்களில் உத்திகளைக் கைக்கொண்டுள்ளார் என இங்கு காண்போம்

## உத்தி (TECHNICS)

உத்தி என்பது எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்கப்படும் தொழில்நுட்பமாகும். ஒரு படைப்பின் திறனை மதிப்பிடும் போது அதன் உத்தி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. உத்தியே ஒரு படைப்பின் சிறப்பிற்குக் காரணமாகிறது. தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், 'உத்தி என்பது நூல் செய்யுங்கால் இயல்பு வகையாகிய வழக்கும் செய்யுளும் போலச் செவ்வனஞ் சொல்லுதல் ஒண்மை உடைத்தன்றாம்' (தொ.பொ.மர.656 உரை) என உரைத்துள்ளார்.

**அகராதி விளக்கம்**

தற்கால தமிழ்ச் சொல்லகராதியில், உத்தி என்பது 1.இசைவு, 2. தந்திரவுத்தி, 3. அறிவு, 4. திருவுறுப்பு, 5. தேமல், 6. பாம்பின் படப்பொறி, 7. பேச்சு, 8. செல்வம், 9. அபின் (1925:ப.73) என்று கூறியுள்ளது.

**தொல்காப்பிய உத்தி** : தொல்காப்பியதில் இறுதி இயலான மரபியல் 656 ஆம் நூற்பாவான,

**"ஒத்தக்காட்சி யுத்திவகை விரிப்பின்**
**நுதலிய தறித லதிகார முறையே**
**தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்..."** (தொல்.பொரு.மர:656)

என 32 உத்திகளை பட்டியலிட்டுள்ளது. உரையாசிரியர்கள் உரை எழுதும் போது இன்ன பிற என்பதின் அடிப்படையில், சில உத்திகளைக் கூறி புதுக்கருத்துகளை இணைத்துக் கொள்கின்றனர்.

**நுதலியதறிதல்**

ஒரு பனுவலின் சொல்லப்பட்ட பொருள் இதுதான் என்று அறுதியிட்டுக்கூறுவது இவ்வுத்தியாகும். இளம்பூரணர், 'சூத்திரத்திற் சொற்பொருளுணர்த்தலன்றி இதன் கருத்திதுவென உணர்த்தல்' (மர.656) என்று உரைக் கூறியுள்ளார். நுதலுதல்ஸ்ரீகருதுதல், அறிதல் என்பது அறியுமாறு நிற்றல் என்னும் பொருள்பட நின்றது. பரிமேலழகர், 'நீத்தார் பெருமை'(3) அதிகாரத் தோற்றுவாயிலில், 'அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல்' என்றும், 'அடக்கமுடைமை(13) என்னும் அதிகாரத்தின் தோற்றுவாயில் 'மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கண் செல்லாது அடங்குதல் உடையனாதல்' என்றும் அவ்வதிகாரத்தினுள் கூறுகின்ற கருத்தினை எடுத்தியம்பியுள்ளார். பரிமேலழகர் இவ்வுத்தியினை இயல் மற்றும் அதிகாரத் தோற்றுவாயில்களில் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார்.

**அதிகாரமுறைமை**

நூலினுள் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களுள் முன்பின்னாக ஒரு தொடர்ச்சியிருக்கும். இத்தொடர்ச்சியானது கோர்வையாகயில்லாது இடைவிட்டு மாறிமாறி அமைவதுண்டு. இத்தொடர்ச்சியினை, காரணக்காரியம் கூறி உரையாசிரியர்கள் முன்பின்னாக உள்ள கருத்திற்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமையினை தொடர்புப்படுத்தி பொருண்மையை விளக்கிச் செல்வர். இவ்வுத்திக்கு அதிகார முறைமை என்று பெயர். இவ்வுத்தியானது நூலினை வாசிப்போனுக்கு நூலைக் குறித்த நல்ல புரிதலை ஏற்படுத்தும்.

அதிகாரமுறைமை என்பது ‘முன்னம் பல பொருளையதிகரித்த வழி பின்னும் அம்முறையினானே விரித்துணர்த்துதல்’ என்று இளம்பூரணரும், ‘முன்னின்ற சூத்திரப் பொருண்மை பின் வருஞ்சூத்திரத்திற்கும் பெறற்பாலான பெற வைத்தல்’ என்று பேராசிரியரும் உரைத்துள்ளனர். ஒரு சூத்திரத்திற்கும் அதனை அடுத்து வரும் சூத்திரத்திற்கும் இயைபு கூறுதலும், இயலடைவு, அதிகார அடைவு கூறுதலும் போல்வன இதன் வகையாம்.

பரிமேலழகர் அதிகாரத் தோற்றுவாயில் அதிகாரங்களுக்குள் இயைபுக் கூறியுள்ளார். சில அதிகாரத் தோற்றுவாயிலில் ‘இது அதிகாரமுறைமை ஆயிற்று’ என்று அவரே உத்தியின் பெயரினைக் கூறியுள்ளார். உதாரணமாக, ’இல்வாழ்க்கை’ அதிகாரத்திற்கு அடுத்து வந்துள்ள ‘வாழ்க்கைத் துணைநலம்’ என்னும் அதிகாரத் தோற்றுவாஅயிலில் ‘அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இத்னானே விளங்கும்’ என்று உரைத்துள்ளார். இதேபோல் குறள்களுக்கிடையேயும் இயைபுக் காட்டி முறைப்படுத்தியுள்ளார்.‘நயன்ஈன்று...’(97) இக்குறளுக்கும், ‘சிறுமையுள் நீங்கிய...’(98) என்ற குறளுக்கும் இயைபுப்படுத்தி இவ்வுத்தியினை கையாண்ண்டுள்ளார்.

**தொகுத்துக்கூறல்**

இவ்வுத்தியானது விரித்து எழுதப்பட்டுள்ள மற்றும் எழுதப் போகின்ற கருத்துகளை ஒட்டு மொத்தமாகத் தொகுத்துச் சுட்டுவது ஆகும். நூலில் கூறும் கருத்துக்களையோ அல்லது சொற்களையோ தொகுத்துரைப்பதாகும். இளம்பூரணர் இவ்வுத்தியினை ‘வகைபெறக் கூறல் வேண்டுமாயினும் அதனித் தொகுத்துக் கூறல்’ என்றும், பேராசிரியர் ‘தொகுத்தியாத்த நூலுள்ளுந் தொகுத்துக்கூறுதல். பல சூத்திரத்து விரிந்தன தொகுத்தலும், ஒரு சூத்திரத்து விரித்துத் தொகுத்தலும் போல்வனவும் அதன் பகுதியாய் அடங்கும் என கூறியுள்ளார். இவ்வுத்தியினைப் பல இடங்களில் பரிமேலழகர் பயன்படுத்தியுள்ளார். பரிமேலழகர் ஒரு அதிகாரத்தின் கீழுள்ள குறள்களின் கருத்துக்களை ஒரு பொருண்மை அடிப்படையில் தொகுத்துக் கூறியுள்ளார். உதாரணமாக, ’உறைசிறியார் உள்நடுங்கல்...’(680) இக்குறளுரையின் கடைசியில் ‘இவை மூன்று பாட்டானும் மெலியான் செய்யுந்திறம் கூறப்பட்டது’ என முன்னுள்ள குறளினைத் தொகுத்துக் கூறியுள்ளார். இவ்வுத்தியினை தனது உரையில் பெரும்பான்மையாகப் பயன்படுத்தியுள்ளார்.

**வகுத்து மெய்நிறுத்தல்**

வகுத்து மெய்நிறுத்தல் என்பது திரட்டி கூறப்பட்ட பொருளைத் தனித்தனியாக விரித்து கூறுதல் எனலாம். இவ்வுத்தியினை இளம்பூரணர், ’தொகைபடக் கூறிய பொருளை வகைபடக்கூறல்’ என்றும், பேராசிரியர் ‘மெய்நிறுத்தல் என்பது ‘மெய்’ என்றதனான் வகுத்தவற்றைப் பின்னும் வகுத்து நிறுத்தல் என கொள்ளப்படும்’ என்று உரைக்கூறியுள்ளார். பரிமேலழகர் இவ்வுத்தியினை ‘கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்...’ (9) என்ற குறளில் கூறியுள்ள ’எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலா ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை எனவிவை’ என விரித்துக் கூறியுள்ளார். இவ்வாறு தொகையாய் கூறியவற்றை விரிவாய் கூறி விளக்குவது ஆகும். இவ்வுத்தி குறளின் பொருண்மையை தெளிவாக புரிந்துக்கொள்ள உதவுகின்றது.

**பிறன் கோட் கூறல்**

மற்ற உரையாசிரியர்கள் கூறிய கருத்தையும் கோட்பாட்டையும் தனது உரையில், பெயர் குறிப்பிடாமல் எடுத்துக்காட்டுவது இவ்வுத்தியாகும். பெரும்பாலும் பிற உரையாசிரியரின் கருத்தினைக் கூறி ’என்பாருமுளர், பொருள் உரைப்பாரும் உளர், என்றார் பிறரும், உரைப்பாரும் உளர்’ என்று குறிப்பிட்டிருப்பார். இளம்பூரணர், ’பிற நூலாசிரியன் கொண்ட கோட்பாட்டைக் கூறுதல்’ என்றும், பேராசிரியர் இவ்வுத்தியினை ’தன்னூலே பற்றாகப் பிற நூற்கு வருவதோர் இலக்கணம் கொள்ளுமாறு கூறுதல்’ என உரைத்துள்ளார். இவ்வுத்தியினை பரிமேலழகர், ’துன்னியார் குற்றமும்...(188) என்ற குறளில் ’என்னர்கொல் என்று பாடமோதி, எவ்வியல்பினராவர் என்று உரைப்பாரும் உளர்’ என்றும், ’களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்தாவது...’ (283) இக்குறளில் ’அளவறிந்து என்று பாடம் ஓதி, அவர் பயன்கொள்ளும் அளவு அறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடும் என்று உரைப்பாரும் உளர்’ என்று பிற நூலாசிரியரின் கருத்தினை எடுத்தியம்பும் உத்தியினைக் கைக்கொண்டுள்ளார்.

**மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல்**

பிற நூலாசிரியர் பொருண்மையைக் கெடுத்து தனது கருத்தினைக் அறுதியிட்டுக் கூறுதல் இவ்வுத்தியாகும். இதனை இளம்பூரணர், ’பிற நூலாசிரியன் கூறின பொருண்மையைக் கெடுத்துத் தன் துணிபு கூறுதல்’ என்றும் பேராசிரியர், ’ஒரு பொருளினை ஒருவன் வேறுபடக் கொள்வதோர்

உணர்வு தோன்றியக்கால் அவ்வேறுபாட்டினை மாற்றித் தான் துணிந்தவாறு அவற்கும் அறிவுறுத்தல்' என்றும் இதற்கு உரை கூறியுள்ளனர். 'குடம்பை தனித்தொழியப்...(338) இக்குறளில் 'குடம்பை என்பதற்கு கூடு என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமை ஆகாமை அறிக' என ஒரு சாராரின் கொள்கையினை கூறி அதனை மறுத்து தனது கொள்கையினை நிறுவியுள்ளார் பரிமேலழகர். இது மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல் என்னும் உத்தியில் அடங்கும்.

**கூறிற்றென்றல்**

முற்கூறியதொரு பொருளைப் பின்னர் வேறொன்றற்கு விதித்துக்கூற நேர்ந்தால், அவ்விடத்து மீண்டும் அதனை விளக்காது முன்னர் உரைக்கப்பட்டதெனக் கூறுதல் இவ்வுத்தியாகும். இதனை இளம்பூரணர் 'பல பொருளாய் அதிகரித்தவற்றுள் சில பொருளை மேற்சொல்லப்பட்டனவென்றல்' என்றும், பேராசிரியர் 'முற்கூறியதோர் இலக்கணத்தினை மற்றொரு பொருட்கும் விதிக்க வேண்டியவழி, அவ்விலக்கணத்தினை மீட்டுங் கூறாது மேற்கூறியவாற்றானே கொள்கவென்பான் அவை கூறினாமென்று நெகிழ்ந்து போதல்' என்றும் உரை வகுத்துள்ளனர்.

பரிமேலழகர் இவ்வுத்தியினை, 'குணன் இலனாய்க் குற்றம்...(868) என்ற குறளில் பயன்படுத்தியுள்ளார். குணம் - இறைமாட்சியுட் சொல்லியன' என்று குணத்தின் வரையறையைக் கூறியாயிற்று என்று கூறியுள்ளார். இது கூறிறெனல் உத்திக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும்.

**எதிரது போற்றல்**

பின்னால் வரும் ஒரு கருத்திற்கு ஏற்ற கருத்தினையோ இலக்கணத்தினையோ முன்னரே குறிப்பிடுவதும் பின்னால் சொல்லப்பட வேண்டிய செய்தியைச் கருத்தில் கொண்டு அதற்கேற்ப தொடக்க செய்தியினை அமைப்பதும் எதிரது போற்றல் உத்தியாகும். உரையாசிரியர் இவ்வுத்திக்கு 'முன் கூறப்பட்ட சூத்திரத் தானே வருகின்ற சூத்திரத்தில் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்' என்று கூறியுள்ளார். இவ்வுத்தி நூலுக்குள்ளேயே அமைவதாகக் கூறியுள்ளார். இவ்வுத்தியினை பரிமேலழகர், 'குணன் இலனாய்க் குற்றம்...(868) என்ற குறளில் 'குற்றம் இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்றும் அத்தன்மையெனவும்' என்று இவ்வழியில் உபயோகப்படுத்தியுள்ளார். இவ்வாறு 'இனிவரும் ஒரு விதிக்கு ஏற்ப ஒரு இலக்கணத்தை முன்னதாகக் கூறி அதனைப் போற்றுதல்' இவ்வுத்தியாகும் என ஆராய்ச்சி காண்டிகையுரைக் கூறுகின்றது.

**முறை பிறழாமை**

இவ்வுத்தியை பேராசிரியர் மட்டுமே கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 'காரணமின்றித் தான் சில பொருள் எண்ணி நிறுத்திய பின்னர் அம்முறை பிறழ்ந்தாலும் குற்றமில்லா வழியும் அம்முறையினையே இலக்கணமாகச் சொல்லுதல்' என இதற்கு உரைக் கூறியுள்ளார். 'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்...(381) என்ற இக்குறளில் பரிமேலழகர், 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார்' என்று, இவ்வுத்தியினைப் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

இவ்வாறு பரிமேலழகர் தொல்காப்பியர் கூறியுள்ள உத்திகளை தனது உரையில் பெரும்பான்மையாக கையாண்டுள்ளார். இக்கட்டுரையில் சிலவற்றையே கண்டுள்ளோம். ஒரே குறளில் மூன்று அல்லது நான்கிற்கும் மேற்பட்ட உத்திகளையும் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு படைபாளன் தனது பனுவலின் கருத்துப்புலபாட்டிற்கும் நயத்திற்கும் உத்தியினை கைக்கொண்டு தனது படைப்பினைச் செம்மைப்படுத்துகின்றனர்.

# சிவவாக்கியர் பாடல்களில் சமூகச் சிந்தனைகள்

*இரா.ராமலெட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர் (மு.நே), உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி – 19.

**முன்னுரை**

பதினென் சித்தர்களில் சிவவாக்கியர் ஒருவர் ஆவார். இவர் சிவவாக்கியம் என்ற நூலினை இயற்றியுள்ளார். இந்நூலில் தத்துவ சித்தாந்தக் கோட்பாட்டினைக் கொண்ட 550 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவர் முப்பெருஞ் சித்தர்களுள் ஒருவராகவும் போற்றப்படுகிறார். மேலும் சித்தர்களில் இவர் பெரும்பாலும் மெய்நெறி ஆர்வத்தினையும், தெய்வச் சிந்தனையும் கொண்ட புரட்சியாளர் ஆவார். அதுமட்டுமல்லாமல், சமய ஒருமைப்பாட்டின் ஆதரவாளராகவும் விளங்குகின்றார். இவரது பாடல்களில் சில பாடல்கள் ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மைக் கொண்ட ஆற்றல் வாய்ந்தவையாக விளங்குகின்றன. ஆகவே, சிவவாக்கியரின் சில பாடல்களில் இடம்பெற்றுள்ள சமூகச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

மனித உடலானது மலைகளின் மேலே தங்கும் மேகம் போன்றதாகும். ஒரு காற்றடித்தால் அம்மேகம் கலைந்து விடும். அதுபோல, நமக்கு முதுமைப் பருவம் வரும் போது, இவ்வுடலும் அழிந்து விடும். ஆகையால், உடலில் உயிர் இருக்கும் போதே, இறைவனை நினைக்க வேண்டும் என்பதை,

**"மண்கலம் கவிழ்ந்தபோது வைத்து வைத்து அடுக்குவார்**

**வெங்கலம் கவிழ்ந்தபோது வேணும் என்று பேணுவார்**

**நம்கலம் கவிழ்ந்தபோது நாறும் என்று போடுவார்**

**எண் கலந்து நின்றமாயம் என்ன மாயம் ஈசனே"(1)**

என்னும் பாடல் வழி விளக்குகிறார். மனிதன் தன் உடலை விட, பிற பொருள்களின் மீது அளவுக் கடந்த பற்றினை வைத்துள்ளான். ஏனெனில், இந்த பொருள்கள் உடைந்தாலும், மீண்டும் பயன்பாட்டிற்கு உதவுகின்றன. ஆனால் இந்த உடலில் உயிர் பிரிந்தவுடன், நாற்றம் எடுக்கும் நிலைக்கு உள்ளாகிறது. எனவே உயிர் பிரிந்த பின்னர் உடலை வைத்திருந்து பேண முடியாது என்கிற யதார்த்த நிலையை சுட்டுகிறார். ஆகவே, உயிர் உடலில் கூடியிருக்கும் போதே, இறைவனை நினைக்க வேண்டும் என்று சிவவாக்கியர் உடலின் நிலையாமையைப் பற்றி கூறியுள்ளார்.

**உள்ளத்தில் இறைவன்**

புறக்கோயிலை மட்டுமே தான், இறைவன் வாழும் இடமாகக் கருதுகிறான் மனிதன். ஆனால் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, ஒருநாள் புறக்கோயிலுக்கு அழிவுண்டு என்பதை மறந்து விடுகிறான். ஆகவே, மனிதன் அழியகூடிய புறக்கோயிலை விடுத்து, என்றும் அழியாத அகக்கோயிலை வணங்குவதே சாலச் சிறந்தது என்னும் கருத்தினை,

**"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா**

**கோயிலும்குளங்களும் கும்பிடும் குலாமரே**

**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே**

**ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே"(2)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிவுறுத்துகிறார். புறக்கோயிலைத் தேடிச் செல்லும் மனிதர்களே, நீங்கள் உங்களது அகக்கோயிலை நாடுங்கள் என்று சிவவாக்கியர், மனித உள்ளத்தில் தான் இறைவன் இருக்கிறான் என்று வலியுறுத்திப் பாடியுள்ளார்.

**தெய்வம் ஒன்றே**

மனிதன் தனது சுயத் தேவைக்காக மதத்தினை உருவாக்கினான். அந்த மதத்தில் பல தெய்வங்களை உள்ளடக்கி மனிதத்தை மறந்தான். மனிதத்தை மறந்ததால் மதவெறி உருவாயிற்று. இதனால் தேவையற்ற உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. ஆனால் உண்மையில் இறைவன் ஒருவனே ஆவான். அவன் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவன் என்ற கருத்தினை,

**"நாழிஉப்பு நாழி உப்பு நாழியான வாறுபோல்**

**ஆழியோனும் ஈசனும் அமர்ந்து வாழ்ந்திருந்திடம்**

**எருதில் ஏறும் ஈசனும் இயங்கு சக்ரதரனையும்**

**வேறு வேறு பேசுவார் வீழ்வர் வீண்நரகிலே"(3)**

என்ற பாடலில் சிவவாக்கியர், உப்பும், நீரும் வேறாக இருக்கின்றன. இரண்டையும் ஒன்றாக கலக்கும் போது, இரண்டும் ஒன்றாகவே கலந்து விடுகின்றன. அதுபோல அரியும், சிவனும் ஒருவருள் ஒருவராகவே இருக்கின்றனர் என்பதைக் கூறி தெய்வம் ஒன்றே என்ற கருத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**சாதி ஒன்றே**

மழைநீரானது விழுகின்ற இடத்தினைப் பொறுத்து ஏரி, குளம், ஆறு, கிணறு, குட்டை, கடல் என்ற பலபெயர்களால் அழைக்கப்படுகின்றது. ஆனால் இவை எல்லாவற்றிக்கும் அடிப்படை நீர் மட்டும் தான். அதுபோலவே, மனிதனால் உருவாக்கப்பட்ட இனவெறிக் கொண்ட சாதியும் ஒன்று தான் என்பதை,

**"சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ**

**பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ**

**காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றலோ**

**சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே?"(4)**

என்ற பாடலில் உரைத்துள்ளார். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்தையும் அழைக்கும் போது ஐம்பூதங்கள் என்று தான் அழைக்கின்றோம். பல ஆபரணங்கள் செய்யத் தங்கம் மட்டுமே அடிப்படையாக உள்ளது. அதனைப் போல சாதிகள் அனைத்தும் ஒன்று தான் என்பதை வலியுறுத்தி, சிவவாக்கியர் சாதியற்ற சமுதாயம் அமைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**தர்மத்தை வலியுறுத்துதல்**

நாள்தோறும் மனிதன் மகிழ்ச்சியாக வாழ ஆசைப்படுகிறான். அதனால் தேவையற்ற பொருட்களை அதிகமாக சேகரித்துக் கொள்கிறான். பின்பு இறப்பு நிலை அடையும் போது, இந்தப் பொருட்களால் எந்த பயனும் அவனுக்கு கிடைப்பதில்லை. ஆகையால் அவன் உயிரோடு உள்ள நிலையிலே, ஏழை எளிய மக்களுக்கு உதவுதல் வேண்டும். ஏனென்றால், மகிழ்ச்சி என்பது நம்மால் பிறரடையும் மன நிறைவு தான் என்பதை,

**"ஆடுநாடு தேடினு ஆனை சேனை தேடினும்**

**கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ**

**ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்**

**சாடிவிட்ட குதிரைபோல தர்மம்வந்து நிற்குமே"(5)**

என்னும் பாடலில் எடுத்துரைக்கிறார். கோடி கோடியாகச் சேர்க்கப்பட்ட செல்வங்களை விட, பசித்தோர்க்கு கொடுக்கின்ற சிறு உணவில் தான் தர்மம் இருக்கின்றது என்று தனிமனித தர்மத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**ஆசையை விலக்குங்கள்**

மனிதன் ஆடம்பரமான முறையில் வாழ்வதை விரும்புகிறான். அந்த எண்ணத்தின் மூலம் அவனின் மனதில் ஆசையின் தூண்டுதல் உருவாகிறது. அதனால் பிறரின் பொருட்களை மனிதத் தன்மையின்றி அபகரிக்கத் தொடங்கிவிடுகிறான். இதன் மூலம் நிகழும் தீமையினை அகற்றுவதற்கு, அவன் தெய்வ வழிப்பாட்டினை மேற்கொள்கிறான். அந்த தெய்வ வழிப்பாட்டின் மூலம் அவனுக்கு, எந்தப் பயனும் நிகழப் போவதில்லை என்ற கருத்தினை,

**"ஆசைகொண்டு அனுதினமும் அன்னியர் பொருளினை**

**மோசம் செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்**

**பூசையோடு நேமநிட்டை பூரிக்கச் செய் பாதகர்**

**காசினியில் ஏழுநரகைக் காத்திருப்பது உண்மையே"(6)**

என்ற பாடலின் வாயிலாக வலியுறுத்துகிறார். பிறர் பொருட்களை நேர்மையற்ற முறையில் அடைய நினைப்பவர்கள், கடுமையான முறையில் தண்டிக்கப்படுவார்கள். எனவே பிறர் பொருளின் மீதுள்ள ஆசையினை அகற்றும்படி கூறிகிறார் சிவவாக்கியர். தினந்தோறும் மலர்கள் பூக்கின்றன. ஆனால் வாடிய மலர்கள் ஒருபோதும் மீண்டும் மலர்வதில்லை. பசுவின் மடியில் இருந்து கறந்தப் பால் மீண்டும் மடிக்குச் செல்வதில்லை. மோரில் இருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் மீண்டும் மோர் ஆவதில்லை. அதுபோலத் தான் நம் உடம்பை விட்டு உயிர் பிரிந்த நிலையில், மீண்டும் உயிர் வந்து சேராது என்ற உண்மையை வலியுறுத்தி பிறவாநிலை அடைய நன்னிலை வாழ்வை மேற்கொள்ள வலியுறுத்துகிறார்.

**“கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா**

**உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா**

**விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டுபோய் மரம்புகா**

**இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே”(7)**

என்னும் சிவவாக்கியரின் பாடல் மேற்குறித்த கருத்தை விளக்கி நிற்பதைப் பார்க்கிறோம். ஆகவே, உடம்பில் உயிர் உலாவிக் கொண்டிருக்கும் போதே, யோகநெறியில் தியானம் செய்து, பிறவாநிலையினை அடையுமாறு சிவவாக்கியர் வலியுறுத்துகிறார் என்பதை நாம் உணரமுடிகிறது.

**முடிவுரை**

சிவவாக்கியர் மானுட வாழ்விற்கு சிறந்த வழிக்காட்டியாக விளங்குகின்றார். அவரால் வகுக்கப்பட்ட நெறியானது கரடு முரடாக இருந்தாலும், துன்பம் அதிகம் இல்லாத நேர்வழியாகும். இவரது பாடல்கள் யாவும் இருளில் தடுமாறும் இதயங்களுக்கு கலங்கரை விளக்காய் இருக்கின்றது. மேலும் இவரின் பாடல்கள் உண்மைத் தன்மையையும், பகுத்தறிவுடன் கூடிய, அதர்மத்தை எடுத்தெறிந்து பேசும் இயல்பையும், கொண்டவையாக உள்ளதைக் காண முடிகின்றது. ஆகவே, சிவவாக்கியர் கூறியுள்ளக் கருத்துக்களைப் பின்பற்றி வாழ்வில் மனிதத்தை நிலைநாட்டுவது நமது கடமையாகும்.

**சான்றெண் விளக்கம் :**


1. வித்வான். நா.தேவநாதன் (தொ.ஆ) சித்தர் பாடல்கள் - பா – 78, ப – 125
2. மேலது பக்கம் - பா – 33, ப – 119
3. மேலது பக்கம் - பா – 53, ப – 121 – 122
4. மேலது பக்கம் - பா – 45, ப – 120
5. மேலது பக்கம் - பா – 235, ப – 144
6. மேலது பக்கம் - பா – 512, ப – 176
7. மேலது பக்கம் - பா – 46, ப – 121